
கல்கி



ALKI நவம்பர் 22, 1953 4 அணா


நாள் முழுவதும்
காலை வேளையில்
புத்துணர்ச்சி
பிற்பகலில்
அளிக்க...
இரவில்
Himalaya Bouquet
குளுமையான, நறுமணம் கொண்ட
ஹிமாலயா புக்கே
பௌடர்களை
உபயோகியுங்கள்
ஹிமாலயா புக்கே ஸ்னோ எல்லா சீதோஷ்ணநிலைகளிலும்
சருமத்தைப் பாதுகாக்கிறது.

கல்கி பொருளடக்கம்

மலர் 13 | இதழ் 17 — 1953 நவம்பர் 22 — விஜய ஸ்ரீ கார்த்திகை 7

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.

கல்கி

மலர் 13

தமிழ்த் திருநாடு தன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. —பாரதியார்

இதழ் 17

அமெரிக்காவில் ஜனாப் குலாம்

பாகற்காயைப் பூனை கொண்டு போய் விட்டது என்றால், கேட்பவர்கள் நம்புவார்களா? நம்பவே மாட்டார்கள்

இந்தியாவில் பிரதம சேனாதிபதியாக இருந்த ஜெனரல் ஆகின்லெக் பல மாதங்களுக்கு முன் பாகிஸ்தானுக்கு விஜயம் செய்தார்; வெகு அக்கறையுடன் அங்குள்ள இராணுவ கேந்திர ஸ்தானங்களை யெல்லாம் பார்வை யிட்டார்.

பாகிஸ்தானில் அவர் சுற்றுப் பிரயாணம் செய்வதன் மர்மம் என்ன என்ற கேள்வி அப்போது எழுந்தது.

அந்த நாட்டில் நாம் கம்பளி உற்பத்தித் தொழிலை ஆரம்பிக்க உத்தேசித்திருப்பதாக ஜெனரல் ஆகின்லெக் அறிவித்தார். அதற்குத் தகுதியான இடம் எது என்பதை ஆராய்ந்து வருவதாகச் சமாதானம் கூறினார்.

அதன் பிறகுதான், மத்திய கிழக்குப் பிரதேச இராணுவக் கூட்டு ஒப்பந்தத்தில் பாகிஸ்தானும் சேரத் திட்டமிட்டிருக்கிறது என்ற செய்தி வெளியாயிற்று.

இப்போது மற்றொரு விபரீதமான செய்தி வெளியாகி யிருக்கிறது.

சமீப காலமாக அமெரிக்க இராணுவத்தைச் சேர்ந்த உயர்தர அதிகாரிகள் பாகிஸ்தானுக்கு விஜயம் செய்து, அங்குள்ள இராணுவத் தலைமை ஸ்தாபனத்தைப் பார்வை யிட்டார்கள்.

சில தினங்களுக்கு முன் பாகிஸ்தான் பிரதம சேனாதிபதி ஜெனரல் அயூப்கான் அமெரிக்காவுக்குச் சென்றிருந்தார்.

பிறகு அவரும் பாகிஸ்தான் இராணுவ மந்திரி கர்னல் இஸ்கந்தர் மிர்சாவும் துருக்கிக்குச் சென்றார்கள். பாகிஸ்தான்-துருக்கி இராணுவ ஒப்பந்த விஷயமாகவே அவர்கள் துருக்கிக்குச் சென்றதாக வதந்திகள் உலவின. அங்கு அவர்கள் பிரிட்டிஷ், அமெரிக்க இராணுவ அதிகாரிகளுடன் அளவளாவியதாகச் செய்திகள் வெளியாயின.

இப்போது பாகிஸ்தான் கவர்னர் ஜெனரல் ஜனாப் குலாம் முகமது அமெரிக்காவுக்குச் சென்றுள்ளார். அமெரிக்க ஜனாதிபதி ஜெனரல் ஐசன்ஹோவருக்கும் ஜனாப் குலாம் முகமதுவுக்கும் முக்கியமான பேச்சு வார்த்தைகள் நடந்து வருவதாகச் செய்திகள் கூறுகின்றன.

சில மாதங்களுக்கு முன் பாகிஸ்தானில் ஏற்பட்ட உணவுப் பஞ்சத்தைச் சமாளிப்பதற்காக அந்த நாட்டுக்கு அமெரிக்கா ஏராளமாகக் கோதுமை அனுப்பி உதவியது.

மேற்படி உதவிக்காக ஜனாப்குலாம் முகமது ஜெனரல் ஐசன்ஹோவருக்கு நன்றி செலுத்தினாராம். அதற்குப் பிரதியாகப் பாகிஸ்தானிலிருந்து உயர்ந்த சிந்தி பொலி காளைகளை அனுப்பி வைப்பதாகக் குலாம் முகமது அறிவித்தாராம்.

“சிந்தி காளை மாடுகளை உங்களுக்கு வெகுமதி அளிக்கப் போகிறோம்” என்ற செய்தியை அறிவிப்பதற்காகப் பாகிஸ்தான் கவர்னர் ஜெனரல் உள்நாட்டில் தமது அலுவல்களை விட்டுவிட்டு அமெரிக்காவுக்கு நேரில் செல்ல வேண்டிய அவசியமில்லை!

அவர் அமெரிக்கா சென்றிருப்பதன் உண்மையான நோக்கத்தை அமெரிக்கா, பாகிஸ்தான் அதிகார வட்டங்களில் மழுப்பி வருகிறார்கள். ஆனால் பத்திரிகைச் செய்திகளிலிருந்து பாகிஸ்தானின் நோக்கம் என்ன என்பது அம்பலமாகி விட்டது.

பாகிஸ்தானில் அமெரிக்கா இராணுவ, கடற் படைத் தளங்களை அமைத்துக் கொள்ள உத்தேசித்திருக்கிறதாம். அதற்குப் பிரதியாக, பாகிஸ்தான் இராணுவத்தைப் பலப்படுத்த உதவி புரிவதற்கு அமெரிக்கா தயாராக இருக்கிறதாம்.

ஐரோப்பாவிலிருந்து துருக்கி வரையில் அமெரிக்காவுக்குப் பல இராணுவத் தளங்கள் இருக்கின்றன. ஆனால் துருக்கியிலிருந்து பிலிப்பைன் தீவுகள் வரையில் தளங்கள் எதுவும் இல்லை. பாகிஸ்தானில் அமெரிக்காவுக்கு இராணுவத் தளங்கள் கிடைத்து விட்டால் அந்தக் குறை தீர்ந்து விடும். பிறகு எந்தத் திசையிலிருந்தும் ருஷ்யாவை அமெரிக்க விமானங்கள் தாக்குவது எளிதாகி விடும் என்று அமெரிக்க இராணுவத் தலைவர்கள் கருதுகிறார்கள்.

எகிப்து போன்ற நாடுகள் தங்கள் பாதுகாப்புக்காகக் கூடத் தங்கள் பூமியில் அன்னிய நாட்டினரின் தளங்கள் இருப்பதை விரும்பவில்லை; அவ்விதம் இருப்பதால் தங்களுடைய சுதந்திரம் பாதிக்கப்படும் என்று கருதுகின்றனர்; அத்தகைய தளங்களை ஒழிப்பதற்காகப் பல வருஷங்களாகப் போராடி வருகின்றனர்.

அப்படியிருக்க, பாகிஸ்தான் தலைவர்கள் தங்கள் நாட்டில் அன்னியர் இராணுவத் தளங்களை அமைத்துக் கொள்ள இசைவது மோசமான காரியம் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

இது பாகிஸ்தான் தலைவர்களின் தீர்க்க திருஷ்டிக் குறைவைக் காட்டுகிறது; அத்துடன் அமெரிக்காவின் உலக ஆதிபத்திய ஆசைக்கும் அறிகுறியாக இருக்கிறது.

பாகிஸ்தானுடன் அமெரிக்கா இராணுவ ஒப்பந்தம் செய்து கொள்ள முற்படுவதால், உலக சமாதானத்தை உருக்குலைப்பதற்கான பல பிரச்னைகள் எழும் என்பதில் சந்தேகம் இல்லை.

புதிய மந்திரிகள்

ராஜாஜி சென்ற ஆண்டின் ஆரம்பத்தில் மந்திரி சபை அமைத்தபோது, தேர்தலில் தப்பிப் பிழைத்துச் சட்டசபைக்கு வந்தவர்களுக்குள்ளே திறமையும் நேர்மையும் உள்ளவர்களைப் பார்த்து மந்திரிகளாகப் பொறுக்க வேண்டியதாயிருந்தது. பொறுக்கப்பட்ட மந்திரிகள் பல துறைகளில் தகுதி வாய்ந்தவர்கள்தான். ஆனால் நிதி மந்திரி ஸ்ரீ சுப்பிரமணியத்தைத் தவிர மற்றவர்கள் பொது ஜனத் தொடர்பு வைத்துக் கொள்வதிலும் பொது ஊழியர்களுடன் கலந்து பழகுவதிலும் அவ்வளவாக ஆற்றல் பெற்றிருக்கவில்லை.

ஜனநாயக அரசியலில் மந்திரிமார்கள் தத்தம் இலாகாக்களை அந்தந்த இலாகா உத்தியோகஸ்தர்களின் மூலம் திறமையாக நிர்வகித்தால் மட்டும் போதாது.

மற்றொரு பக்கத்தில் பொது மக்களின் தொடர்பை வளர்த்து வரவேண்டும். பொது ஊழியர்கள் மூலமாகவும் ஜனப் பிரதிநிதிகளின் மூலமாகவும் பொது மக்களின் உண்மையான குறைகளை அறிந்து தக்க பரிகாரங்களைத் தேடித் தர வேண்டும்.

ஜனப்பிரதிநிதிகள் நேர்மைக்கு மாறான காரியங்களையும் முறையற்ற கோரிக்கைகளையும் கொண்டு வந்தால் அவற்றைக் கண்டிப்பாக நிராகரிக்கும் மனோதிடம் மந்திரிகளுக்கு வேண்டும்.

ஆனால் நியாயமான பொதுஜனக் குறைகளை யெல்லாம் உடனுக்குடன் கவனித்துத் தக்க பரிகாரம் செய்வதற்கும் மந்திரிகளுக்கு ஊக்கமும் உறுதியும் வேண்டும்.

புதிதாக நியமிக்கப்பட்ட மந்திரிகளான கனம் பக்தவத்ஸலமும் கனம் ராஜாராம் நாயுடுவும் மேற்கூறிய ஆற்றல்கள் பூரணமாக வாய்ந்தவர்கள். பொது ஜனங்களிடம் தொடர்பு கொள்ளும் முறையை நன்கு அறிந்தவர்கள். சட்ட சபைப் பிரதிநிதிகளுடனும், பொதுத் தொண்டில் ஈடுபட்ட காங்கிரஸ் ஊழியர்கள்—சமூக ஊழியர்களுடனும் தாராளமாய்க் கலந்து பழகக் கூடியவர்கள்.

திறப்பு விழாக்களையும் — மூடு விழாக்களையும் நடத்திவிட்டு, உத்தியோகஸ்தர்களிடம் க்ஷேம லாபங்களை விசாரித்து விட்டு, பெரிய மனிதர்களுக்குப் பேட்டி கொடுத்து விட்டுத் திரும்பி வந்து விடக் கூடியவர்கள் அல்ல.

பழைய மந்திரிகளில் ஸ்ரீ சி. சுப்பிரமணியத்திடமும் புதிய மந்திரிகளான கனம் பக்தவத்ஸலம்—கனம் ராஜாராம் அவர்களிடமும் பொதுஜன ஊழியர்கள் தாராளமாய் அணுகலாம். சட்ட சபைப் பிரதிநிதிகள் தத்தம் தொகுதி மக்களின் முன்னேற்றத்துக்கான காரியங்களைத் தங்கு தடையின்றிச் சொல்லலாம்.

எல்லாக் காரியங்களுக்கும் ராஜாஜியைத் தேட வேண்டியதுமில்லை. அவர் தள்ளாத வயதில் தாங்க முடியாத இராஜ்ய பாரத்தை வகித்து வருகிறார் என்பதை உணராமல் மனக்குறைப் பட வேண்டிய அவசியமும் இனி இல்லை.

மந்திரிசபை பொது ஜனத் தொடர்பு கொள்ள வேண்டிய அவசியத்தையும் ஓரளவு மனத்தில் கொண்டே ராஜாஜி மேற்படி இரு புது மந்திரிகளையும் தேர்ந்தெடுத்து நியமனம் செய்தார் என்று வைத்துக் கொள்ளலாம்.

இந்த நிலையில், புதிய மந்திரிகள் நியமனத்துக்குப் பிறகு எம். எல். ஏ.க்களில் சிலர் புகார்ப் படலத்தையும் — கையெழுத்துக் காண்டத்தையும் ஆரம்பித்திருப்பது விந்தையாயிருக்கிறது.

அந்த எம். எல். ஏ.க்களின் போக்கு எப்படியானாலும், கனம் பக்தவத்ஸலமும் கனம் ராஜாராம் நாயுடுவும் தாங்கள் ஏற்றுக் கொண்ட பொறுப்பைத் திறம்பட நிறைவேற்றி மந்திரி சபையுடன் பொது ஜனத் தொடர்பை நிலைநாட்டிக் கொண்டு வருவார்கள் என்று நம்புகிறோம்.

கட்டாயக் கையெழுத்துப் படலம்

சுமார் ஒரு மாதத்துக்கு முன்புதான் ராஜாஜி காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தைக் கூட்டுவதாகச் சொன்னார். தம்முடைய தலைமையைக் காங்கிரஸ் கட்சியார் விரும்பவில்லை யென்று தெரிந்தால் தாமும் விலகிக் கொள்ள விரும்புவதாகக் கூறினார்.

இங்கே தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவரும் அங்கே பண்டித ஜவாஹர்லால் நேருவும் கட்சிக் கூட்டம் அவசியமில்லை யென்று தெரிவித்தபடியால் அந்த யோசனையைக் கைவிட்டார். அதாவது உடனே கட்சிக் கூட்டத்தைக் கூட்டும் யோசனையைக் கைவிட்டார்.

எப்படியும் டிசம்பர் மாதத்தில் சட்டசபை கூடுவதற்கு முன்னால் கட்சிக் கூட்டம் கூட்டியே ஆகவேண்டும். டிசம்பர் மீ 14உ கூட்டம் வைத்திருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

எனவே, ராஜாஜியின் தலைமை வேண்டியதில்லை யென்று கருதும் எம். எல். ஏ.க்களுக்குத் தாராளமான ராஜபாட்டை இருக்கிறதல்லவா!

டிசம்பர் மீ 14உ கூடும் கூட்டத்தில் தாராளமாக அவர்கள் தங்கள் கருத்தை வெளியிடலாம். ஒருவர் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரலாம். அதைப் பெரும்பாலோர் ஆதரித்தால்,

ராஜாஜி அவர்கள் விலகியே தீர வேண்டியதாகும் அல்லவா! அதற்கு அப்புறமும் அவர் தலைமைப் பீடத்தில் உட்கார்ந்திருக்க முடியுமா!

இத்தகைய இராஜ பாட்டை இருக்கும்போது சில எம். எல். ஏ.க்கள் அவசரம் அவசரமாக இப்போது கையெழுத்துப் படலம் தொடங்கிய காரணம் என்ன! ஒன்றரை மாதத்திற்குள் என்ன மூழ்கிப் போய் விடும் என்று எண்ணிக் கையெழுத்து வாங்கத் தொடங்கினார்கள்!

இதன் மர்மம் என்னவென்பதைக் கனம் பக்தவத்ஸலம் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசுகையில் வெளிப்படுத்தி யிருக்கிறார்.

செங்கற்பட்டு ஜில்லாவைச் சேர்ந்த ஒரு காங்கிரஸ் எம். எல். ஏ. விடம் கையெழுத்து வாங்கும் முயற்சியில் ஈடுபட்ட சிலர் போய் உட்கார்ந்து கொண்டு, "கையெழுத்துப் போட்டால் தான் ஆயிற்று" என்று வற்புறுத்தி வாங்கிக் கொண்டார்களாம். இதை அந்த எம். எல். ஏ. பின்னால் வருத்தத்துடன் தெரியப் படுத்தினாராம்.

கையெழுத்துப் படலத்தின் இரகசியம் இப்போது தெரிகிறது அல்லவா!

கட்சிக் கூட்டத்தில் பிரேரணை கொண்டு வந்தால் அவரவர்கள் இஷ்டப்படி வோட்டுக் கொடுப்பார்கள். ஒருவரை யொருவர் வற்புறுத்திக் கட்டாயப் படுத்த முடியாது.

ஆனால் முன்னாலேயே கையெழுத்து வாங்க ஆரம்பித்தால் நாலுபேர் சென்று ஒருவரை மடக்கிக் கொள்ளலாம். பல பல உபாயங்களினால் கையெழுத்துப் போடச் செய்யலாம். பிற்பாடு "கையெழுத்துப் போட்டு விட்டுப் பின் வாங்கினால் ஜாக்கிரதை!" என்று பயமுறுத்தலாம்.

இம்மாதிரிதான் சுமார் ஐந்தாறு பேர் கோஷ்டியாகச் சென்று தனித்தனியாக எம். எல். ஏ.க்களை வளைத்துக் கொண்டு சுமார் நாற்பது பேரிடம் கையெழுத்து வாங்கி யிருப்பதாகத் தெரிகிறது.

இந்தக் கையெழுத்துக்களினால் மோசம் ஒன்றும் வந்து விடாது. எண்பது பேருக்குமேல் கையெழுத்துப் போட்டு ராஜாஜி விலகிக் கொள்ளும்படி கேட்டாலும்தான் என்ன! ராஜாஜி நிரந்தரமாக முதன் மந்திரியாக இருக்க முடியுமா! ஒரு நாள் இல்லாவிட்டால் ஒருநாள் விலகிக் கொள்ள வேண்டியவர் தானே!

ஆனால் இந்தக் கையெழுத்து வாங்கும் ஆசாமிகளைப் போன்றவர்களிடம் அரசாங்கம் சிக்கிக் கொண்டால், நம் பொது வாழ்வின் கதி என்ன என்பதைச் சிந்தித்துப் பார்க்கக் கோருகிறோம்.

ஏன்! இவர்கள் எம். எல். ஏ.க்களிடம் கட்டாயப்படுத்திக் கையெழுத்து வாங்கியதுபோல் மந்திரிமார்களிடமும் தாங்கள் காட்டிய இடத்தில் கையெழுத்து வாங்கப் பார்ப்பார்கள்.

சர்க்கார் உத்தியோகஸ்தர்களையும் அம்மாதிரி கட்டாயப் படுத்துவார்கள் என்பது திண்ணம்.

இவர்களே மந்திரிகளாக வந்து விட்டாலோ கேட்க வேண்டியதில்லை. அரசாங்க உத்தியோகஸ்தர்களின் கதி அதோகதிதான்; மக்களின் உரிமைகள் காற்றிலே பறக்க வேண்டியதுதான்; தர்மமும் நியாயமும் தூக்கு மாட்டிக் கொள்ள வேண்டியதுதான்.

அம்மாதிரியெல்லாம் ராஜாஜி மந்திரி சபையின் கீழ் செய்ய முடியவில்லையே என்பதற்காகத்தான் இந்தப் புண்ணியவான்கள் இப்படி ஒரு கையெழுத்து வாங்கும் முயற்சி ஆரம்பித்தார்கள்.

இவர்களிடம் அரசாங்கமே சிக்கிக் கொண்டால் அப்புறம் தமிழ் நாட்டைத் தெய்வத்தினால்கூடக் காப்பாற்ற முடியுமா என்பது சந்தேகம்தான்.

பத்திரிகைகள் மீது புகார்

ஸ்ரீ டி. புருஷோத்தம முதலியார் எம். எல். ஸி. கட்டாயக் கையெழுத்துப் படலத்தில் வெகுவாக சிரத்தை எடுத்துக் கொண்டவர்களில் ஒருவர் என்று அறிகிறோம்.

இவர் நம் தேசியப் பத்திரிகைகளின்மீது ஒரு புகார் கூறியிருக்கிறார்.

"ராஜாஜிக்கும் சட்டசபை அங்கத்தினருக்கும் ஏற்பட்ட தகராறு ஒரு குடும்ப விவகாரம். அதைத் தேசியப் பத்திரிகைகளே பிரபலப்படுத்தி யிருப்பது வருந்தத் தக்கது" என்று சொன்னதாகப் பத்திரிகைகளில் வெளியாகி யிருக்கிறது.

காங்கிரஸ் குடும்பத்தில் ஸ்ரீ புருஷோத்தம முதலியார் கடைசி கடைசியாகச் சேர்ந்தவர். சென்ற பொதுத் தேர்தலுக்குச் சற்று முன்பு வரையில் இவர் முனிஸிபாலிடிகளில் எக்ஸிக்யூடிவ் ஆபீஸராக உத்தியோகம் பார்த்து வந்தார். எம். எல். ஸி. தேர்தலில் நின்று ஜயித்துப் பிறகு காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தார்.

காங்கிரஸில் இன்று சேர்ந்தவர்களுக்குக் கூட நாற்பது வருஷங்களாகக் காங்கிரஸ் தொண்டு செய்வோருக்கு உள்ள உரிமைகள் உண்டு. அதுவே காங்கிரஸின் பெருமை. ஆகையால் ஸ்ரீ புருஷோத்தம முதலியார் ராஜாஜியை வெளியேற்றுவதில் சிரத்தை காட்டி யிருந்தால், அதற்குத் தாராளமாக அவர் உரிமை பெற்றவரே.

ஆனால் தேசியப் பத்திரிகைகளின்மீது அவர் புகார் கூறுவது மட்டும் அவ்வளவு பொருத்தமாகத் தோன்றவில்லை.

எம். எல். ஏ.க்கள் ராஜாஜிக்கு எதிராகக் கையெழுத்து வாங்கி வருகிறார்கள் என்ற செய்தியை முதன் முதலில் "மெட்ராஸ் மெயில்" "டைம்ஸ் ஆப் இந்தியா" முதலிய பத்திரிகைகளும் காங்கிரஸுக்கு விரோதமான தமிழ்ப் பத்திரிகைகளுந்தான் வெளியிட்டன.

இந்தப் பத்திரிகைகளுக்கு அச்செய்தி எப்படிக் கிடைத்தது! கையெழுத்து வாங்கியவர்களோ, கையெழுத்துப் போட்டவர்களோதான் இதைப் பற்றிச் சொல்லி யிருக்க வேண்டும்.

கையெழுத்து ஆன தொகையைச் சற்று மிகைப் படுத்தி ஒட்டிக்கு இரட்டி ஆக்கியும் விவரம் தந்திருக்க வேண்டும்.

எதற்காகத் தெரியுமா!

கொஞ்சம் சுவர்மேலே பூனைகளாயுள்ளவர்கள், ராஜாஜி விலகப் போவது நிச்சயம் என்று எண்ணித் தங்களுடன் சேர்ந்து கொள்ளட்டும் என்பதற்காகத்தான்.

மதுரையில் வெளியாகி வரும் "தமிழ் நாடு" என்னும் பத்திரிகையில் காங்கிரஸ் எம். எல். ஏ. ஒருவர் கூறியதாகத் தினந்தோறும் இரண்டு பத்தி விவரங்கள் சிலநாள் தொடர்ந்து வெளியாகி வந்தன. எல்லாம் "ராஜாஜிக்கு எதிராகப் பலம் திரண்டு விட்டது. ஐம்பதுக்கு மேல் கையெழுத்து ஆகி விட்டது. ராஜாஜியைப்

போகச் செய்வது நிச்சயம்" என்னும் கருத்துடைய செய்திகள்தான்.

இந்த விவரங்களைக் கையெழுத்து வாங்குவதில் ஈடுபட்டவர்கள் ஏன் மறுக்கவில்லை!

இவர்களில் ஒருவரேதான் மேற்படி விவரங்களைத் தந்திருக்க வேண்டும். இப்படித் தீர்த்து போன விஷயமாகப் பத்திரிகைகளில் விவரம் வெளியானால், எம். எல். ஏ.க்களில் பெரும்பாலோர் ஜயிக்கப்போகிற கட்சி என்று நம்பித் தங்களுடன் சேர்ந்து விடுவார்கள் என்ற எண்ணத்தில்தான்.

அரசியல் உலகத்தில் எப்படியாவது அதிகாரத்தைக் கைப்பற்றிவிட வேண்டும் என்று ஆசை கொண்டவர்கள் இம்மாதிரி முறைகளை அனுசரிப்பது வியப்பு அடைய வேண்டிய காரியம் அல்ல.

ஆனால் தேசியப் பத்திரிகைகளின் மீது ஸ்ரீ புருஷோத்தம முதலியார் புகார் கூறியதை மட்டுந்தான் நாம் ஆட்சேபிக்கிறோம்.

எதிர்க் கட்சிப் பத்திரிகைகளில் வெளியான அபத்தமான விவரங்களை மறுதளித்துக் கூடிய வரை உண்மை நிலைமையைக் கண்டு பிடித்து வெளியிட்ட "தினமணி" "சுதேசமித்திரன்" "பாரததேவி" பத்திரிகைகளுக்குத் தமிழ் மக்கள் பெரிதும் நன்றி செலுத்த வேண்டும்.

எதிர்ப்பாளர்களின் உண்மை சொரூபத்தை வெளிப்படுத்தித் தமிழ் மக்களுக்கு மேற்படி பத்திரிகைகள் பேருதவி செய்திருக்கின்றன. நல்ல சமயத்தில் செய்த இந்த உதவியைத் தமிழ் மக்கள் பெரிதும் பாராட்டுகிறார்கள்.


அடுத்த முதன் மந்திரி யார்?

ராஜாஜியை முதன் மந்திரி பொறுப்பிலிருந்து அவசரமாகக் கிளப்பி அனுப்பிவிடச் சிலர் முயற்சி செய்து வருகிறார்கள் அல்லவா! ராஜாஜிக்குப் பதிலாக அவர்கள் யாரை முதன் மந்திரியாக்கத் திட்டமிட்டிருக்கிறார்கள் என்பது மர்மமாக இருந்து வருகிறது.

வடாற்காடு ஜில்லா எம். எல். ஏ. ஒருவர் அந்த மர்மத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்.

"இன்னும் இரண்டு மூன்று நாட்களில் ராஜாஜியின் பேரில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் நானே கொண்டு வரப் போகிறேன். ராஜாஜி வேண்டாம் என்று 90 எம். எல். ஏ.க்களுக்கு மேல் கையொப்பமிட்டுவிட்டார்கள். 'ராஜாஜியை விரட்டியானதும், முதல் காரியமாக நாங்கள் மதுவிலக்கை ரத்து செய்யப் போகிறோம்" என்று அந்தக் காங்கிரஸ் எம். எல். ஏ. கூறியதாகப் பத்திரிகை

எதிர்ப்பாளர் ஜாக்கிரதை!



பம்பாய் பிரதேச காங்கிரஸ் தலைவர் எஸ். கே. பட்டீல் திருவாங்கூர் — கொச்சி ராஜ்யத்துக்குச் சென்று பொதுத் தேர்தலில் காங்கிரஸ் வெற்றிக்கான முயற்சிகளில் ஈடுபடுவார் என்று தெரிய வருகிறது.

களில் வெளியாகி யிருக்கிறது. காந்தி ஜயந்திக் கூட்டம் ஒன்றில் இம்மாதிரி அவர் திருவாய் மலர்ந்தாராம்!

இதிலிருந்து ராஜாஜியை எதிர்க்கும் எம். எல். ஏ.க்கள் எவ்வளவு அபூர்வமான காங்கிரஸ் வாதிகள், — எவ்வளவு அற்புதமான காந்தி பக்தர்கள் என்பதைத் தெரிந்து கொள்ளலாம். ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது பழமொழி அல்லவா!

இவர்களுடைய முயற்சி வெற்றி பெற்றால், முதன் மந்திரி ஸ்தானத்துக்குப் பெயரளவிலே யார் வந்தபோதிலும், உண்மையாக அந்த ஸ்தானத்தை வகிக்கப் போகிறவர் மகாகனம் பொருந்திய சாக்ஷாத் மதுரைக்காரராகவே இருப்பார்!

தேசியத்திலும் காந்தீயத்திலும் சிறந்து விளங்கிய தமிழ்நாடு இப்படிப்பட்டவர்களுடைய ஆதிக்கத்தில் அகப்பட்டுக்கொண்டு திண்டாடும்படி விட்டு விடாமல் தமிழ் மக்கள் முன்னெச்சரிக்கையுடன் நடந்து கொள்வார்கள் என்று நம்புகிறோம்.

காங்கயத்தில் காங்கிரஸ் தோல்வி

காங்கயம் தொகுதியில் நடந்த உப தேர்தலில் காங்கிரஸ் அபேட்சகர் ஸ்ரீ ஏ. சுப்பராயக் கவுண்டர் பதினொரு வோட்டுக்களினால் தோல்வி அடைந்தார். இதன் காரணங்களைத் தெரிந்து கொள்ள அதிகப் பிரயாசைப்பட வேண்டியதில்லை.

“காங்கிரஸின் பெயரால் லாந்தர் கம்பத்தை நிறுத்தி வைத்தாலும் மக்கள் வோட்டுக் கொடுப்பார்கள்” என்று நம்பியிருந்த காலம் மலை ஏறி விட்டது. அந்தந்தத் தொகுதியில் உள்ள ஜனங்கள் ஒப்புக் கொள்ளக் கூடிய அபேட்சகர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். பிறகு, அவரை ஆதரித்தும், பொதுவாகக் காங்கிரஸ் திட்டங்களை ஆதரித்தும் அந்தத் தொகுதியில் தீவிரமாகப் பிரசாரம் செய்ய வேண்டும். அதிலும், எதிர்க் கட்சியாருக்குப் பிரசார பலம் அங்கு அதிகமாயிருந்தால், காங்கிரஸின் பிரசாரத்தை மும்மடங்கு அதிகமாக்க வேண்டும்.

காங்கயம் தொகுதி காங்கிரஸ் அபேட்சகரைப் பற்றிச் சாதகமாகவோ, பாதகமாகவோ நமக்கு ஒன்றும் தெரியாது. ஆனால் கோயமுத்தூர் ஜில்லாக் காங்கிரஸ் வாதிகளில் முக்கியமான சிலர், “அத் தொகுதியில் பழைய கோட்டைப் பட்டக்காரர் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரைக் காங்கிரஸ் அபேட்சகராகப் போட்டால் வெற்றி நிச்சயம்; இல்லாவிட்டால், பெரும் பிரயத்தனம் செய்தாக வேண்டும்” என்று சொன்னார்கள்.

ஒரு தொகுதியின் மக்களிடம் ஏற்கனவே செல்வாக்குப் பெற்றுள்ளவர்கள் காங்கிரஸ் அபேட்சகராக நிற்பதற்கு முன் வந்தால் அவர்களை நிராகரித்து வேறொருவரைப் பொறுக்குவது உசிதமல்ல.

ஏதோ, அபேட்சகரைப் பொறுக்கினார்கள். அப்புறம், தேர்தலில் வெற்றி பெறுவதற்குத் தக்க பிரசார சாதனங்களைப் பூரணமாக உபயோகித்தார்களா என்றால், அதுவும் இல்லை.

திருவாங்கூர் இராஜ்யத்தில் பொதுத் தேர்தல் நடைபெறப் போகிறது. அதற்காகக் காங்கிரஸ் சார்பில் பிரசார பலம் பிரமாதமாகத் திரட்டப்பட்டு வருகிறது. பம்பாயிலிருந்து தேர்தல் வேலையில் நிபுணர் எனப் பெயர் பெற்ற ஸ்ரீ எஸ். கே. பாடீல் இதற்காகவே திருவாங்கூருக்கு அனுப்பப்படுகிறார். அதேமாதிரி சென்னை இராஜ்யத்திலும் வெளியிலிருந்து சிறந்த பிரசங்கிகளும் பிரசாரகர்களும் அனுப்பப்படுகிறார்கள்.

ஆனால், காங்கயம் தேர்தலுக்கு இந்த இராஜ்யத்திலுள்ள பிரசார சாதனங்களையாவது உபயோகித்தார்களா? சென்ற பொதுத் தேர்தலில் ஸ்ரீ சிவஞான கிராமணியாரும் அவரிடம் பயிற்சி பெற்ற சகாக்களும் செய்த தொண்டு பிரசித்தமானது. காங்கயத்துக்கு ஸ்ரீ சிவஞான கிராமணியாரையும் அவருடைய சகாக்களையும் ஏன் பிரசாரத்துக்கு அழைக்கப் படவில்லை!

இவர்கள் போகட்டும். ஏனெனில், இவர்களைக் காங்கிரஸிலிருந்து வெளியேற்றுவதற்குப் பலமான முயற்சி நடந்து கொண்டிருப்பதை அறிந்திருக்கிறோம். ஆகையால் காங்கிரஸ் அபேட்சகரை நியமிக்கும்போது “சிவஞான கிராமணியார் முதலியவர்களைப் பிரசாரத்துக்கு அழைக்கக் கூடாது” என்ற நிபந்தனையின் பேரிலேயே அவரைப் பொறுக்கி எடுத்திருக்கவும் கூடும்.

ஆனால் அசல் காங்கிரஸ் வாதிகள் என்று எல்லாராலும் ஒப்புக் கொள்ளப்பட்டு வரும் ஸ்ரீ ஸி. பி. சுப்பையா, ஸ்ரீ எஸ். என். சோமயாஜுலு, ஸ்ரீ ஏ. வேதரத்தினம், மாயவரம் ஸ்ரீ ஜி. நாராயண சாமி நாயுடு முதலியவர்களையாவது அழைத்துப் போய் அத் தொகுதியில் பிரசாரம் செய்யச் சொல்லி யிருக்கலாமே! அதுவும் இல்லை.

ஸ்ரீ ஸி. பி. சுப்பையா கோயமுத்தூர் ஜில்லா வாசி. சென்ற வருஷத்தில் அந்த ஜில்லாவில் நடந்த பார்லிமெண்டு உப தேர்தலில், நீலகிரியைச் சேர்ந்த ஒருவர் காங்கிரஸ் அபேட்சகராக நியமிக்கப் பட்டிருந்தார். கம்யூனிஸ்டுகள் மிகப் பலமான முயற்சி செய்தனர். ஆயினும் ஸ்ரீ ஸி. பி. சுப்பையா அந்தத் தேர்தலைத் தாமே பொறுப்பு வகித்து நடத்தினார். தமிழ் நாடு முழுவதிலுமிருந்து நல்ல காங்கிரஸ் பேச்சாளிகளை, — ஸ்ரீ கிராமணியாரையும் அவர் சகாக்களையும் கூடத் தருவித்துப் பலமான பிரசாரம் நடத்தினார். காங்கிரஸ் அபேட்சகர் அத்தொகுதியில் அதிக பிரபலமோ, செல்வாக்கோ இல்லாதவரா யிருந்தும், அவர் மகத்தான வெற்றி யடைந்தார்.

காங்கயம் தேர்தலையும் ஸ்ரீ ஸி. பி. சுப்பையா விடம் ஒப்புவித்திருந்தால், நிச்சயமாக வெற்றி கிட்டி யிருக்கும். காங்கிரஸ் அபேட்சகர் பதினொரு வோட்டு வித்தியாசத்தில் தோல்வி அடையும்படி ஏற்பட்டிராது.

சமீபத்தில் வேறு சில தொகுதிகளில் காங்கிரஸ் அபேட்சகர்கள் தோல்வி அடைந்ததற்குக் காரணம் என்னவென்று ஆராய்ந்து பார்த்தாலும், பிரசார சாதனங்களைச் சரிவர உபயோகியாதது தான் என்பது தெரியவரும்.

“நன்றாகப் பிரசங்கம் செய்யத் தெரிந்தவர்கள் யாரும் காங்கிரஸுக்குள் இருந்தால் நமக்கு ஆபத்து,—அவர்களை எப்படியாவது வெளியேற்றி விடவேண்டும்” என்ற கொள்கை உடையவர்கள் தற்போதைய தமிழ் நாட்டுக் காங்கிரஸ் நிர்வாகிகள். அவர்கள் தங்கள் மனப்பான்மையை மாற்றிக் கொள்ள வேண்டும். இல்லாத வரையில், தமிழ் நாட்டில் கூடிய சீக்கிரத்தில் காங்கிரஸ் கடையைக் கட்ட வேண்டியதுதான்.

சேலம் மகாநாடு

காங்கயத்தில் காங்கிரஸ் அபேட்சகரைத் தோற்க அடித்து வெற்றி பெற்ற ஸ்ரீ கே. ஜி. பழனிசாமிக் கவுண்டர் என்பவர் பிரஜா—சோஷலிஸ்ட் கட்சியின் கொள்கைகளையும் திட்டங்களையும் ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டிருக்கிறார் என்று அறிகிறோம்.

காங்கிரஸ் அபேட்சகர் தோல்வியுற்ற போதிலும் சாதிய வாதிகளோ, குழப்ப வாதிகளோ வெற்றி பெறாமல், சோஷலிஸ்டு ஒருவர் வெற்றியடைந்தது பற்றி ஓரளவு நாம் திருப்தி அடையலாம்.

பாரத நாட்டில் ஜன நாயகம் நல்ல முறையில் நடப்பதற்குப் பலமான எதிர்ப்புக் கட்சி ஒன்று நல்ல முறையில் உருவாக வேண்டிய அவசியம் பற்றிப் பலமுறை எழுதியிருக்கிறோம்.

அத்தகைய எதிர்ப்புக் கட்சியானது அரசியல்-பொருளாதாரக் கொள்கைகளின் அடிப்படையில் அமைய வேண்டும்.

சாதி, வகுப்பு, மத அடிப்படைகளில் அமையும் எதிர்ப்புக் கட்சிகள் தேசத்தையும் மக்களையும் படுகுழிக்கே இழுத்துச் செல்லும்.

பலாத்காரக் குழப்பங்களை வேலைத் திட்டமாகக் கொண்ட அரசியல் கட்சிகளாலும் தேசம் நாசத்தையே அடையும்.

பலாத்கார முறைகளை நீக்கிப் பொருளாதார சமத்துவத் திட்டங்களைக் காங்கிரஸைக் காட்டிலும் தீவிரமாக அமுல் நடத்தும் நோக்கம் கொண்ட அகில இந்தியக் கட்சி 'பிரஜா-சோஷலிஸ்ட் கட்சி ஒன்றுதான்.

சமீப காலத்தில் வட நாட்டில் இக்கட்சியின் செல்வாக்குப் பெருகிக்கொண்டு வருகிறது.

தமிழ் நாட்டில் பல காரணங்களினால் அந்தக் கட்சி அவ்வளவாகப் பலம் பெற்று வளரவில்லை.

நவம்பர் 28, 29உ களில் சேலம் நகரில் தமிழ் நாடு பிரஜா-சோஷலிஸ்ட் கட்சியின் முதலாவது மகாநாடு ஆச்சாரிய கிருபளானியின் தலைமையில் நடைபெறும் என்று அறிகிறோம்.

இம்மகாநாடு வெற்றிகரமாக நடப்பதற்குப் பிரமாதமான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன என்றும், மகாநாட்டையொட்டிக் கலை அரங்கு-களி அரங்கு-சித்திரக் காட்சி ஆகியவையும் நடைபெறும் என்றும் அறிவிக்கப்படுகிறது.

சேலம் மகாநாடு வருங்காலத்தில் தமிழ் நாட்டில் பிரஜா-சோஷலிஸ்ட் கட்சி நன்கு வளர்ந்து பலம் பெறுவதற்குரிய காரியத் திட்டங்களை வகுக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

பொருளாதார சமதர்மத் துறையில் தேசம் தீவிரமாக முன்னேற வேண்டும் என்று கருதுகிறவர்கள் அனைவரும் பிரஜா-சோஷலிஸ்ட் கட்சிக்கு இயன்ற வரை ஆதரவளித்துப் பலம் திரட்டிக் கொடுத்து உதவி செய்ய வேண்டும்.

ஔவையாருக்குப் பெரியார் தோற்றார்!

ஔவை மூதாட்டியைக் குறித்துத் தமிழ் நாட்டில் பற்பல வரலாறுகள் வழங்குகின்றன. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்க காலத்துத் தமிழ்ப் புலவர்களுடன் ஔவை வாதாடி வெற்றி பெற்றிருக்கிறார். பிற்காலத்துக் கவிஞர்களான கம்பர், ஒட்டக்கூத்தர் ஆகியவர்களுடனும் ஔவையார் வாதப் போர் செய்து வெற்றி அடைந்ததாகவும் கர்ண பரம்பரைக் கதைகள் கூறுகின்றன.

சங்கப் புலவர்களின் சம காலத்தவராக இருந்தவர் ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிற்பட்ட கம்பர்—ஒட்டக்கூத்தர் காலத்திலும் இருந்திருக்க முடியாதாகையால், "ஔவை என்பவர் ஒருவர் அல்ல; இருவரோ பலரோ இருந்திருக்க வேண்டும்" என்று கூறுவோரும் உளர்.

ஔவை மூதாட்டியைக் குறித்து வழங்கும் வரலாறுகளை யெல்லாம் சரித்திரமாக ஒப்புக் கொள்ளுவதற்கில்லை. பழந் தமிழரின் மேன்மைக்கும் பண்பாட்டுக்கும் நாளடைவில் தமிழர்கள் உயிரும் உருவமும் கொடுத்து ஔவை மூதாட்டியென்னும் தெய்வமாக் கிழவியாக அமைத்துக் கொண்டார்கள் என்றே சொல்ல வேண்டும்.

ஔவையைப் பற்றி வழங்கும் வரலாறுகளின்படி அந்தத் தெய்வப் பெண்மணி பலமுறை பல பெரும்புலவர்களை வாதத்தில் வென்றதாக அறிகிறோம். "நெற்றிக் கண் காட்டினும் குற்றம் குற்றமே" என்று கூறிய புலவர் பரம்பரையைச் சேர்ந்த சங்கப் புலவர்கள் ஔவையாரிடம் படாத பாடு பட்டிருக்கிறார்கள். கவிச் சக்கரவர்த்தி என்று போற்றப்பட்ட கம்பர் பெருமானை ஔவை மூதாட்டி சக்கைப்போடு போட்டு,

"ஆரையடா சொன்னாய் அது?"

என்று கேட்டு, வாதப் போரில் தோற்கடித்து விட்டதாக ஒரு கதை வழங்குகிறது.

இவ்வாறு ஔவை மூதாட்டி பழையகாலத்தில் அடைந்த வெற்றிகளையெல்லாம் காட்டிலும் பெரியதொரு மகத்தான வெற்றியை நம் காலத்தில் பெற்று விட்டார். திராவிடக் கழகத்தின் தலைவரும் தந்தையுமான ஸ்ரீ ஈ. வே. ராமசாமிப் பெரியாரையே ஔவையார் தோற்க அடித்து விட்டதாகவும், அவரே அதை ஒப்புக் கொண்டதாகவும் தினப் பத்திரிகை ஒன்றில் செய்தி வந்திருக்கிறது. அச் செய்தி வருமாறு:—

" 'பிள்ளையார் உடைப்பு இயக்கத்தை நான் நடத்துகிற சமயத்தில் அவ்வையார் படம் வெளி வந்ததால்தான் என்னுடைய இயக்கத்தினால் ஏற்பட விருந்த சில ஆதாயங்களும் தடைப்பட்டன' என்று ஸ்ரீ ஈ. வே. ரா. குறிப்பிட்டார்."

பொதுவாகத் திராவிடக் கழக இயக்கத்தை ஆதரிக்கும் தினப் பத்திரிகையில் மேற்படி செய்தி வெளியாகியிருப்பதால், பெரியார் அவ்வாறு கூறியது உண்மையாக இருக்கும் என்று வைத்துக் கொள்ளலாம்.

"குட்டுப் பட்டாலும் மோதிரக் கையினால் குட்டுப்பட வேண்டும்" என்று ஒரு பழமொழி வழங்கி வருகிறது.

அதுபோல, ஸ்ரீ ஈ. வே. ராமசாமிப் பெரியார் தோற்றதாக ஒப்புக் கொண்டபோதிலும் தமிழ் மூதாட்டியாகிய ஔவை [illegible] தோற்றிருக்கிறார்! வெறும் அரசியல் வாதிகளிடம் தோற்பதைக் காட்டிலும் ஔவை மூதாட்டியிடம் தோற்பது பெருமை தருவதாகும் அன்றோ! ஆகையால் ஸ்ரீ ஈ. வே. ரா. தம் தோல்வியைக் குறித்து அதிகமாக வருத்தப்பட வேண்டிய அவசியமில்லை என்று கருதுகிறோம்.

பொன்னியின் செல்வன்

கல்கி

அத்தியாயம் 53

வானதியின் யோசனை

அருள்மொழி வர்மருக்கும் சிற்றரசர்கள் இருவருக்கும் நடந்த வாக்குவாதத்தைக் கேட்டுக்கொண்டு நின்ற குந்தவை தேவி இப்போது சற்று முன் சென்று, "தாத்தா! மாமா! வாசலில் நின்றே பேச வேண்டுமா? உள்ளே வாருங்கள்! உங்கள் பேச்சை மீறிப் பொன்னியின் செல்வன் ஒன்றும் செய்துவிட மாட்டான்" என்றாள்.

மலையமானும் வேளாரும் உள்ளே வந்தார்கள். இளைய பிராட்டியைப் பார்த்து, வேளார், "தாயே! இளவரசர் மட்டும் பட்டத்தை ஏற்றுக் கொள்ளச் சம்மதித்தால் ஒரு தொல்லையும் இல்லை. அவருடைய கட்டளையை நாங்கள் நிறைவேற்ற வேண்டியவர்களாவோம். சக்கரவர்த்தியோ இராஜ்யத்தை எப்போது இறக்கி வைப்போம் என்று இருக்கிறார். காஞ்சியில் கரிகாலர் கட்டியுள்ள பொன் மாளிகைக்குப் போய்த் தம்முடைய கடைசிக் காலத்தை நிம்மதியாகக் கழிக்க விரும்புகிறார்!" என்றார்.

"மாமா! நீங்கள் இருவரும் வந்த போது நானும் இளவரசரிடம் அதைத்தான் சொல்லிக் கொண்டிருந்தேன். இந்தப் பெண் இடையில் வந்து முறையிட்டாள். அதைக் கேட்டு இளவரசர் மனமிரங்கிச் சிறைக்குப் போய் அவரை விடுதலை செய்ய விரும்பினார்..."

"இந்தப் பெண் யார்? எதற்காக இவள் இப்படி விம்மி அழுகிறாள்?" என்று வேளார் கேட்டார்.

"தெரியவில்லையா, மாமா? இவள் தான் சம்புவரையர் மகள் மணிமேகலை..."

"ஓகோ! சம்புவரையர் சிறையில் இருப்பதை எண்ணி அழுகிறாள் ஆக்கும். அழ வேண்டாம், பெண்ணே! உன் தந்தையை விடுதலை செய்து அழைத்து வரும்படி சக்கரவர்த்தி கட்டளை பிறப்பித்து விட்டார். பாதாளச் சிறைக்குப் பார்த்திபேந்திர பல்லவன் போயிருக்கிறான்!" என்றார் மலையமான்.

"தாத்தா! இவள் தன் தந்தையைப் பற்றி மட்டும் கவலைப்படவில்லை. வாணர் குலத்து வீரரைப் பற்றிக் கவலைப்படுகிறாள். 'அவரை விடுதலை செய்யுங்கள். இளவரசரை நான்தான் கொன்றேன்' என்று புலம்புகிறாள்!" என்றாள் இளையபிராட்டி.

"ஓகோ! அப்படி இவள் சொல்லுவதாயிருந்தால் இவளையும் வேண்டுமானால் பாதாளச் சிறையில் கொண்டு போய் அடைத்து விடுவோம். வல்லத்து இளவரசனை விடுவிக்க முடியாது!" என்றார் பெரிய வேளார்.

மணிமேகலை விம்மிக் கொண்டே குந்தவையைப் பார்த்து, "அதுதான் நான் கோருவதும், இளவரசி! என்னையும் அவர் இருக்குமிடத்தில் கொண்டுபோய் அடைக்கச் சொல்லுங்கள்!" என்றாள்.

சேநாதிபதி வேளார் தமது நெற்றியை விரலால் தொட்டுச் சுட்டிக் காட்டி, மெல்லிய குரலில், "இந்தப் பெண்ணுக்குச் சித்தம் பேதலித்து விட்டதாகக் காண்கிறது!" என்று கூறினார்.

இதுவரை சும்மா இருந்த வானதி இப்பொழுது பேச்சில் குறுக்கிட்டு "பெரியப்பா! மணிமேகலையின் சித்தம் சரியாகத்தான் இருக்கிறது. உங்களுக்கும் திருக்கோவலூர்ப் பாட்டனுக்கும் தான் சித்தம் சரியாக இல்லை என்று தோன்றுகிறது. சிறையில் உள்ள வல்லத்திளவரசர் பொன்னியின் செல்வருடைய

அருமைத் தோழர். இளைய பிராட்டியிடமிருந்து ஓலை கொண்டு போய் இலங்கையிலிருந்து பொன்னியின் செல்வரை அழைத்து வந்தவர். வீர சொர்க்கம் அடைந்த இளவரசருடைய பூரண நம்பிக்கைக்குப் பாத்திரமாயிருந்தவர். அவர் மீது குற்றம் சாட்டிச் சிறையில் வைத்திருப்பவர்களுக்குத்தான் சித்தக் கோளாறாக இருக்க வேண்டும்!" என்றாள்.

"ஆகா! இந்தப் பெண் எப்போது இவ்வளவு வாயாடியானாள்? வானதி! இளைய பிராட்டியிடமிருந்து நீ கற்றுக் கொண்டது இது தானா? பெரியவர்கள் முன்னால் வாயைத் திறக்காமல் சும்மா இருப்பதற்கு நீ இன்னும் பயிலவில்லையா? உன்னை ஏதாவது கேட்டால் பதில் சொல்ல வேண்டும். இல்லா விட்டால் வாயை மூடிக்கொண்டிருக்க வேண்டும்!" என்றார் பெரிய வேளார்.

மலையமான் "சேனாதிபதி! இந்தக் குழந்தையின் மீது ஏன் கோபித்துக் கொள்கிறீர்கள்? இங்கேயுள்ளவர்களின் மனத்தில் உள்ளதையே இவள் வெளியிட்டாள்!" என்றார்.

குந்தவை "ஆம்! மாமா! வானதியை நீங்களும் நானும் இனி மிரட்ட நினைப்பது உசிதமாயிராது. நாளைக்கு அவள் சோழ சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தினியாகிச் சிம்மாதனத்தில் அமர்வாள். அப்போது அவளுடைய கட்டளையைத் தாங்களும் நானும் நிறைவேற்ற வேண்டியதாகும்!" என்றாள்.

"அருள்மொழி மட்டும் அதற்கு இசைந்தால் ஒரு தொல்லையும் இல்லையே? மகுடாபிஷேகத்தன்று பாதாளச் சிறையில் உள்ளவர்கள் அத்தனை பேரையும் விடுதலை செய்யும்படி கட்டளையிடலாமே?" என்றார் மலையமான்.

"தங்களையும் என்னையும் வெளியில் உள்ளவர்கள் அத்தனை பேரையும் பாதாளச் சிறையில் பிடித்துப் போடும்படியும் கட்டளையிடலாம்!" என்றார் சேநாதிபதி பெரிய வேளார்.

"ஐயா! நீங்கள் இருவரும் பெரியவர்கள். உங்களை மறுத்துப் பேச வேண்டியிருக்கிறதே என்று வருத்தப் படுகிறேன். ஆயினும் அவசரமாகச் செய்ய வேண்டிய காரியத்தை விட்டு விட்டு ஏதேதோ பேசுகிறீர்கள்......" என்று இளவரசர் கூறுவதற்குள், சேனாதிபதி, "இளவரசே! சோழ நாட்டின் பட்டத்து உரிமையை நிர்ணயித்துக் குழப்பம் எதுவும் நேரிடாமல் தடுப்பது மிகவும் அவசரமான காரியம் அல்லவா?" என்றார்.

"சக்கரவர்த்தி ஒருவர் இருக்கிறார் என்பதையே மறந்து விட்டுப் பேசுகிறீர்கள்!" என்றார் அருள்மொழி.

"நாங்கள் மறக்கவில்லை. சற்று முன் சக்கரவர்த்தியைப் பார்த்து விட்டுத் தான் திரும்பினோம். அவர்தான் இராஜ்யப் பிரச்னையைத் தீர்த்து வைக்க ரொம்பவும் அவசரப் படுகிறார். தீர்த்து வைத்து விட்டுக் காஞ்சியில் கரிகாலர் கட்டிய பொன் மாளிகையில் போய் வசிக்கப் பிரியப் படுகிறார்."

"இதோ நான் சக்கரவர்த்தியிடம் போகிறேன். வந்தியத் தேவரின் விடுதலைக்குக் கட்டளை வாங்கிக் கொண்டு வருகிறேன். பிறகு, நீங்கள் ஆட்சேபிக்க மாட்டீர்கள் அல்லவா?"

"இளவரசே! சக்கரவர்த்தியிடம் தாங்கள் வந்தியத்தேவனைப் பற்றிப் பிரஸ்தாபிப்பதே உசிதம் அன்று. பாண்டியநாட்டு ஆபத்துதவிகளுடனும் நந்தினி தேவியுடனும் சேர்ந்து சதி செய்து வந்தியத் தேவன்தான் கரிகாலரைக் கொன்றிருக்க வேண்டும் என்று சக்கரவர்த்தி கருதுகிறார்..."

"ஆகா! அந்த எண்ணத்தை அவர் மனத்தில் உண்டாக்கியது யார்?"

"நாங்கள் அல்ல, இளவரசே! பார்த்திபேந்திரன்தான் அந்த நம்பிக்கையைச் சக்கரவர்த்திக்கு உண்டாக்கியவன்..."

"அப்படியானால் பல்லவரையே நான் போய்ப் பார்க்கிறேன். எந்த ஆதாரத்தைக் கொண்டு அம்மாதிரி குற்றம் சாட்டுகிறார் என்று கேட்கிறேன்."

"பார்த்திபேந்திர பல்லவனைத் தாங்கள் இப்போது சந்திக்க முடியாது. சக்கரவர்த்தியின் கட்டளையுடன் அவன் சம்புவரையரை விடுதலை செய்து கொண்டு குடந்தைக்குப் போயிருக்கிறான். அங்கே சின்னப் பழுவேட்டரையரையும் மற்றச் சிற்றரசர்களையும் சந்தித்துப் பேசி உடனே அவர்களை அழைத்து வரும்படி சக்கரவர்த்தி சொல்லி அனுப்பியிருக்கிறார். இராஜ்ய உரிமையைப் பற்றிச் சமரசமாகப் பேசித் தீர்த்துக் கொள்ளலாம் என்று செய்தி அனுப்பியிருக்கிறார். மதுராந்தகருக்கே பட்டம் கட்டச் சம்மதம் என்றும் தெரியப்படுத்தியிருக்கிறார்."

பொன்னியின் செல்வர் முகமலர்ச்சியுடன் இளைய பிராட்டியையும் வானதியையும் பார்த்து விட்டு, "ரொம்ப நல்ல செய்தி சொன்னீர்கள்" என்றார்.

"கொஞ்சங் கூட நல்ல செய்தி அல்ல. குடிகளின் விருப்பத்துக்கும் போர் வீரர்

களின் கருத்துக்கும் மாருக என்று மதுராந்தகன் சோழ சிங்காதனம் ஏறுகிருனே. அன்றைக்கே நூறு ஆண்டுகளாக மேன்மை பெற்று வளர்ந்த சோழ சாம்ராஜ்யத்துக்கு விநாச காலம் ஆரம்பமாகும்" என்ருர் சேநாதிபதி.

"அதில் சந்தேகமே இல்லை. ஈழநாட்டிலிருந்து வடபெண்ணை நதி வரையில் குழப்பமும் கலகமும் தொடங்கும்" என்ருர் மலையமான்.

"அதற்கெல்லாம் நீங்கள் இருவருமே தலைமை வகித்து நடத்துவீர்கள் போலிருக்கிறது. அது உங்கள் இஷ்டம். அதற்குள்ளே நான் சக்கரவர்த்தியிடம் விண்ணப்பம் செய்து வந்தியத்தேவரை விடுதலை செய்யப் பார்க்கிறேன்!" என்று அருள்மொழி வர்மர் அங்கிருந்து வெளியேறுவதற்காகத் திரும்பினுர்.

"இளவரசே! சக்கரவர்த்தியிடம் தாங்கள் இந்தக் கோரிக்கையுடன் போக வேண்டாம். அதனுல் பெரும் விபரீதம் விளையும். தேவி! தங்கள் தம்பியைத் தடுத்து நிறுத்துங்கள்!" என்ருர் சேநாதிபதி பெரிய வேளார்.

"ஆம்; குழந்தாய்! வயது சென்ற இந்தக் கிழவன் சொல்வதைக் கேள்!" என்ருர் மிலாடுடையார்.

"அதனுல் என்ன விபரீதம் நடந்து விடும் என்று கருதுகிறீர்கள்?" என்று குந்தவை கேட்டாள்.

"யாரோ சில பாதகர்கள் ஒரு பொய்யான வதந்தியைக் கிளப்பி விட்டிருக்கிருர்கள். அதைச் சொல்லவும் வாய் கூசுகிறது. பொன்னியின் செல்வர் தான் இராஜ்யம் ஆளும் ஆசையால் வந்தியத்தேவனை அனுப்பிக் கரிகாலரைக் கொல்லச் செய்ததாக நேற்று நம் சேனு வீரர்களிடம் இரண்டு பேர் வந்து சொன்னுர்கள்......"

"தெய்வமே! இது என்ன பயங்கரமான அபவாதம்?" என்ருள் இளைய பிராட்டி குந்தவை.

"அந்த இருவரையும் நம் வீரர்கள் என்ன செய்தார்கள் தெரியுமா? வடவாற்று வெள்ளத்தில் அமுக்கி அமுக்கி எடுத்துக் கொண்டிருந்தார்கள். நான் தற்செயலாக அங்கே போய் அவர்களைக் காப்பாற்றினேன்..."

பொன்னியின் செல்வர் குறுக்கிட்டு "இவ்வளவு கொடூரமான அபவாதத்தைச் சோழ நாட்டில் யாரும் நம்பப் போவதில்லை. நம் வீரர்களின் செய்கையிலிருந்தே தெரியவில்லையா?" என்ருர்.

"இன்றைக்கு நம்ப மாட்டார்கள், இளவரசே! மக்களுடைய இயல்பு தங்களுக்குத் தெரியாது. சில காலத்துக்குப் பிறகு மறுபடியும் இந்த வதந்தி கிளம்பும். தங்களை அறியாதவர்கள் சிலர் நம்பக் கூடும். அன்னிய நாடுகளில் இராஜ்யத்துக்காக உறவினர்கள் ஒருவரையொருவர் கொன்று கொள்வது சர்வ சாதாரணமாயிருக்கிறது. ஈழநாட்டு இராஜ வம்சத்தின் சரித்திரம் தங்களுக்குத் தெரியுமே?..."

"சேனுதிபதி! பிற்காலத்தில் ஒரு பொய் வதந்தி பரவும் என்பதற்காக இன்றைக்கு என் பிராண சிநேகிதனைப் பாதாளச் சிறையில் விட்டு வைத்திருக்கச் சொல்கிறீர்களா?"

"பிற்காலத்தில் அல்ல, இளவரசே! இன்றைக்குத் தாங்கள் வந்தியத்தேவனின் விடுதலையில் ஊக்கம் எடுத்துக் கொண்டால் நாளைக்கே சிலர் அந்த வதந்தியில் நம்பிக்கை கொள்வார்கள். சக்கரவர்த்தியின் காதிலும் அது விழும். அதனுல் தங்கள் தந்தையின் மனம் எவ்வளவு புண்படும் என்று யோசியுங்கள்!"

பொன்னியின் செல்வரின் திருமுகம் கருமேகத்தினுல் மறைக்கப்பட்ட பூரண சந்திரனைப்போல் ஆயிற்று. குந்தவை தேவியைப் பார்த்து, "அக்கா! தாங்கள் என்ன சொல்கிறீர்கள்?" என்ருர்.

இளைய பிராட்டியின் முகம் மிக்க வேதனையைக் காட்டியது. அவர் பெரிய வேளாரைப் பார்த்து, "சேநாதிபதி! இத்தகைய கொடூரமான வதந்தியைப் பரப்ப முயலுவோர் யாரா யிருக்கும்?" என்று கேட்டார்.

"வடவாற்றில் நம் வீரர்கள் முழுக்கி முழுக்கி எடுத்துக் கொண்டிருந்தவர்களை நான் தனியே அழைத்துக் கொண்டு போய் அவர்களை நயத்திலும் பயத்திலும் கேட்டேன். சம்புவரையர் மகன் கந்தமாறன் தான் இவ்விதம் சொல்லி அனுப்பியதாகக் கூறினுர்கள்!"

அப்போது மணிமேகலை முன் வந்து, "என் தமையன் காரியத்துக்காக நான் வெட்கப் படுகிறேன். நல்லவனுயிருந்த என் அண்ணன் பழுவூர் இளைய ராணியின் போதனையினுல்தான் இப்படிப் பாதகனுகி விட்டான். உண்மையில் ஆதித்த கரிகாலரைக் கொன்றவள் நான். என்னைச் சிறைப் படுத்துங்கள்! வல்லத்திளவரசரை உடனே விடுதலை செய்யுங்கள்!" என்று ஆத்திரமும் அழுகையும் பொங்கக் கூறினுள்.

இளைய பிராட்டி அவளுடைய முதுகை அன்புடன் தொட்டு, "மணிமேகலை! சாந்தமாயிரு! நீ இவ்விதம் சொல்வதை யாரும் நம்ப மாட்டார்கள். மேலும் ஏதேனும் அபவாதத்தைக் கிளப்புவார்கள். இந்தச் சிக்கலைத் தீர்ப்பதற்கு வழி கண்டு பிடிக்கலாம்" என்றாள்.

பிறகு சேநாதிபதியைப் பார்த்து, "ஐயா! தங்களுடைய புத்திமதியை நானும் என் சகோதரனும் ஒப்புக்கொள்கிறோம். இப்போது வல்லத்திளவரசரை விடுதலை செய்ய முயல்வதால் வீண் வதந்திகள் ஏற்பட இடமுண்டு என்பது உண்மைதான். உண்மையான குற்றவாளியை முதலில் கண்டு பிடிக்க வேண்டும். இதைக் குறித்து முதன் மந்திரி அநிருத்தரிடம் நான் கலந்தாலோசிப்பேன். அவருடைய சீடன் ஆழ்வார்க்கடியான் பாண்டிய நாட்டு ஆபத்துதவிகளைத் தேடிக்கொண்டு போயிருக்கிறான். அவன் ஏதேனும் தகவல் கொண்டு வருவான். பெரிய பழுவேட்டரையரும் பழுவூர் இளைய ராணியும் என்ன ஆனார்கள் என்று தெரியவில்லை. அவர்கள் கண்டு பிடிக்கப் பட்டாலும் உண்மை வெளியாகலாம். அதற்கிடையில் நான் இந்தப் பெண்ணிடம் கடம்பூரில் நடந்ததையெல்லாம் கேட்டுத் தெரிந்து கொள்கிறேன்! அதுவரையில் பாதாளச் சிறையில் வல்லத்திளவரசர் சௌகரியமாயிருப்பதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யுங்கள். அவர் இந்தப் பயங்கரமான கொலைக் குற்றத்தைச் செய்யவில்லை என்பது நிச்சயம்!" என்றாள்.

இச்சமயத்தில் "எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. அக்கா!" என்றாள் கொடும்பாளூர் இளவரசி.



"சொல், வானதி!" என்றாள் குந்தவை.

"முன்னொரு தடவை நாம் இருவரும் பாதாளச் சிறைக்குப் போய்விட்டு வந்தோமே, நினைவிருக்கிறதா? அதுபோல் நாம் எல்லாருமாக இன்றைக்கும் போய்ப் பார்த்து விட்டு வருவோம். கடம்பூர் இளவரசியையும் அழைத்துப் போவோம்!" என்றாள் வானதி.

குந்தவை பெரிய வேளாரைப் பார்த்து, "சேநாதிபதி! தங்கள் குமாரியின் யோசனையைப் பற்றி என்ன சொல்லுகிறீர்கள்?" என்று கேட்டாள்.

"என் குமாரியும் புத்திசாலித்தனமாகப் பேசக்கூடும் என்று தெரிகிறது. கரிகாலர் இறந்த அன்றிரவு அதே இடத்தில் அவருடன் இருந்தவன் வல்லத்திளவரசன். அவனிடம் விசாரித்தாலும் உண்மை புலப்படலாம்" என்றார் சேநாதிபதி பெரிய வேளார்.

உடனேயே எல்லாரும் பாதாளச் சிறைக்குச் சென்றார்கள். சின்னப் பழுவேட்டரையர் கோட்டையை விட்டுப் போவதற்கு முன்னாலேயே தங்க நாணயங்கள் அச்சிடும் வேலையை நிறுத்தி விட்டார். ஆகையால், நாணயத்தொழிற்சாலை வெறுமையாக இருந்தது. காவற்காரர்களும் சிலர்தான் இருந்தார்கள். புலிகள் அடைத்து வைக்கப்பட்டிருந்த இடத்தைத் தாண்டிச் சுரங்க வழியில் பிரவேசித்துச் சென்று வல்லத் திளவரசன் வந்தியத்தேவன் அடைக்கப் பட்டிருந்த அறையை அடைந்தார்கள்.

ஆனால் அங்கே வந்தியத்தேவனை அவர்கள் காணவில்லை. அவனுடைய அறையில் சுவரில் மாட்டியிருந்த வளையங்களில் சங்கிலியால் பிணைக்கப்பட்டிருந்த வைத்தியர் மகன் பினாகபாணியைக் கண்டார்கள். அவன் இவர்களைக் கண்டதும், "ஐயோ! ஐயோ! என்னை விடுதலை செய்யுங்கள்! விடுதலை செய்யுங்கள்!" என்று பரிதாபமாக அலறினான்.



அத்தியாயம் 54

பினாகபாணியின் வேலை

வைத்தியர் மகன் பினாகபாணி அரசாங்கத்தில் பெரிய பதவிக்கு வருவதென்று தீர்மானம் செய்திருந்தான். வந்தியத்தேவனைச் சந்தித்த நாளிலிருந்து அவனுடைய உள்ளத்தில் இந்த ஆசை தோன்றிக் கொழுந்து விட்டு ஓங்கி வளர்ந்து கொண்டிருந்தது.

இதற்கு முன் அவன் ஈடுபட்ட சில காரியங்களில் அவன் அவ்வளவாக வெற்றி பெறவில்லை. நந்தினி தேவி அவனிடத்தில் சிறிது கருணை காட்டியது போலத் தோன்றியது. பிற்பாடு பழுவூர் ராணி அவனை அடியோடு மறந்து விட்டாள். குந்தவை தேவியைப் பார்க்கப் போன போது, அவர் அவனுடன் சரியாக முகம் கொடுத்துப் பேசவும் இல்லை. பழையாறை அரண்மனை வாசலில் வந்தியத்தேவன்மீது 'ஒற்றன்' என்று குற்றம் சுமத்தியதில் அவனிடம் அடி பட்டது தான் மிச்சமாயிற்றே தவிர லாபம் ஒன்றும் கிட்டவில்லை.

ஆனால் முதன் மந்திரி அநிருத்தர் அவனைக் கூப்பிட்டு அனுப்பிக் கோடிக்கரைக்குச் சென்று ஊமை ராணியைப் பிடித்துக் கொண்டு வரும்படி அனுப்பியபோது, இனித் தான் பெரிய பதவிக்கு வருவது நிச்சயம் என்று முடிவு செய்து கொண்டான். அந்தக் காரியத்தை எப்படியாவது சரிவர நிறைவேற்றி விட்டால் போதும்; முதன்

மந்திரியின் தயவினால் அவன் அடையக் கூடாதது ஒன்றுமில்லை. பிறகு, முதற் காரியமாக வந்தியத் தேவனை ஒரு கை பார்க்க வேண்டும். அப்புறம், அந்தப் பூங்குழலியின் கர்வத்தையும் அடக்கி ஒடுக்கிவிட வேண்டும்.

இந்த மாதிரி ஆகாசக் கோட்டைகள் கட்டிக் கொண்டு பினாகபாணி கோடிக் கரை சென்றான். அங்கே கோடிக்கரையில் ராக்கம்மாளை மெள்ள வசப்படுத்திக் கொண்டான். அவள் அவனிடம் ஏமாந்து போனாள். ஆபத்துதவிக் கூட்டத்தில் சேர்ந்தவன் அவன் என்று எண்ணிக் கொண்டு அவர்களுடைய முயற்சிகளைப் பற்றி அவனிடம் பேசினாள். அவள் உதவியைக் கொண்டு ஊமை ராணியைக் கண்டு பிடித்துத் தஞ்சைக் கோட்டை வாசல் வரையில் கொண்டு வந்து சேர்த்தான்.

இப் பிரயாணத்தின் போதெல்லாம் பினாகபாணியின் உள்ளம் வேலை செய்து கொண்டே இருந்தது. ஊமை ராணி சம்பந்தமான இரகசியங்களை அறியப் பிரயத்தனம் செய்தது. பாதாளச் சிறையில் அவன் ஒருநாள் அடைபட்டிருந்த போது அங்கிருந்த பைத்தியக்காரன் ஒருவன் கூறிய விவரங்கள் நினைவுக்கு வந்தன. அப்போது அவை பைத்தியக்காரனின் உளறலாக அவனுக்குத் தோன்றியது. இப்போது, அவன் கூறியவற்றில் உண்மை யிருக்கும் என்று எண்ணினான்.

ஊமை ராணி ஏறி இருந்த பல்லக்கு தஞ்சைக் கோட்டைக்கு அருகில் வந்த சமயம் புயலும் மழையும் அடித்து அவன் மீது மரம் முறிந்து விழுந்ததல்லவா? அதனால் ஏற்பட்ட காயங்கள் ஆறிய பின்னர் அவன் முதன் மந்திரி அநிருத்தரைப் பார்க்கப் போனான். அதற்குள்ளே பல முக்கியமான சம்பவங்கள் நிகழ்ந்து விட்டன. ஊமை ராணி சக்கரவர்த்தியின் உயிரைக் காப்பதற்காக உயிரை விட்டு விட்டான். கரிகாலர் கொலையுண்டு இறந்து விட்டார். அடுத்த பட்டம் யாருக்கு என்பதைப் பற்றி நாடு நகரமெல்லாம் அல்லோல கல்லோலப் பட்டுக் கொண்டிருந்தது. தஞ்சைக் கோட்டை கொடும்பாளூர் வேளாரின் வசத்துக்கு வந்து விட்டது. பழுவேட்டரையர்களும் அவர்களைச் சேர்ந்த சிற்றரசர்களும் படை திரட்டிக் கொண்டிருப்பதாகச் செய்தி பரவியது. பெரிய உள்நாட்டுப் போர் மூளலாம் என்பதற்கு அறிகுறிகள் தென்பட்டன.

இத்தகைய கொந்தளிப்பான நிலையில் வைத்தியர் மகன் பினாகபாணி முதன் மந்திரி அநிருத்தரைப் போய்ப் பார்த்தான். பெருங் கவலைக் கடலில் ஆழ்ந்திருந்த அன்பில் பிரம்மராயர் பினாகபாணியோடு அதிகமாகப் பேசிக் காலம் போக்க விரும்பவில்லை. தாம் இட்ட காரியத்தை அவன் நிறைவேற்றிவிட்ட படியால், அவனுக்குப் பரிசு கொடுத்துச் சீக்கிரமாக அனுப்பிவிட விரும்பினார்.

ஆனால் பினாகபாணி பாதாளச் சிறையில் தான் சந்தித்த பைத்தியக்காரனைப் பற்றிச் சொல்லத் தொடங்கியதும் அவருடைய கவனம் அவன் பக்கம் திரும்பியது. பாண்டிய ராஜ்யத்தின் புராதனமான மணி மகுடமும் தேவேந்திரன் அளித்ததாகக் கூறப்படும் இரத்தின ஹாரமும் இலங்கையில் எங்கே இருக்கின்றன என்பது அந்தப் பைத்தியக்காரனுக்குத் தெரியும் என்று கேட்டதும் அநிருத்தர் மிக்க ஆர்வம் கொண்டார். அந்த மணி மகுடத்தையும் இரத்தின ஹாரத்தையும் தேடிக் கண்டு பிடிப்பதற்குப் பராந்தக சக்கரவர்த்தியின் காலத்திலிருந்து முயன்றும் பலன் கிட்டவில்லை. அவற்றைக் கைப்பற்றும் வரையில் பாண்டிய வம்சத்தைச் சேர்ந்தவன் என்பதாக யாராவது ஒருவன் முளைத்துக் கொண்டுதா னிருப்பான். திருப்புறம்பயத்தில் நள்ளிரவில் ஒரு சின்னஞ் சிறு பையனைப் பாண்டிய சிங்காதனத்தில் ஏற்றி மகுடம் சூட்டிய நாடகத்தைப் பற்றி அநிருத்தர் ஆழ்வார்க்கடியான் மூலம் அறிந்திருந்தார். இம்மாதிரி யாராவது சிலர் அவ்வப்போது கிளம்பிக் கொண்டுதானிருப்பார்கள். அவர்களுக்கு ஈழத்து அரசர்களும் சேர மன்னர்களும் உதவி செய்வார்கள். பாண்டிய நாடு ஒருவழியாகச் சோழ சாம்ராஜ்யத்துடன் சேர்ந்து விட்டதாக ஏற்பட வேண்டுமானால், சோழ சக்கரவர்த்தியே மதுரையிலும் முடி சூட்டிக் கொள்ள வேண்டும். அந்த வைபவத்தின்போது பாண்டிய வம்சத்தின் புராதன கிரீடத்தையும் இரத்தின ஹாரத்தையும் சோழ சக்கரவர்த்தி அணிய வேண்டும்.

இவை யெல்லாம் முன்னமே அநிருத்தர் தீர்மானித் திருந்த காரியங்கள். ஆகையினாலேயே ஈழநாட்டுக்குப் படையெடுத்துச் சென்ற ஒவ்வொரு சோழ தளபதியிடமும் அநிருத்தர் மேற்கூறிய மணி மகுடத்தையும் இரத்தின ஹாரத்தையும் கண்டு பிடித்துக் கொண்டு

வரும்படி சொல்லி அனுப்பி வந்தார். அதுவரையில் ஒருவராவது அக்காரியத்தில் வெற்றி பெறவில்லை.

இப்போது பாதாளச் சிறையில் உள்ள ஒருவனுக்கு அவை இருக்குமிடம் தெரியும் என்று கேள்விப் பட்டதும் அன்பில் அநிருத்தப் பிரம்மராயர் ஆர்வம் கொண்டது இயற்கையே அல்லவா?

வைத்தியர் மகன் இன்னொரு செய்தியும் கூறினான். அது முதன் மந்திரியின் ஆர்வத்தை அதிகமாக்கியதோடு கவலையையும் உண்டாக்கியது. அந்தப் பைத்தியக்காரன் சோழ வம்சத்தைப் பற்றி ஒரு மகத்தான இரகசியம் தனக்குத் தெரியும் என்றும், சோழ சிங்காதனத்துக்கு உரிமை கொண்டாடும் இளவரசன் ஒருவன் உண்மையில் சோழ வம்சத்தைச் சேர்ந்தவனே அல்ல வென்றும் கூறியதாகப் பினாகபாணி சொன்னான்.

இதை யெல்லாம் கேட்டதும் அநிருத்தர் முதலில் தாமே பாதாளச் சிறைக்குப் போய் அந்தப் பைத்தியக்காரனைப் பார்க்க எண்ணினார். பிறகு அந்த எண்ணத்தை மாற்றிக் கொண்டார். தாம் அங்கே போனால், எதற்கு என்னத்திற்கு என்ற கேள்விகள் கிளம்பும். மலையமானும் வேளாரும் அநிருத்தரிடம் பூரண நம்பிக்கை கொண்டிருக்க வில்லை. அவர் சக்கரவர்த்தியின் விருப்பத்தின்படி மதுராந்தகன் கட்சியை ஆதரிப்பதாகவே அவர்கள் கருதியிருந்தார்கள். தாம் பாதாளச் சிறைக்குப் போனால் அதிலிருந்து ஏதேனும் புதிய சந்தேகங்கள் அவர்களுக்கு ஏற்படும். சம்புவரையரைப் பார்க்கப் போவதாகவும் எண்ணிக் கொள்வார்கள்.—இந்த அம்சத்தைப் பற்றி நன்கு யோசித்த பிறகு, அநிருத்தர் வைத்தியர் மகனையே உபயோகித்துக் கொள்ள விரும்பினார். தம் முத்திரை மோதிரத்தைக் கொடுத்துப் பாதாளச் சிறைக்குச் சென்று அந்தப் பைத்தியக்காரனைப் பார்த்து வரும்படி கூறினார்.

பினாகபாணி அவ்விதமே அப் பைத்தியக்காரனைப் பார்க்கப் போனான். பக்கத்து அறையில் வந்தியத் தேவன் அடைக்கப்பட்டுக் கிடந்ததைப் பார்த்ததும் அவனுக்குக் குதூகலமே உண்டாகி விட்டது. அந்த அறையின் வாசலில் சிறிது நின்று வந்தியத்தேவனுடன் பேசக் கொடுத்தான். வந்தியத்தேவன் அவனுடன் பேசவில்லை. அதனால் ஆத்திரம் அடைந்து அவனை நன்றாகத் திட்டி விட்டு அடுத்த அறைக்குப் போனான்.

பைத்தியக்காரன் அவனிடம் சுமுகமாகப் பேசினான். உண்மையில் அவன் பைத்தியக்காரன் அல்லவென்பதைப் பினாகபாணி கண்டு கொண்டான். பிறகு, பாண்டிய நாட்டு மணி மகுடம் – இரத்தின ஹாரம் ஆகியவற்றைக் குறித்துக் கேட்டான். பைத்தியக்காரன் உடனே மௌனமானான். சோழ வம்சத்து இரகசியத்தைப் பற்றியும் சொல்ல மறுத்து விட்டான். "எனக்கு முதலில் விடுதலை உத்தரவு வாங்கி வா! பிறகுதான் சொல்வேன்!" என்று கூறி விட்டான்.

திரும்பி வந்து பினாகபாணி முதன் மந்திரியிடம் தன்னுடைய தோல்வியைப் பற்றிக் கூறினான். அவனை விடுவித்துக் கொண்டு வந்தால் நிச்சயம் பலன் கிட்டும் என்றும் தெரிவித்தான். முதன் மந்திரிக்கும் அது உசிதமாகத் தோன்றியது. இம்மாதிரி இராஜ்ய உரிமை பற்றிக் குழப்பம் ஏற்பட்டிருக்கும் நிலைமையில் அபாயகரமான இரகசியங்களைப் பற்றிப் பேசும் பைத்தியக்காரனைச் சிறையில் வைத்திருக்கக் கூடாது என்று கருதினார். அவனைத் தமது அரண்மனைக்கே அழைத்து வந்து உண்மையை அறிய வேண்டும் என்று எண்ணினார்.

அதன்பேரில் கொடும்பாளூர் வேளாரைப் பார்த்து அவரிடம் ஒருவாறு இந்தச் செய்தியைக் கூறினார். சின்னப் பழுவேட்டரையரால் பல வருஷங்களுக்கு முன்னால் சிறையில் அடைக்கப்பட்ட கைதியை முதன் மந்திரியின் விருப்பத்தின் பிரகாரம் விடுதலை செய்வதில் பெரிய வேளாருக்கு ஆட்சேபம் ஒன்றும் தோன்றவில்லை. எனவே, அப்பைத்தியக்காரக் கைதியை விடுதலை செய்யக் கட்டளை எழுதிக் கொடுத்தார்.

அதை வாங்கிக் கொண்டு பினாகபாணி கர்வத்துடன் பாதாளச் சிறைக்குச் சென்றான். முதலில் வந்தியத்தேவன் அறையின் வாசலில் நின்று அவனை விடுதலை செய்ய உத்தரவு கொண்டு வந்திருப்பதாகச் சொன்னான். வந்தியத்தேவன் அதை உண்மை என்று நம்பி நன்றி கூறத் தொடங்கினான். உடனே பினாகபாணி தன் உண்மை சொரூபத்தைக் காட்டலானான். வந்தியத்தேவனை நன்றாகத் திட்டி விட்டு, "உனக்கு நாற்சந்தி மூலையில் கழு மரத்தின் மேலேதான் விடுதலை" என்று ஏகத்தாளம் செய்தான். பின்னர் அடுத்த அறைக்குச் சென்று பைத்தியக்காரனுடன் சுமுகமாகப் பேசினான். அவனைச் சுவரோடு சேர்த்துப் பிணைத்திருந்த சங்கிலிகளை அவிழ்த்து விட்டான். "இதோ உனக்கு விடுதலை உத்தரவு வாங்கிக் கொண்டு வந்திருக்கிறேன். இப்போதாவது உனக்குத் தெரிந்த இரகசியங்களைச் சொல்லுவாயா?" என்று கேட்டான்.

முதன் மந்திரி அநிருத்தரிடம் அழைத்துப் போவதற்கு முன்னால் தானே அந்த இரகசியங்களை அறிந்து கொள்ள வைத்தியர் மகன் விரும்பினான்.

பைத்தியக்காரன் தன்னுடைய விடுதலையில் அவ்வளவு உற்சாகம் கொண்டவனாகக் காணப்படவில்லை. வெளியேறுவதற்கும் அவசரப்பட்டவனாகத் தோன்றவில்லை. பினாகபாணியின் வார்த்தையில் அவ்வளவு நம்பிக்கை கொண்டவனாகவும் தெரியவில்லை. "என்ன? ஏது? உத்தரவு யார் கொடுத்தது? சிறையிலிருந்து வெளியேறுவது நிச்சயமா? கோட்டையிலிருந்து வெளியே போக விடுவார்களா?" என்று கேட்டுக் கொண்டிருந்தான்.

திடீரென்று பக்கத்துச் சுவரிலிருந்து சில கற்கள் பெயர்ந்து விழுந்தன. பினாகபாணி என்னவென்று திரும்பிப் பார்த்தபோது வந்தியத்தேவன் அவன் பின்னால் நிற்பதைக் கண்டான். பினாகபாணி இடுப்பில் செருகியிருந்த கத்தியை அவசரமாக எடுத்துக் கொண்டான். வந்தியத்தேவன் அவன்மீது பாய்ந்து கழுத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான். கையிலிருந்த கத்தியையும் தட்டி விட்டான். இருவரும் சிறிது நேரம் உருண்டு புரண்டு துவந்த யுத்தம் செய்தார்கள். அச்சமயம் பைத்தியக்காரன் சுவரில் மாட்டியிருந்த சங்கிலி ஒன்றைத் தூக்கிப் பினாகபாணியின் கழுத்தில் போட்டு இறுக்கினான்......

அட்டைப்பட விளக்கம்

அந்தக் காதலர்களுக்கு நிலா என்றால் ரொம்ப ரொம்பப் பிரியம்.

ஆம், வானில் சந்திரன் எழுந்து தன்னொளியைப் பொழியத் தொடங்கும் வேளையில் சந்திப்பது என்று அவர்கள் ஏற்கெனவே ஏற்பாடு செய்து கொண்டிருந்தனர்.


இதோ! நிலவும் வந்து விட்டது! காதலர்களும் வந்து விட்டார்கள். அவர்கள் பாடுவதையும் சற்றுக் கேட்போம்:

காதலர் நெஞ்சை வெதுப்புவை
நீயென்பர் வெண்ணிலாவே! — நினைக்
காதல் செய்வார் நெஞ்சிற் கின்னமு
தாகுவை வெண்ணிலாவே!

—பாரதியார்.

வத்னி

டாய்லட் சோப்



உங்கள் இயற்கை

எழிலுக்குத் திறவுகோல்

தூய தாவர எண்ணெய்களிலிருந்து தயாரிக்கப்பட்டது; அதன் மென்மையான நுரை களஞ்சியமும், இதமான நறுமணமும் உங்களுக்குப் புதுமை மற்றும் அழகு உணர்வையும் தோற்றத்தையும் அளிக்கும்.

மிகச்சிறந்த சோப் — 5 அணா 9 பை

'வத்னி பேபி' — 2 அணா

கோத்ரெஜ் சோப்ஸ், லிட்.

அங்கத்தினர் :

இந்தியன் சோப் அண்ட் டாய்லட்ரீஸ் மேக்கர்ஸ் அஸோஸியேஷன்

தசாவதாரம்



வைகுண்டம் எப்படி இருக்குமென்பது யாருக்கேனும் தெரியுமா! தெரியா விட்டால் பாதகமில்லை. வைகுண்டத்துக்குப் போகும்போது பார்த்துக் கொள்ளலாம். அதற்கு முன்னால், 'பூலோக வைகுண்டம்' எப்படி யிருக்கும் என்று நவாப் ராஜமாணிக்கம் கம்பெனியாரின் 'தசாவதார' நாடகத்தைப் பார்த்தறிந்து கொள்ளலாம்.

சனகாதி முனிவர்கள் பேசிக் கொண்டதிலிருந்து "வைகுண்ட லோகம் கோடி சூரியப் பிரகாசமாய் விளக்கும்" என்று தெரிந்தது. ஒரு சூரியனையே நம்மால் பார்க்க முடியாதபோது, கோடி சூரியப் பிரகாசத்தை எப்படிப் பார்க்கப் போகிறோம் என்று கவலைப்பட்டுக் கொண்டே இருக்கும்போது வைகுண்டம் ஒரே ஜாஜ்வல்யமாகக் காட்சி அளித்தது.

நூற்றுக் கணக்கான சூரியக் குஞ்சுகளை யொத்த மின்சார தீபங்கள் ஸ்ரீ வைகுண்டத்தின் தங்க மயமான சுவர்களையும் வாசற்படிகளையும் கதவுகளையும் தகதக வென்று மின்னும்படி செய்தன! அதைப் பார்த்ததும் உடனே வைகுண்டத்துக்குள் பிரவேசிக்கும் ஆர்வம் உண்டாயிற்று. வாசற் படிக்கு இருபுறங்களிலும் அழகிய மணி மண்டபங்களுக்குள் நின்று கொண்டிருந்த துவாரபாலகர்கள் கொஞ்சம் பயமுறுத்தித் தடுத்து நிறுத்தினார்கள்.

"இவர்களுக்கு என்ன இவ்வளவு கர்வம்!" என்று எண்ணி முடிவதற்குள், சனகர், சனந்தனர் ஆகிய நாலு பால முனிவர்களும் வந்து துவாரபாலகர்களுக்குச் சாபம் கொடுத்தார்கள்.

ஸ்ரீமந் நாராயண மூர்த்தி திருமகள் சமேதராக வெளி வந்து சனகாதி முனிவர்களுக்கு அனுக்ரஹம் செய்து விட்டு, துவார பாலகர்களுக்குச் சாப விமோசனமும் கூறிவிட்டுத் திரும்பி, உடனே போனதும் திரை விழுந்தது.

நாடகத்தைச் சுவாரஸ்யமாகப் பார்த்துக் கொண்டிருந்த ஒரு சிறு குழந்தை, "ஏன் அம்மா, மகாவிஷ்ணு போய்விட்டார்! வரச் சொல்லு அம்மா! போக வேண்டாம்னு சொல்லு அம்மா!" என்று அழ ஆரம்பித்து விட்டது. ராஜமாணிக்கத்தைப் பார்த்துப் பார்த்துப் பயந்து போயிருந்த குழந்தைக்கு மகாவிஷ்ணுவின் மீது அவ்வளவு பக்தி உண்டானதில் வியப்பில்லைதானே!

ஸ்ரீமந் நாராயணர் கருட வாகனத்தில் ஸ்ரீதேவி, பூதேவி ஸமேதராய் எழுந்தருளிப் பிரும்மாவுக்கு அபயம் கூறுகிறார். பிறகு மச்சாவதாரம் எடுத்து வேதங்களை ஆழ் கடலிலிருந்து கொண்டு வந்து கொடுத்து அனுக்ரஹம் செய்கிறார். தேவா—ஸுரர்கள் அமிர்தத்துக்காகப் பாற் கடலைக் கடையும் போது மேரு மலை சாய்ந்து விடவே கூர்மாவதாரம் எடுத்து மலையைத் தாங்குகிறார். பிறகு வராகாவதாரத்தில் பூமியைத் தூக்கிக் கொண்டு வந்து இருக்க வேண்டிய இடத்தில் வைக்கிறார். வாமனாவதாரத்தில் மகாபலிக்குப் பாதாள லோகத்தின் அரச பதவியை அளிக்கிறார். நரஸிம்மாவதாரத்தில் பிரஹலாதனைக் காப்பதற்காகத் தூணிலிருந்து வெளிப்பட்டு இரண்யவதம் செய்கிறார். பரசுராமாவதாரத்தில் தம் தபோ வலிமையை ராமருக்கு அளிக்கிறார். ராமாவதாரத்தில் ராவண கும்பகர்ணாதிகளைச் சம்ஹரித்து சீதையைச் சிறை மீட்கிறார். கிருஷ்ணாவதாரத்தில் கோபியர்களுடன் கோலாட்டமடித்து விளையாடுகிறார். கல்கி அவதாரத்தில் வெண் புரவி மீது ஏறிக் கொண்டு திக்விஜயம் செய்து கலி புருஷனை வெல்கிறார்.

கடைசியில் பிரளயக்காட்சியைப் பார்த்தபோது தூக்கி வாரிப் போட்டது. பகவானுடைய திறந்த வாயினுள் கடல் நீரோடு, ஆகாய விமா

னங்கள், அணுகுண்டுகள், மிருகங்கள், மனிதர்கள், எல்லாமே போவதைப் பார்த்த போது நாமும் நாற்காலியோடு உள்ளே போய் விட்டோமோ என்ற பிரமிப்பு ஏற்பட்டது. திரை விழுந்த பிறகுதான், இருந்த இடத்திலேயே பத்திரமாக இருக்கிறோம் என்ற நிம்மதி மனதுக்கு ஏற்பட்டது.



நமது புராணக் கதைகளைப் பற்றி நினைத்துப் பார்க்கப் பார்க்க ஆச்சரியமாய் இருக்கிறது. என்ன அற்புதமான கற்பனைகள்! எத்தனை உயர்ந்த கருத்துக்கள்! சிறிதாவது அலுப்பு ஏற்படுகிறதா! எத்தனை தடவை கேட்டாலும் மறுபடியும் கேட்க ஆவல் உண்டாகிறது. குழந்தைகள் முதல் அனைவரும் பல தடவைகள் கேட்டும், படித்தும், பார்த்தும் இப்புறந் தக்கவை. பிரஹலாதன் கதையை எத்தனை தடவைகள் கேட்டாகிவிட்டது! ஆனாலும் மறுபடியும் கேட்கும்போது புதிதாகக் கேட்பது போலிருக்கிறதல்லவா!

பிரஹலாதனாக நடித்த சிறுவனின் சிரித்த முகம் எல்லோருடைய மனத்தையும் கவர்ந்தது. இரண்யனாக நடித்த ஸ்ரீ ராஜமாணிக்கம் அவர்கள், இரண்யனுடைய புத்ரபாசத்தையும், ஹரியின் மேல் உள்ள துவேஷத்தையும் மாறி மாறி முக பாவங்களால் வெளிப்படுத்தியது மிகச் சிறந்த நடிப்புக் கலைக்கு உதாரணமாக இருந்தது.

காட்சிகள் எல்லாம் பிரமாதம். பாற்கடலைக் கடைந்ததும், அப்போது கற்பக விருக்ஷம், காம தேனு. சந்திரன் முதலியவை தோன்றியதும், மச்சாவதாரத்தில் கடலில் வேதங்களைத் தேடியதும், நாகலோகக் காட்சியும், வைகுண்டமும் கண்கொள்ளாக் காட்சிகளாக இருந்தன.

நவாப் ராஜமாணிக்கம் அவர்கள் நாடகக் கலைக்குச் செய்துவரும் தொண்டு சொல்வதற்கரியது. நாஸ்திக வாதம் தலைவிரித்தாடும் காலத்தில் அவர் உறுதியான ஈசுவர பக்தி போலும், கலையின்மீது அளவிலாத அபிமானத்துடனும், தெய்வ பக்தியை வளர்க்க வேண்டுமென்ற ஆர்வத்தோடும் நாடகக் கலைக்கு அருந்தொண்டு செய்து வருகிறார். பெரும்பாலும் சின்னஞ்சிறுபால நடிகர்களைக் கொண்டே இவ்வளவு அற்புதமான நாடகத்தை வெற்றிகரமாகவும், குறைகளே இல்லாமலும் மகிழ்ச்சி ஊட்டும் வகையிலும் நடத்தும் அவருடைய திறமையே திறமை!

ஸ்ரீமத் சம்பூர்ண ராமாயண நாடகம் 160 நாட்களுக்கு மேல் நடைபெற்றது. கடைசி தினம் வரையில் ஏராது மக்கள் திரண்டு வந்து நாடகத்தைப் பார்த்துக் களித்தனர். தசாவதார நாடகம் இரண்டு மாதங்களாக நடை பெற்று வருகிறது. பிரதி தினமும் ஏராளமான கூட்டம் வருவதைப் பார்க்கும்போது வியப்பாக இருக்கிறது. நமது புராணங்களின்மீது மக்களுக்கு உள்ள ஆர்வமும், ஸ்ரீ ராஜமாணிக்கம் அவர்களுடைய நாடகங்களின்மீது அவர்களுக்கு உள்ள பெருமதிப்பும் இதனின்று வெளியாகிறது.

இக் காலத்தில் புராணங்களில் சொல்லப்படும் வரலாறுகளை அப்படி அப்படியே நடந்ததாக யாரும் நம்புவதில்லை. ஆனால், அக் கதைகளின் மூலம் என்றும் நிலைத்துள்ள சத்தியப் பொருள்களும் சிரஞ்சீவி நீதிகளும் கற்பிக்கப் படுவதை உணர்ந்து அனுபவிக்கிறார்கள். அதுவும் நாடகக் கலை மூலம் அவற்றை எடுத்துரைக்கும் போது, பசுமரத்தில் அடித்த ஆணிபோல் மனதில் பதிகின்றன. படிப்பு வாசனை இல்லாதவர்களும் நம் முன்னோர்களின் கலைச் சிறப்பை உணர்ந்து அனுபவிக்கிறார்கள்.

நவாப் ராஜமாணிக்கம் கம்பெனியின் நாடகங்களைத் தேனாம்பேட்டை மைதானத்திலிருந்து ஒற்றைவாடை தியேட்டருக்கு மாற்றப் போவதாக அறிகிறோம். அங்கும் மக்கள் திரள் திரளாக வந்து நாடகங்களைப் பார்த்து மகிழ்வார்கள் என்று நம்புகிறோம்.



மனம்போல மாங்கல்யம்

'விழுந்து விழுந்து சிரிப்பது' என்று அடிக்கடி கேள்விப்படுகிறோம் அல்லவா! அதற்கு இத்தனை நாட்களாக எனக்குச் சரியான பொருள் தெரியாமலேயே இருந்து வந்தது. 'மனம் போல மாங்கல்யம்' படத்தைப் பார்த்த பிறகு அதற்குப் பொருள் நன்றாக விளங்கியது.

படத்தின் ஆரம்பத்திலிருந்து கடைசி வரையில் ஒருவர் மாற்றி ஒருவர் ஏதாவது ஒரு காரணத்தினால் விழுந்து விழுந்து நம்மைச் சிரிக்க வைக்கிறார்கள். 'கொண்டிக் குதிரைக்குச் சறுக்கியது சாக்கு' என்பார்கள். இந்தப் படத்தில் வருகிறவர்கள் விழுவதற்கும் நம்மைச் சிரிக்கப் பண்ணுவதற்கும் அந்தச் சாக்குக்கூட அவசியமாயிருக்கவில்லை. முதலில் நாகப்பாவாக நடிக்கும் சாரங்கபாணி தடாரென்று படிக்கட்டில் தடுமாறிவிழுந்து, நமக்குச் சிரிப்பூட்டுகிறார். பிறகு கதாநாயகன் சுந்தராக நடிக்கும் கணேசன் குளத்தில் தண்ணீர் எடுக்கப் போய்த் 'தொபுகடீர்' என்று விழுந்து தத்தளிக்கிறார். நாமும் சிரிப்புத் தாங்காமல் தத்தளிக்கிறோம். ஒருமாதிரி கதாநாயகியின் கையைப் பிடித்துக் கொண்டு அவர் கரையேறும் போது மறுபடியும் விழப் பார்க்கிறார். உடனேயே காதல் கடலில் விழுந்து விடுகிறார். அதுவும் நமக்குச் சிரிப்பு மூட்டுகிறது.

சஞ்சலாவின் நாட்டிய ஆசிரியர், பைத்தியக்கார ஆஸ்பத்திரியிலிருந்து தப்பி வந்த நடனப் பைத்தியம் நடேசனிடம் உதை வாங்கிக் கொண்டு, மாடிப் படிகளில் உருண்டு உருண்டு விழுந்து நம்மை விழுந்து விழுந்து சிரிக்கும்படி செய்கிறார். அப்பாவி அனுமந்துவாக நடிக்கும் ராமசாமி ரிக்ஷாவிலிருந்து தடுமாறி விழுந்து சிரிப்பூட்டுகிறார். அழுமூஞ்சியாகக் காட்சி யளிக்கும் ஊமை கிணற்றில் தண்ணீர் இழுக்கும்பொழுது புடவை கிணற்றில் விழுந்து விடுகிறது. அவன் சொல்வதைத் தவறாகப் புரிந்து கொண்ட எஜமானி அம்மாள் தன் செல்லக் குழந்தை சஞ்சலாதான் கிணற்றில் விழுந்து விட்டதாக நினைத்துக் கொண்டு கூச்சல் போட்டு நம்மைச் சிரிக்க வைக்கிறாள்.



அப்போது அங்கே வந்த நடேசன் சஞ்சலாவைக் காப்பாற்றுவதற்குக் கிணற்றுக்குள் விழுகிறான். அவனை வெளியே வரச் செய்வதற்காக நான்கு பேர்கள் சேர்ந்து தண்ணீர் இறைக்கும் கயிற்றைப் பிடித்து இழுத்து மேலே தூக்குகிறார்கள். அப்போது நடேசன் வெளியேற மறுத்து திரும்பத் திரும்பக் கிணற்றுக்குள் விழுந்து நம்மைச் சிரிப்பாய்ச் சிரிக்க வைக்கிறான்.

சஞ்சலாவும் நடேசனும் கட்டை வண்டியில் 'ஸீ-ஸா' ஆடும்போது தவறி விழுந்த சஞ்சலா அசட்டு அழுகை அழுது நம்மை மீண்டும் சிரிக்க வைக்கிறாள். நாகப்பாவின் மூக்குக் கண்ணாடிகூடக் கீழே விழுந்து நம்மைச் சிரிக்கப் பண்ணுகிறது.

கதாநாயகன் சுந்தருக்கு வயிற்று வலி வரும் போது அதைக் குணப்படுத்த வரும் வைத்தியர் அவனிடம் உதை வாங்கிக் கொண்டு போய் நாற்காலிமீது விழுந்து நமக்குச் சிரிப்பூட்டுகிறார். இப்படியே படம் முழுவதும் சிலர் விழுந்து விழுந்து நடித்து நம்மையும் விழுந்து விழுந்து சிரிக்கும்படி செய்கிறார்கள்.

'சிரித்துச் சிரித்து வயிற்றை வலிக்கிறது' என்று சொல்லக் கேட்டிருக்கிறோம். இந்தப் படத்தைப் பார்த்த பிறகு வயிற்று வலியினாலும் அசாத்தியமான சிரிப்பு உண்டாக்கலாம் என்று தெரிகிறது. சுந்தர் சஞ்சலாவின் காதலிலிருந்து தப்பும் பொருட்டுத் தனக்கு வயிற்றுவலி என்று சொல்லப்போக, அதிலிருந்து விளையும் சம்பவங்கள் நமக்கு அடக்க முடியாத சிரிப்பு வரச் செய்கின்றன.

தாயற்ற பெண்ணான மீனு, சிறிய தாயார் காமாக்ஷியின் கொடுமைகளுக்கு ஆளாகிறாள். காமாக்ஷி மீனுவைக் கிழவனான நாகப்பாவுக்கும், தன் மகள் சஞ்சலாவை இளைஞனான சுந்தருக்கும் மணம் செய்விக்க ஏற்பாடுகள் செய்கிறாள். சுந்தரின் மேல் காதல் கொண்ட மீனு ஓடிவிடுகிறாள். பிறகு பல சிக்கல்கள் ஏற்பட்டு அவை நல்லபடியாகத் தீருகின்றன. கடைசியில் மீனு தன் மனதுக்குகந்த சுந்தருக்கும், சஞ்சலா தன் உள்ளம் கவர்ந்த நடேசனுக்கும் மாலை யிடுகிறார்கள். மனம்போல் மாங்கல்யம் அவர்கள் கழுத்தில் ஏறுகிறது.

சுந்தர், நடேசன் இருவருடைய பாத்திரங்களையும் ஏற்று 'ஜெமினி' கணேசன் மிகத் திறமையாக நடித்திருக்கிறார். காதல் பைத்தியத்திலும், அசல் பைத்தியத்திலும் அவருடைய நடிப்பு சமமாகவே சோபிக்கிறது. சாரங்கபாணி கிழட்டு நாகப்பாவாகவும், சிவதாணு இரக்கமுள்ள புரோகிதராகவும் நன்கு நடித்திருக்கிறார்கள். மீனுவாக நடிக்கும் சாவித்திரி உணர்ச்சி ததும்ப நடித்திருக்கிறார். சந்தான லக்ஷ்மியும் பால ஸரஸ்வதியும் கச்சிதமாக நடித்திருக்கின்றனர்.

சபையோருக்குச் சிரிப்பூட்டும் நடிப்பில் ராமசாமி பிரமாதமாக வெற்றி அடைந்திருக்கிறார். ஈரப் 'பெயிண்ட்' பூசிய பெஞ்சியைத் தம்முடன் சேர்த்து எடுத்துக்கொண்டு போகும் கட்டம், பெஞ்சிக்கு அடியில் ஒளிந்திருந்த பைத்தியக்



கார கடேசன் அவருடைய வாழைப் பழங்களைத் திருடும் கட்டம், ரிக்ஷாவில் ஜோராக ஏறிப்போனவர் ரிக்ஷாவைத் தாம் இழுத்துக் கொண்டு ஓடும் கட்டம்,—ஆகிய இடங்களில் அவருடைய திண்டாட்டம் சபையோரின் கொண்டாட்டமாயிருக்கிறது.

படத்தின் ஆரம்பத்தில், "குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைக்க வேணு மென்பதற்காகவே இந்தப் படத்தைத் தயாரித்திருக்கிறோம். அங்கே, இங்கே நீங்கள் கண்ணீர் விட்டால் அதற்கு நாங்கள் பொறுப்பாளி இல்லை. அப்படி இப்படி ஏதேனும் கருத்துக்கள் தென்பட்டால் எங்களுக்கு ஆக்ஷேபணை இல்லை" என்று சொல்லப்படுகிறது.

குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைப்பதில் பூரண வெற்றி பெற்றிருப்பதற்காக இப்படத் தயாரிப்பாளர்களைப் பெரிதும் பாராட்டுகிறோம்.

கதாநாயகி இரண்டொரு இடங்களில் கண்ணீர் பெருக்கி நம்மைக் கட்டாயமாகக் கண்ணீர் விடச் செய்ய முயற்சிப்பதற்காகப் போனால் போகிறது என்று மன்னித்து விடுகிறோம். கருத்துக்கள் இரண்டொன்று ஆங்காங்கு இலை மறை பொருள் போலத் தோன்றினாலும், அவ்வளவு தெளிவாக வெளிப்படுத்தப் படாமையால், நமக்கும் அதிக ஆட்சேபணையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஏன்! அண்ணாவும் ஐயாவும் சேர்ந்து, அதாவது படத் தயாரிப்பாளர் பட்டண்ணாவும் டைரக்டர் புல்லையாவும் ஒத்துழைத்து இதுபோல் இன்னும் பல முழு ஜோர் ஹாஸ்யப் படங்களைத் தயாரிப்பதிலும் நமக்கு ஆட்சேபணை ஒன்றும் இல்லை. இப்போதெல்லாம் வெகு கண்டிப்பாக இருக்கும் சென்ஸார்களின் கத்திரிக்கோலுக்கு மிஞ்சிப் படம் எப்படியேனும் வெளி வந்துவிட்டால், நமக்கும் படத்தைப் பார்த்துச் சிரித்து வயிற்றைப் புண்ணாக்கிக் கொள்வதில் கொஞ்சங்கூட ஆட்சேபணை இல்லை. கண்ணீர்த் துளிகளையும் கருத்துக்களையும் சென்ஸார்கள் அடியோடு களைந்து எறிந்து விட்டுப் படத்தை வெளியில் விட்டாலும் நமக்கு ஆட்சேபணை ஒன்றும் கிடையாது

பலவித வாழ்க்கைத் தொல்லைகளிலும், மனக் கவலைகளிலும் அவதிப்படும் குடித்தனக்காரர்கள் இந்தப் படத்தை உற்சாகமாக வரவேற்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. குடும்பத்தோடும் குழந்தை குட்டிகளோடும் சென்று மூன்றரை மணி நேரம் சந்தோஷமாகச் சிரித்துப் பொழுது போக்கி விட்டு வருவதற்கு இப்படம் நல்லதொரு சாதனம். அவ்வளவு ஏன்! படத் தயாரிப்பாளர்கூட இப்படத்தைப் பார்த்து ஓரளவு தங்கள் கவலைகளை மறந்திருக்கக் கூடும் என்றால், வேறு என்ன சொல்ல வேண்டும்!

மாணவர் நாடகம்

அண்ணாமலை சர்வகலா சாலையைச் சேர்ந்த மாணவர்களின் "நடிகர் குழு" கவி ரவீந்திரநாத தாகூரின் "தியாகம்" என்ற ஆங்கில நாடகத்தை டாக்டர் ஸர் சி. பி. ராமசாமி அய்யர் அவர்கள் தலைமையில் வெகு திறமையாக நடித்தனர். இந்த நாடகத்தைப் பேராசிரியர் ஸி. ஆர். மயிலேறு எம். ஏ. அவர்கள் சிறப்பாக டைரக்ட் செய்ததுடன் வேஷமும் ஏற்று நடித்தார். நடிகர்களையும், தலைவரையும் படத்தில் காணலாம்.



வட்ட மேஜை

ராஜாஜி நிர்வாகத்துக்கு ஆபத்தா?

சென்ற சில தினங்களாக அரசியல் கடலில் புயல் உருவாகிக் கொண்டிருக்கிறது என்பது யாவரும் அறிந்ததே. அந்தப் புயலால் நாட்டுக்குச் சேதமெதுவும் விளையாது; அரசியல் கடலிலேயே புயல் உருக் குலைந்து போக வேண்டுமென்று ஆண்டவனை முதலில் பிரார்த்திப்போம். ராஜாஜியின் திறமை மிக்க நிர்வாகத்தைப் பற்றிக் குறை கூறப்படும் காரணங்கள் மூன்று. கட்சியைச் சேர்ந்த சட்டசபை அங்கத்தினர்களைக் கலந்து கொள்ளாமல் கொள்கைகளை வகுத்து நிர்வாகத்தை யதேச்சாதிகாரமாக நடத்துகிறார் என்பது முதல் காரணம். ஜனநாயகத்துக்கு விரோதம் என்பது இவர்களது கொள்கை. காங்கிரஸின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டுள்ள கொள்கைக்குப் புறம்பாக ராஜாஜி கொள்கைகளை வகுத்து நடத்துகிறாராம்! அரசாங்க மென்பது காங்கிரஸ்காரர்களுக்கு மட்டும் சொந்தமானதல்லவே. எல்லா மக்களது நலனையும் கருத்தில் வைத்துக் கொண்டு சரிசமமாக எல்லோரது உடைமை உரிமைகளைக் காக்கவேண்டிய கடமை முதலமைச்சருக்கு இருக்கும்போது அன்னாருடைய நிர்வாகத்தில் யதேச்சையாக நடக்காமல் பின் எப்படி நடப்பது! ஜனநாயகத்துக்குப் பிறப்பிடமான பிரிட்டனில், பிரதம மந்திரி எவ்வாறு ஆட்சி நடத்துகிறார் என்பதை, ராஜாஜியைக் குறைகூறும் ஜனநாயக சட்டசபை காங்கிரஸ் வாதிகளில் பலர் அறிந்திருக்க மாட்டார்கள். மந்திரி சபை என்பது காங்கிரஸில் காரியக் கமிட்டியைப் போன்றதுதானே.

இரண்டாவது காரணம் காங்கிரஸில் சேராதவரை மந்திரி ஆக்கினது. ஸ்ரீமதி ஜோதி அம்மாள் அவர்களை மந்திரியாக்கியதைக் குறை கூறும் காங்கிரஸ் பக்தர்கள் ராஜாஜி மந்திரிப்பதவி ஏற்ற போது, ஸ்ரீ மாணிக்கவேல் நாயக்கரை மந்திரியாக தேர்ந்தெடுத்த பொழுது ஆட்சேபனை ஒன்றும் சொல்லவில்லையே! மேலும் ஒரு பெண்மணியை மந்திரியாகத் தேர்ந்தெடுத்தது மகிழ்ச்சிக் குரியதும் பாராட்டத்தக்கது மல்லவா! அதிலும் அரிஜன வகுப்பைச் சேர்ந்தவராகத் தேர்ந்தெடுத்ததும் அவர் காங்கிரஸ் கட்சியைச் சேராதவராக இருந்தபோதிலும் அவரை அழைத்து மந்திரி பதவி கொடுத்ததின் மூலம், காங்கிரஸில் சேராமல் விலகி நிற்கும் அறிவாளிகளுக்கும் காங்கிரஸில் சேரும்படி விடுத்த மறைமுக வேண்டுகோள் அல்லவா!

மூன்றாவது டகர் ஓய்வுபெற்ற உத்தியோகஸ்தர்களில் பலரைத் திரும்பவும் அரசாங்க உத்தியோகத்தில் அமர்த்தியது. இன்று அரசாங்க நிர்வாகத்தின் சட்டப்படி ராஜாஜி பதவிப் பொறுப்பை ஏற்கும் வயதுக்குட் பட்டவரா! இல்லையே! நாட்டின் நிலைமையை அறிந்துதானே ராஜாஜியை அன்று வருந்தி அழைத்தார்கள். அவரது அறிவும் சேவையும் தேவையென்று எப்படி எண்ணி அழைத்தார்களோ, அதைப் போல அவரும் தமது நிர்வாகத்துக்கு, வயதின் காரணமாகப் பதவியை விட்டு விலகிப்போன திறமை மிக்க அறிவும் ஆற்றலுமுள்ள சகாக்களை அரசாங்க ஊழியத்தில் நியமித்தது எப்படிக் குற்றமாகும்!

ஆகவே பதவிப் பித்துக்கும், காண்டிராக்ட் ஆட்சிக்கும், ராஜாஜியின் உதவி கிடைக்காதென தெரிந்ததும் ராஜாஜியின் ஆட்சியைக் குறைகூறி கவிழ்க்கத் தொடங்குவது, ஜனநாயகத்தைக் கவிழ்ப்பதும் பயங்கர ஆட்சிக்குப் பாதை போடுவதுமாகும். ராஜாஜியின் ஆட்சியைப் பெரும்பான்மை சட்டசபை அங்கத்தினர்களின் ஆதரவு கொண்டு கவிழ்த்து விட்டுப் புதுத் தலைவரும், புது மந்திரி சபையும் இந்நாட்டில் ஏற்படுவது, இப்பொழுதுள்ள சூழ்நிலையில் விரும்பத் தக்கதல்ல. அதை விட கவர்னர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டு சட்டசபையைக் கலைத்து, பொது மக்கள் அபிப்பிராயத்துக்குத் தேர்தல் நடத்தி விட்டு விடுவதே நலம்.

மதுரை
12—11—53

எஸ். அப்துல் ரஸாக்
பி. ஜகந்நாதன்

●

இனிய தீபாவளி

குதூகலமான தீபாவளிப் பண்டிகையின் கொண்டாட்டம், மங்கள ஸ்நானம், புத்தாடை அணிதல், பட்டாசு சுடுதல், விருந்து உண்ணுதல், இத்யாதி வைபவங்களுடன் நில்லாமல், வழக்கம் போல 'கல்கி' தீபாவளி மலரைப் பார்த்தும் படித்தும் அடையும் பேரானந்தத்துடன் இனிதே நடந்தேறியது.

பாதாம் அல்வா தித்திக்கிறது; ரோஜா புஷ்பம் அழகும், மணமும் ஒருங்கே அமைந்து விளங்குகிறது; மயில் ஆடுகிறது; குயில் அமர கீதம் இசைக்கிறது-இவை போன்ற உலகத்து நியதிகளுக்குள் எப்படி மாறுபட்ட எதிரிடைத் தன்மை கிடையாதோ, அது போலத்தான் 'கல்கி' தீபாவளிமலர் மிக அற்புதமாக அமைந்திருக்கிறது என்று சொல்லுவதிலும் மகத்தான உண்மை அடங்கி யிருக்கிறது.

ஸ்ரீமான்கள் மணியம், சந்திரா, ராகவன் இவர்களின் அமர சித்திரங்களும், கனுதேசாய், ஸ்ரீமதி இருவருடைய ஓவியங்களும், ரகு. சாமா முதலியோரின் ஹாஸ்ய விருந்தும் மலரின் அழகுக்கு அழகு சேர்த்திருக்கின்றன.

கதைகளைப் பற்றி நான் எப்படித்தான் சுருக்கமாக விமரிசனம் செய்வேன்! மதிப்புக்குரிய நம் மாபெரும் ராஜாஜி எழுதியுள்ள 'பாதுகா பட்டாபிஷேக'த்திற்கு ஈடாக அதையேதான் சொல்ல வேண்டும். மற்றும், பரதன், தி. ஜானகிராமன், லோமாஸ், எஸ். வி. வி., பகீரதன் முதலியோரின் விஷய தானங்களும் தனிச் சிறப்புடையனவாகவே திகழ்கின்றன.

சென்ற சில வருஷத் தீபாவளி மலர்களில் நாங்கள் அடையாத மகத்தான பாக்கியத்தை இவ் வருஷம்தான் அடைந்திருக்கிறோம்.

பல வருஷங்களுக்குப் பிறகு ஜயம் பேட்டைக் கந்தப்பனைச் சந்திப்பது பாக்கியத்திலும் மகத்தான பாக்கியமல்லவா! முன் தடவைகளில் அவர் சொல்லிய ' திருவாரூர் செங்கொழுந்து'' ''வீணை பவானி'' முதலிய அமர கதைகளைப் போல, ''நாடகக்காரி''யும் என்னை மெய் சிலிர்க்கச் செய்து விட்டது. அதற்காகப் பல்லாயிரக் கணக்கான 'கல்கி' அன்பர்களின் சார்பில் நன்றியையும், மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை
13-11-53

நா. பாலசுப்ரமண்யம்



ஒற்றைத் தலைவலி ஒழிந்ததால்

பல வருஷங்கள் யௌவன மடைந்தது போன்று உணர்கிறேன்

"பல வருஷங்களாக நான் இரத்த அழுத்தத் தலைவலியால் (Migraine) அவதி யுற்றேன். ஒரே தடவை மூன்று நான்கு நாட்கள் கடும் தலைவலியால் அவதிப்படுவது எனக்கு வெகு சகஜம். சுமார் மூன்று மாதங்களுக்கு முன், நிவர்த்தி எதிர் பாராவிடினும், மனமுடைந்து போனதினால், தினந்தோறும் தவறாமல் கொஞ்சம் க்ருஷன் உட்கொண்டு வந்தேன். முதல் வார முடிவில் தலைவலி ஏகதேசமாகக் குறைந்து விட்டது; மூன்றாவது வாரத்தில் அறவே மறைந்தொழிந்தது."–C.W C.

கடுமையானதும் தீராததுமான தலைவலி உட்புற அவயவங்கள் அபாயத்துக்குள்ளா யிருக்கின்றன என்பதற்கறிகுறி. விஷத் தன்மை வாய்ந்த கழிவுப் பொருள்கள் ஒழுங்காக வெளியேற்றப் படாமல் உட்புறமே சேமிக்கப் படுகின்றன. இவ் விஷங்களை ஒழித்து அவை மறுபடியும் உண்டாகாமல் தடுங்கள்—தலைவலிகள் தாமே போய்விடும் நிரந்தரமாக. "க்ருஷன்" இப்பணியைச் செய்வதால் துரிதமான நிவாரணத்தையும் புத்துணர்ச்சியையும் அளிக்கிறது.

"க்ருஷன்" உங்கள் ஆரோக்கியத்திற்கும் ஆனந்தத்திற்கும் உதவுகிறது

KSA 3



அன்றலர்ந்த மலர்போல்
புதுமையாகவும் மோகன காந்தியுடனும் விளங்குங்கள்...

ஹமாம் புதிய
வாசனை பொருந்தியது...
அதிக நாள் வரவும்
செய்கிறது!

ஹமாம்

டாய்லட் ஸோப்பு

உபயோகியுங்கள்

தி டாடா ஆயில் மில்ஸ்
கம்பெனி லிமிடெட்

டாடா தயாரிப்பு

மெம்பர், இந்தியன் சோப் அன்டு டாய்லட்ரீஸ் மேக்கர்ஸ் அஸோஸியேஷன்



புயலுக்குப் பின்

சோலை - இருசன்

பேரிரைச்சலுடன் வந்து கொண்டிருந்த பெங்களூர் மெயிலின் ஊதல் சத்தம், வீட்டு ரேழியில் ஈஸிசேரில் சாய்ந்தவாறு எதையோ தீவிரமாகச் சிந்தித்துக் கொண்டிருந்த அம்பலவாணரின் சிந்தனையைத் தட்டி எழுப்பியது. "கேத்ரா! மெயில் வந்து விட்டது. நான் கொஞ்சம் ஸ்டேஷனுக்குப் போய்வருகிறேன்!" என்று எழுந்தார் சலிப்புடன்.

"மெயில்லே யார் வராங்க, அப்பா?"

"வேறு யாரம்மா வரப் போகிறார்கள்! எல்லாம் உன்னைப் பார்க்கத்தான். பெங்களூரிலிருந்து ஒரு மாப்பிள்ளை வீட்டார் வருகிறார்கள்" என்று சொல்லிப் புறப்பட்டுப் போய் விட்டார் அம்பலவாணர்.

கேத்ராவின் சிந்தனைத் தொடர், கட்டறுத்துக் கொண்டு ஓடியது.

* * *

புள்ளிமான்போல் துள்ளித் திரிந்த அவளுடைய அமைதியான உள்ளத்தில் புதுமையைப் புகுத்தியது அந்த ஒரு நாள்......

பாலாற்றில் புது வெள்ளம் செம்மண்ணைக் கரைத்தது போலக் கழித்துப் புரண்டோடியது. மாலைக் கதிரவனின் தங்க நிற ஒளிப் பிழம்புகள், பாய்ந்தோடும் நீரில் பட்டு அழகு மயமாக மின்னிக் கொண்டிருந்தன.

கற்பனைப் பெருங் கடலில் மிதந்து கொண்டு, தோப்பிலிருந்த ஒரு தென்னை மரத்தில் சாய்ந்தவாறு "எத்தனை கோடி இன்பங்கள் படைத்தாய், இறைவா!" என்று இயற்கையைப் பார்த்து வியந்து கொண்டிருந்தான் சேகர். தெளிந்தோடிய பூங்குளிர்த் தென்றல் அவன் உடலைத் தொட்டுத் தடவியது. அருகிலிருந்து ஒரு ஒற்றைச் சமாதி அவனுக்கு ஒரு அச்சத்தை அளித்தது. அந்தச் சமாதிக்கு நேர் எதிரில் ஒரு இலவம் பஞ்சு மரம். அதில் இனம் பிரிக்கமுடியாத பறவைகள் இன்ப கீதம் இசைத்துக் கொண்டிருந்தன. இதிலெல்லாம் சிந்தனையை ஓட விட்டுக் கொண்டிருந்த சேகரனுக்கு ஆற்றில் எழுந்த சலசலப்பான சப்தம் கண்டி விழுத்தது. நிறைந்த ஆற்றை அதிசயமாகப் பார்த்துக் கொண்டே, கேத்ரா குடத்தில் நீரை நிரப்பினாள்.

இன்பலினையில் நெகிழ்ந்து கொண்டே, இன்னும் ஒரு அடி முன் தள்ளி வைத்தாள் கேத்ரா. ஒரு விநாடிதான்! "ஐயோ!" என்னும் பயங்கரச் சத்தம் சேகரைத் திடுக்கிட வைத்தது.

அவள் வெள்ளச் சுழலிலிருந்து தப்பிக்கப் போராடிக் கொண்டிருந்தாள். பருவ மங்கையாயிற்றே, தொட்டுத் தூக்கலாமா? யோசிக்க நேரமில்லை. அடுத்த கணம் ஒரே பாய்ச்சலில் அவளை வாரித் தூக்கிக் கரையில் கொண்டு வந்து தோப்பு மணலில், தன் மடியில் அவள் தலையைக் கிடத்திக் கொண்டு திரும்பித் திரும்பிப் பார்த்தான். யாராவது வந்துவிடப் போகிறார்கள் என்கிற அச்சம். ஆயினும் அவள் கண்களை எப்பொழுது திறப்பாள் என்று வெகு ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

பால் நிலவின் ஒளியில், கேத்ராவின் முகமும் நிலாவைப் போலவே பிரகாசித்தது. சற்றே நினைவு வந்து விழிகளை விரித்தாள்.

தன் அருகில், ஈரம் சொட்டச் சொட்ட ஒரு வாலிபன் எழுந்து நிற்பதை உணர்ந்தாள். லேசான இருள்; வெட்கத்திற்கும் உணர்வுக்கும் போர்; தடுமாறினாள் கேத்ரா. பிறகு ஒவ்வொன்றாக நினைவுக்கு வந்து ஊகித்தறிந்தாள். குளிர் சூடாக மாறியது. இத்தனை நாட்களும் காலியாகவே இருந்த அந்த இரு இளம் உள்ளங்களும் பெரும் பாரங்களை ஏற்றுக் கொண்டன!

யுக யுகாந்திரமாகப் பேசித் தீர்க்க வேண்டிய விஷயங்களை, எல்லாம் அந்த அமைதியான தென்னந் தோப்பிலேயே பேசிப் பரிமாறிக் கொண்டார்கள்.

"கேத்ரா, இன்னமும் பயமா?"

"நீங்கள் இருக்கும்போது எனக்கென்ன பயம்? மறுபடியும் ஆற்றில் தவறி விழுந்து விடலாம் போலிருக்கிறது!"

"ஏன்?"

"ஏன், இல்லாவிட்டால் நீங்கள் எப்படி...?" ஒளி விழி பேசித் தீர்த்து விட்டன.

"என்னை மறந்துவிடுவாயா கேத்ரா?"

"மறப்பதா, அது ஆண்கள் வர்க்கத்துக்குத் தானே சர்வ சாதாரணம்."

"ஈரப் புடவையோடேயே இருக்கிறாயே, உனக்குக் குளிரவில்லையா?"



நேருஜி

நவம்பர் மீ 11உ நேரு ஜயந்தியை முன்னிட்டுச் சென்னைத் தேசிய வாலிபர் சங்கம், முத்தியாலுபேட்டை யவர் காங்கிரஸ். 11-வது 12-வது டிவிஷன் காங்கிரஸ் கமிட்டிகளின் சார்பில் ஸ்ரீ மல்லிகேஸ்வரர் ஆலயத்தின் முன்னிலையில் மாபெரும் பொதுக் கூட்டம் நடந்தது. ஸ்ரீ எம். சண்முகம் செட்டியார் தலைமையில், முதன் மந்திரி ராஜாஜி நிதி மந்திரி ஸ்ரீ சி. சுப்பிரமணியம், நகரசபை உறுப்பினர் ஸ்ரீ கே. என். சினிவாசன், ஸ்ரீ சின்ன

"இல்லை, குளிரே இல்லை; நீங்கள் அருகில் இருக்கும்போது சூடான காற்றுத்தான் வீசுகிறது. அது சரி...உம்..."

"அதோ பார் நேத்ரா! தென்னை மரங்களுக்கிடையே ஓடி ஒளிந்து விளையாட்டுக் காட்டுகிறான். முழுமதி."

அவள் முகத்தை வெடுக்கென திருப்பிக் கொண்டாள்...வெட்கம். அவனை நன்றி கூறக் கூட விடாமல் தடுத்து அவனிடமிருந்து பிரியச் செய்து விட்டது.

நினைவுகள் தடைப்பட்டு விட்டன. கவனினைவு பெற்றாள், நேத்ரா. சேகரை மறக்கலாமா? முடியுமா...? முடியாதுதான்...!

'நீ அவனைப் பார்த்து இரண்டு வருஷத்திற்கு மேலாகிவிட்டதே? எப்போதோ இந்த ஊருக்குப் போஸ்ட்மாஸ்டராக வந்த யாரோ ஒருவனை நம்பி உன் வாழ்க்கையை இனி எத்தனை நாட்களுக்கு வீணாக்க நினைக்கிறாய்?' அவள் இதயம் இப்படிப் பலப்படப் பேசியது.

* * *

'ஜில் ஜல்' என்ற சதங்கைச் சத்தத்தைக் கேட்ட நேத்ரா, வாசலில் போய் எட்டிப் பார்த்தாள். வந்த வண்டி அவள் வீட்டு வாசலில் நின்றது. வண்டியிலிருந்து இறங்கியவரை "வாங்கோ, லட்சுமணசாமி!" என்று அவள் அப்பா வரவேற்றார். ஸ்ரீமான் லட்சுமணசாமியினுடன் ஒரு அம்மாவும் இறங்கி வந்தார்கள். அந்த அம்மையார், வந்தவருடைய மனைவியாக இருக்க வேண்டும் என்று சந்தேகமறத் தெரிந்தது.

"உன்னைப் பார்க்க மாப்பிள்ளை வீட்டார் வருகிறார்கள்!" என்று சற்றுமுன் அவள் அப்பா கூறிவிட்டுப் போனது நினைவுக்கு வந்தது. நேத்ராவுக்கு. 'அப்படியானால்...... என் சேகர்...?' அவள் உள்ளம் குமைந்தது.

குடும்பத்தில் நேரும் எத்தனையோ கஷ்டங்களையும். பொறுமையோடு தாங்கும் தன் தந்தையைப் பார்த்தாள். துயரத்தோடேயே வாழ்ந்து, வாடி வதங்கி நிற்கும் தன் அன்னையைப் பார்த்தாள். இத்தகைய வேதனையான சூழ்நிலையிலேயே வளர்ந்த தன் நிலையையும், மத்தியில் தான் அடைந்த இன்பத்தையும், சேகரன் உறவையும், நினைந்து நினைந்து அவள் மருகினாள்.

வந்தவர்களைத் தந்தை மகிழ்ச்சியோடு உபசரித்தார். இதைப் பார்த்த நேத்ராவின் உள்ளம் மட்டும் விடியாத இருளாகவே ஏனோ குமைந்து கொண்டிருந்தது.

அம்பலவாணர் தோட்டத்துப் பக்கம் போயிருந்தார். வீட்டின் உள் அறையில் விம்மும் ஒலி கேட்டு நேத்ராவின் அறையில் வந்து எட்டிப் பார்த்தார்கள், லட்சுமணசாமியும். அவரது மனைவி சரஸ்வதியம்மாளும். கண்ணீர் மறைக்க, ஒரு புகைப் படத்தைக் கையில் வைத்துக் கொண்டு நேத்ரா தான் விம்மிக் கொண்டிருந்தாள். அவர்கள் சத்தம் செய்யாமல் திரும்பி விட்டார்கள்.

"அவள் ஏன் அழ வேண்டும்? அவள் நல்வாழ்வுக்கு நாம் ஏதாவது குறுக்கே நிற்கிறோமா? இந்தக் கல்யாணத்தில் பெண்ணுக்கே இஷ்டமில்லை போலிருக்கிறதே!" என்றார் லட்சுமணசாமி.


"ஒன்றும் புரியலையே......?"

"ஹாம்.. புரியலையா...? இந்தக் காலத்துப் பெண்களைத்தான் தெரியுமே...! கல்யாணத்திற்கு முன்னேயே காதல்......"

"அப்படி ஏதாவது......?"

பிறந்த நாள்

அண்ணாமலை ஆகியவர்கள் பேசினார்கள். பிரசங்க மேடையில் வீற்றிருந்தவர்களையும், கூடியிருந்த மாபெரும் கூட்டத்தில் ஒரு பகுதியையும் படங்களில் காணலாம். உட்கார்ந்திருப்பவர்களுக்கு அப்பால் வெகுதூரத்துக்கு வரிசை வரிசையாக ஜனங்கள் நிற்பதைக் கவனிக்கவும். இக் கூட்டத்தில் ராஜாஜி தம்மை முதன் மந்திரிப் பொறுப்பிலிருந்து விடுவிக்கச் செய்யப்படும் முயற்சிகளைப் பற்றி விவரமாகப் பேசியது தினப் பத்திரிகைகளில் வெளியாகியிருக்கிறது.



"அவன் கையிலேதான் பாரேன்! யாரோ ஒரு பையன் படம்!" என்றார் லட்சுமண சாமி. தம் மனைவியிடம்

உண்மை அதுவாகத்தான் இருக்க வேண்டுமென்று எண்ணிய அவரது மனைவியும் "சரிதான்!" என்று தலையசைத்தாள். அவர்கள் தங்களுக்குள் ஏதோ பேசி ஒரு முடிவுக்கு வந்து விட்டார்கள்.

ஆயினும், ஊருக்குப் போய்க் கடிதம் எழுதுவதாகச் சொல்லி விட்டு, அன்று மாலை அவர்கள் இருவரும் புறப்பட்டு இரவு ரெயிலுக்குச் சென்றார்கள்.

இருள் கவிந்து விட்ட நேத்ராவின் உள்ளம் போல் கரிய இருள் உலகைப் போர்த்தி மௌனத்தில் ஆழ்த்தியது.

* * *

அன்று வந்த அந்தக் கடிதம் அம்பலவாணர் உள்ளத்தில் மீளாத துன்பத்தைத் தான் படிய வைத்தது. ரணத்தில் வேல் செருகுவது போலிருந்தது அந்தக் கடிதம்.

நேத்ரா யாரைக் காதலிக்கிறாள்? அவளுடைய தங்க இதயத்தில் இந்தப் பித்தனை எண்ணம் எப்போது உறைந்தது? இது உண்மையாக இருக்குமா? இருக்காது, இருக்கவே இருக்காது.

ஏழையான என் மகளைத் தம் மகனுக்கு மணந்து கொள்ள லட்சுமணசாமிக்கு விருப்பமிருக்காது. அதனால்தான் ஒரு பொய்யைக் கிளப்பி விட்டிருக்கிறார் லட்சுமணசாமி.

அந்தக் கடிதம் தந்த குட்டினால் வெந்து கருகிக் கொண்டிருந்தார் அம்பலவாணர்

அந்தச் சமயம் "சார், தபால்!" என்ற குரல் கேட்டு எழுந்து போய் வாங்கினார்.

கவரில் நேத்ராவின் முகவரி இருந்தது. பம்பாயிலிருந்து வந்திருந்தது. தனக்குத் தெரியாமல் அவளுக்குத் தனிப்பட. அதுவும் கலியாணம் ஆகாத பெண்ணுக்குக் கடிதம் எழுத யார் இருக்கிறார்கள்? குழப்பம், பீதி! பெரும் புயலுக்கிடையே கடிதத்தைப் பிரித்துப் படித்தார் அம்பலவாணர்.

இதயம் நிறைந்த முழுமதி!

உயிர் நேத்ரா. ஆம், அன்பு. மீண்டும் சந்திக்க முடியாமைக்கு வருந்துகிறேன். எனது இன்ப நினைவுகள் பல. என்னையு மறியாமல் என் உள்ளத்தைக் கவர்ந்து கொண்டாய்! ஆனால், நாம் நினைப்பதெல்லாம் நடந்து விட்டால் மனிதர்கள் தேவர்களாகி விடலாமே! கற்பனைப் பானேன். காலம் சதி செய்து விட்டது நேத்ரா! நான் கண்ட இன்பக் கனவுக்குத் தடை வந்து விட்டது. என் தந்தையின் கடிதம் எனக்குக் கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்து வருவதாக வந்தது. என் உள்ளம் எப்படி இசையும்! அதற்கேற்றாற்போல் என்னைப் பம்பாய்க்கு மாற்றி விட்டார்கள். காலம் மாறட்டும்; புயல் ஓயட்டும்; விரைவில் சந்திக்கிறேன். என்றும் நீ எனது நேத்ராதான். காத்திரு. அன்புள்ள,

சேகர்.

கடிதம் முடிந்தது. விழிகளைப் பின் பக்கமாகத் திருப்பினார் அம்பலவாணர். கடிதத்தைப் பின்புறமாக இருந்து படித்த நேத்ராவின் கண்கள் குளமாயின. உள்ளம் வேதனையால் விம்மியது. சுற்றிப் படர இருந்த முல்லைக் கொடி, கடுமையான புயலில் சிக்குண்டு சீர்குலைந்து விட்டது. அவள் நிலையும் அதேதான். அம்பலவாணரின் கண்கள் தீப் பந்தமாயின.

முதல் கடிதத்திலிருந்த பின் கண்ட வரிகள் அவர் கண் முன் வந்து நின்றன.

"......தங்கள் குமாரத்தி வேறு யாரையோ காதலிக்கிறுள் போலிருக்கிறது. அதற்கு நாங்கள் குறுக்கே நிற்க விரும்பவில்லை."

லட்சுமணசாமி.

அந்தக் கடிதம் எழுப்பிய சந்தேகம் இந்தக் கடிதம் நீக்கி விட்டது. தன் பார்வையில் விரிந்து கிடக்கும் அந்தக் 'கடிதம் ஒரு பயங்கரமான விஷக் கோப்பையாக இருந்தது.

நேத்ரா மீண்டும் அந்தக் கடிதத்தைப் படித்தாள். 'என்னை ஆபத்திலிருந்து மீட்டாரே சேகர். நன்றியின் காரணமாக அவரிடம் அன்பு காட்டுவது அடாத செயலா? இது தான் நான் அடையப் போகும் இன்ப வாழ்வா?' என அழுது தீர்த்தாள். காந்தம் இழைத்தோடிய கண்களில் துயரும், துன்பமும் குழைந்து அப்பியது போலிருந்தது. வண்ண வதனத்தில் சாந்த மிழந்த ஏக்கத்தின் ரேகை படர்ந்து கிடந்தது. சுழன்று அடித்த சூருவளியால் சிக்கி அலைமோதிக் கொண்டிருந்தது. அவள் மனம்.

ஏதோ முடிவுக்கு வந்தவள் வாசல் பக்கம் விழிகளைச் செலுத்தினுள். காலையில் படித்த பத்திரிகையில் அவள் சிந்தனை நிலைத்தது. இனியும் தாய் தந்தையர்களுக்குப் பாரமாக இருக்க அவள் விருப்ப வில்லை. நர்ஸ் பயிற்சி அவள் எண்ணத்தைக் கவர்ந்தது. ஒரு சரியான முடிவுக்கு வந்து விட்டாள்.

வேதனையில் வாடிக் கிடக்கும் தாய், தன்னுல் ஏற்பட்ட சிறுமையில் தளர்ந்து கிடக்கும் தந்தை......கண்ணீர் தரையை ஈரமாக்கியது. பாசம் வலை பின்னியது. ஆயினும்......

"விரைவில் சந்திக்கிறேன்; என்றும் நீ எனது நேத்ராதான்; காத்திரு!"

இச்சச் சிறு வாசகம் மட்டும் அவள் மனத்தில் அப்படியே படிந்து விட்டது!

"ஆம், என் சேகரை அடைந்து நல் வாழ்க்கை ஏற்பட வேண்டுமானுல் இப்போதைக்கு நர்ஸ் பயிற்சிக்குப் போய்த்தான் ஆக வேண்டும்" என்று மனதிற்குள் தீர்மான மான திட்டத்தை உருவாக்கிக் கொண்டாள்.

* * *

நள்ளிரவு; பேயுறங்கும் அமைதி. விண் மீன்கள் சிந்திச் சிதறிக் கண்சிமிட்டிக் கொண்டிருந்தன. எங்கோ ஒரு நாய் ஊளையிட்டுக் கொண்டிருந்தது எல்லோரும் ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தார்கள். நேத்ராவுக்கு மட்டும் தூக்கம் வரவில்லை. அவள் திட்டத்தைச் செயல் படுத்தப் போகிறுள் அல்லவா?

மெதுவாக எழுந்து வீதிக்கு வந்தாள். புதுமையான உணர்வு கொண்டதுபோல ஒரு சுறுசுறுப் படைந்தாள். யாரேனும் தன்னைக் கவனிக்கிறுர்களா என்கிற அச்சம் ஒரு பக்கம். இருந்தும் நடந்தாள். முக்காடு போர்த்திக் கொண்டு நெடிய உருவமாக ரயில் நிலையத்தை அடைந்தாள். அரிக்கன் லாந்தர்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக மங்கி ஒளி உமிழ்ந்து கொண்டிருந்தன.

"பெங்களூர் மெயில் இன்னும் வரலிங்களா?" மங்கலான வெளிச்சத்தில் யாரோ ஒரு ஆடவனைப் பார்த்துக் கேட்டாள்.

"எங்கே போகணும்?"

"சென்னைக்கு!"

ஒரு வி நிமிஷம், பதில் சொல்ல வேண்டியவன் மௌனமாக யோசித்தான். எப்போதோ பழகிய குரல் போலிருப்பதாக நினைப்பு அவனுக்கு. அவள் பதிலுக்காக அவன் அங்கே காத்துக் கொண்டிருக்கவில்லை. நேரே புக்கிங் ஆபீசுக்குப் போய்க் கொண்டிருந்தாள். அந்த நடையிலிருந்து அவள் யார் என்று அவன் தெரிந்து கொண்டான்.

"நேத்ரா!......"

"ஊ...ம்..." என்று திரும்பியவள் அங்கே சாட்சாத் சேகரே நின்று கொண்டிருந்ததால் என்ன பேசுவது என்றே தோன்றுமல் அவள் வாயடைத்துப் போனுள். அழுகை நிலை கொள்ளவில்லை. அழுதாள். அழுது கொண்டே நடந்ததைச் சொல்லி முடித்தாள்.

"நீங்கள் ஏன் இப்படிச் சொல்லாமல் கொள்ளாமல் போய்விட்டீர்கள்?" என்றுள்.

"அதற்குச் சரியான பலனை அடைந்துவிட்டேன். சற்றும் எதிர்பாராமல் உன்னைக் கடைசியாகப் பார்த்த அன்றைக்கு மறுநாளே என்னைப் பம்பாய் ஆபீசுக்கு மாற்றிவிட்டார்கள். சொல்லிவிட்டுப் போகவும் வசதியில்லை. கடிதம் எழுதவும் சங்கடம்—எப்படி, யாருக்கு என்று எழுதுவது? நேரில்தான் போகிறோமே என்றிருந்தேன். அப்படியும் இரண்டு மாதங்களுக்கு முன் ஒரு கடிதம் எழுதி யிருந்தேனே? கிடைத்ததா?" என்றுன் சேகர்.

"இரண்டு மாதத்துக்கு முன்பாக ஏதும் கடிதம் வரவில்லையே? நேற்றுதான் ஒரு கடிதம் வந்தது...இதோ அந்தக் கடிதம்" என்று எடுத்துக் காட்டினுள்.

"தேதியைப் பார்...இந்தக் கடிதம் எழுதி இரண்டு மாதமாகிறதா இல்லையா வென்று. நான் லீவில் இருந்த ஒரு நாள் இந்தக் கடிதத்தை எழுதி ஒரு நண்பரிடம் கொடுத்துத் தபாலில் சேர்த்துவிடச் சொன்னேன். அது தவறி விட்டிருக்கிறது......

"அப்புறம் என் தந்தை பெண் பார்க்கப் போவதாகக் கடிதம் எழுதினுர். கடிதத்தோடு பெண்ணின் போட்டோவும் வந்தது. என்ன ஆச்சரியம்... அது எனது ராணி நேத்ராவின் படம்! ஆனுல் என்ன துர்ப்பாக்கியம் நேர்ந்து விட்டது நேத்ரா! நான்கு நாட்களுக்கு முன் என் தந்தை எழுதிய கடிதத்தில் நீ வேறு யாரையோ விரும்புவதாகவும் இந்த சம்பந்தத்தை நிறுத்திவிட வேண்டியது தான் என்றும் எழுதி யிருந்தார்.

"அதைத்தான் நேரில் பார்த்து விடலாமே என்று நேற்று, காலை விமானத்தில் பெங்களூருக்கு வந்து, அங்கிருந்து மெயிலில் புறப்பட்டு வந்து சேர்ந்தேன்......நீ என்னடாவென்றால்......" என்றான் சேகர்.

"நான் என்ன செய்வேன்?"

"ஆமாம், நீ ஏதோ போட்டோவை வைத்து அழுது கொண்டிருந்ததாக என் தந்தை எழுதினாரே......அது உண்மையா? என்னை மணக்க உனக்கு விருப்பமில்லா விட்டால் தாராளமாய்ச் சொல்லி விடு. அது இரண்டு பேருக்குமே நல்லது!" என்றான்.

"ஓ, அதுவா? வாருங்கள் போவோம்...... அவரைக் காண்பிக்கிறேன்: இப்போது நான் ஊரை விட்டே போக இருந்ததும் அவருக்காகத்தான்......" என்று கூறிக்கொண்டே நடந்தாள், வீட்டுக்கு.

* * *

அதே இரவில், வெந்து வெம்பிய அம்பலவாணர் பூத்த புது மலர் போல் பூரித்தார். தம் புதல்விக்கு வரப்போகும் அதிர்ஷ்டத்தை எண்ணி எண்ணி வியந்தார். எல்லாம் அம்பிகையின் அருள் என்று மனசுக்குள் பிரார்த்தித்துக் கொண்டார்.

"அந்தப்..." சேகர் முடிக்கவில்லை.

"இதோ, வந்து விட்டேன்" என்று புள்ளி மான் போல் துள்ளி ஓடினாள், தன் அறைக்கு.

வில்லிலிருந்து விடுபட்ட அம்பாகத் திரும்பி வந்து அந்தப் புகைப் படத்தை அவன் கையில் கொடுத்தாள்.

"இது என் படமாச்சே? இதைத்தான் அன்று வைத்து அழுது கொண்டிருந்தாயோ? குறும்புக்காரி" என்று அவள் தாடையில் இலேசாகத் தட்டப் போனான். அவள் பின்னுக்கு நகர்ந்து ஓடினாள்.

"இந்தப் படம் ஏது உனக்கு?"

"போட்டோ ஸ்டுடியோவில் விளம்பரச் சட்டத்தில் மாட்டி வைத்திருந்தது. என் தோழி ஒருத்தியின் பிறந்த தின விழாவுக்குப் போட்டோ எடுக்கப் போனபோது எதேச்சையாகப் பார்த்து, வாங்கி வைத்திருந்தேன்!"

"நேத்ரா......!"

"அத்தான்......!"

"என்னை மன்னித்து விடு நேத்ரா...... குழம்பிலே......"

இன்பத்தின் எல்லைக் கோட்டிலிருந்த காதலர்களைத் தென்னந்தோப்பின் சலசலப்பான சத்தம் தெளிவுறச் செய்தது.

இதுவரை அந்தக் காதலர்களின் மத்தியில் வீசிய கடும் புயல் மறைந்து போய் இப்போது மென் தென்றல் இனிய பண்பாடக் காத்துக் கொண்டிருந்தது.



பாவம், அந்தக் குட்டி யானையின் கதி கடைசியில் அப்படியா ஆகவேண்டும்? 'அரோகரா சர்க்கஸ்' கம்பெனியில் நேற்று வரையில் பேரும் பெருமையும், சீரும் சிறப்புமாய் வளர்ந்த யானை அது. இன்று நடுத் தெருவில் நின்றது. அந்த யானைக்கு அன்று அசாதிய கோபம். கோபம் வராமல் என்ன செய்யும்? முதல் நாள் அதற்கு என்னவோ சிறிது உடம்பு அசதியாய் இருந்தது. அதனால் அன்று சர்க்கஸ் கூடாரத்துக்கு வரச் சண்டித்தனம் செய்தது. சர்க்கஸ் முதலாளிக்கு ஆத்திரம் ஆத்திரமாய் வந்தது. சாட்டையால் 'வெளு, வெளு' வென்று வெளுத்து விட்டான். இத்தனை வருஷங்களாய் நாயைப் போல் வாலைக் குழைத்துப் பல அற்புத வேலைகள் செய்து காட்டி, பணத்தை மலை மலையாய்ச் சம்பாதித்துக் கொடுத்ததற்குக் கிடைத்த மரியாதையைக் குறித்து யானைக்கு மிகவும் வருத்தம் ஏற்பட்டது. "இந்த மனித வர்க்கமே நன்றி கெட்ட ஜன்மங்கள். சரி, இனிமேல் ஒரு விநாடிகூட இவனுக்கு உபகாரம் செய்யக் கூடாது. இங்கிருந்து கிளம்பிப் போய் விடுகிறேன். அப்பொழுதுதான் என் அருமை தெரியும்" என்று எண்ணியது.

மறு நாள் குளிப்பாட்ட யானையை ஆற்றுக்கு அழைத்துச் சென்றபொழுது அடம் செய்து தப்பித்துக் கொண்டு கிளம்பி விட்டது. கிளம்பி வெகு வேகமாய் அந்த ஊரைக் கடந்து அடுத்த ஊருக்கு வந்தது. அப்படி வரும் பொழுது, வழியில் ஒரு மண்டபத்து வாயிலில் ஒரு குரங்கு முகத்தைத் தொங்கபோட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்தது. அதைப் பார்த்த யானை, "குரங்காரே, தாங்கள் ஏன் விசனத்துடன் உட்கார்ந்திருக்கிறீர்கள்? என்ன வந்தது உங்களுக்கு? உங்கள் உறவினர்கள் எல்லோரும் சௌக்கியம்தானே?" என்று கனிவாக விசாரித்தது. தன்னையும் மதித்து யாரோ விசாரிப்பதைக் கேட்டுத் தலை நிமிர்ந்த குரங்கு எதிர யானையைக் கண்டதும், "அண்ணா, என் கஷ்டத்தை ஏன் கேட்கிறீர்கள்? சுதந்திரமாகத் திரிந்த என்னை ஒரு பயல் தன் வயிற்றுப் பிழைப்புக்காக, பிடித்துப் பலவந்தமாக ஆட்டி வைத்தான். வித்தைகளைச் சரியாய்ச் செய்யா விட்டால் சக்கையான அடி. சரியாய்ச் செய்தால், கிடைக்கும் பண்டங்களைத் தானே எப்பம் விட்டு விட்டு, கால் வயிற்றுக்கு எனக்குச் சோறு போடுவான். நேற்று பசி மயக்கத்தால் வித்தையைக் கவனித்துச் சரிவரச் செய்யவில்லை: அதனால் என்னை அடி அடி என்று அடித்து விட்டு முழுப் பட்டினி போட்டு விட்டான். முதுகெலும்பை முறித்து விட்டான் பாவி! இந்த நன்றி கெட்ட பயலுக்கு நாள் பூராவும் உழைத்து நாராகப் போவதை விட, அவன் வயிற்றுப் பிழைப்பில் மண்ணைப் போட்டு விட்டுத் தேசாந்திரம் கிளம்பி விடுவது மேல் என்று தீர்மானித்து விட்டேன். கிளம்பியும் விட்டேன்" என்று சொல்லி முடித்தது.

தன் கதையையும் சொல்லி, யானை கண்ணீர் வடித்தது. பிறகு, "என்னுடன் கிளம்பும். நாம் இருவரும் சேர்ந்து இந்த மனிதப் பூண்டுகளுக்குப் புத்தி கற்பிப்போம்" என்றது. குரங்கு குஷியுடன் யானையின் முதுகின்மேல் 'ஜம்' மென்று ஏறிக் கொள்ள, யானை கிளம்பி வெகு வேகமாய் அந்த ஊரைக் கடந்தது.

அடுத்த ஊரில் ஒரு மரத்தின் நிழலில் ஒரு பசு படுத்துக் கொண்டு, ஓயாமல் கண்ணீர் பெருக்கிக் கொண்டிருந்தது. இதைக் கண்ட யானை, "ஏனம்மா! நீ கண்ணீர் வடிக்கிறாய்? உனக்கென்ன வருத்தம்? சொல்!" என மிகவும் அக்கறையாய் விசாரித்தது. பெரிய பிராணியானாலும் சாந்தி கம் நிறைந்த தன்னவா யானை? பசு எழுந்து நின்று, "யானை அண்ணா, என் வயிற்றெரிச்சலை ஏன் கேட்கிறீர்கள்? இந்த மனிதர்களைப் போல நன்றி கெட்ட வர்க்கத்தை என் ஆயுளில் கண்டதில்லை. என் எஜமானனுக்குத் தினமும் படிப் படியாய் நான் பால் கொடுக்க, அவன் என் கன்றுக்கு ஆழாக்குப் பால்கூட விட்டு வைப்பதில்லை. அதனால் என் கன்று நோய் வந்து கஷ்டப் பட்டது. அப்பொழுதும் அதை அவன் சரியாய்க் கவனிக்கவில்லை. கடைசியில் என் குழந்தை நேற்று இறந்து விட்டது. சை, என்ன

மனிதர்கள் இவர்கள், என் குழந்தை போன பிறகு அந்த வீட்டிலிருக்கவே எனக்குப் பிடிக்கவில்லை. அதனால்தான் கிளம்பிவிட்டேன்" என்று கூறி முடித்தது.

"ஆ, உன் கதை எங்களுடையதைவிட மோசமாயிருக்கிறதே! சரி, நீயும் எங்களுடன் வா!" என்றது யானை.

மூன்றும் இப்படிச் சென்று கொண்டிருந்த போது வழியில் ஒரு பெரிய ஆலமரம் இருந்தது. இளைப்பாற அதனடியில் மூன்றும் தங்கின. அப்பொழுது அதனடியில் பொந்து இருப்பதையும் அதன் வாயிலில் ஒரு நல்ல பாம்பு சுருட்டிக் கொண்டு படுத்திருப்பதையும் யானை கவனித்தது. உடனே, "நாகம்மா! நீ இப்படிச் சோம்பேறியாய்ப் படுத்துக் கொள்ளவே மாட்டாயே! உன் உடம்புக்கு என்ன?" என்று கேட்டது. நாகம், "இந்த அக்கிரமத்தை யாரிடம் சொல்வேன்? யானையாரே! எங்களை இந்த மனிதர்கள் அடித்துத் துன்புறுத்தினால் ஒழிய, என் இனத்தார் யாரையும் தீண்டுவதில்லையே. ஒரு பாவமும் அறியாத சின்னஞ்சிறு குழந்தை தன் பாட்டுக்கு வெளியில் விளையாடிக் கொண்டிருந்ததை அநியாயமாக அடித்துக் கொன்று போட்டானே, பாவி! யாருக்கு என்ன தீங்கு செய்தேன் நான்? இந்த அக்கிரமத்தைக் கேட்பாரில்லையா?" என்று புலம்பத் தொடங்கியது. "வருந்தாதே நாகம்மா, என்ன செய்யலாம்; இந்த மனித வர்க்கமே அப்படித்தான். நீயும் கிளம்பு. இனிமேல் இங்கே என்ன செய்வாய்?" என்று யானை கூறியது.

நான்கும் சேர்ந்து புறப்பட்டன.


கோபம் தணிந்து, அவை ஆலோசித்த பொழுது "யாரையும் அன்பினால் வசீகரிப்பதே உத்தமமான வழி. அபகாரம் செய்த பேருக்கும் உபகாரமே செய்ய வேண்டும்" என்று ஒரு மனதாக முடிவுக்கு வந்தன. ஆகவே, எந்த ஜீவராசிக்கும் தீங்கு செய்யாமல், வழியில் கிடைத்ததை உண்டு காட்டையும், நாட்டையும் கடந்து சென்று கொண்டிருந்தன. சண்டை பூசல் ஒன்றுமில்லாமல், ஒற்றுமையாய் இருந்தன.

அந்தி மயங்கும் நேரத்தில், ஒரு நாள், திடீரென்று ஒரு மூலையிலிருந்து பயங்கரக் கூக்குரல் வந்தது.



விஷயம் என்னவென்றால், அங்கே சாலையின் குறுக்கே ஒரு கட்டை வண்டி கிடத்தப் பட்டிருந்தது. அப்பால் வந்து நின்ற பஸ்ஸைச் சூழ்ந்து கொண்டு, கத்தியும் கையுமாக ஏழெட்டு முரடர்கள் பிரயாணிகளைப் பலவந்தமாகக் கீழே இறக்கினர். வரிசையாக நிற்க வைத்து ஒவ்வொருவராகச் சோதனை செய்து பணத்தையும் நகையையும் சுருட்ட ஏற்பாடு செய்தனர். பிரயாணிகள் சுமார் இருபது பேர்—வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டு உயிருக்கு மன்றாடிக் கொண்டிருந்தார்கள். எங்கும் ஒரே வேதனை; ஒரே திகில். அந்தச் சமயத்தில் ஓர் அற்புதம் நிகழ்ந்தது!

அதாவது தம் வழியே போய்க் கொண்டிருந்த தோழர்களாகிய யானையும், குரங்கும், பாம்பும், பசுவும் அந்த நேரத்தில் அங்கு வந்து சேர்ந்தன! சர்க்கஸ் கம்பெனி முதலாளி சட்டைப் பையில் கத்தை கத்தையாய்ப் பணத்துடன் ஒரு புறம் நடுங்கிக் கொண்டு நிற்பதை யானை கவனித்தது! தன்னைப் படாத பாடு படுத்தி வைத்த தன்னுடைய எஜமானன் இப்பொழுது இவர்களிடம் சிக்கிக் கொண்டு பல்லைக் காட்டி நாட்டியமாடுவதைக் கண்டு குரங்குக்குச் சிரிப்பு வந்தது. மடியில் முந்நூறு ரூபாய் பணத்துடன் மாடு வாங்கச் சந்தைக்குப் போய்க் கொண்டிருந்த தன் எஜமானன் அங்கே உயிருக்கு மன்றாடிக் கொண்டிருந்ததைப் பசுவும் பார்த்தது! தன் குழந்தையை அகாரணமாய் அடித்துக் கொன்ற பேர்வழி பேந்தப் பேந்த விழித்துக் கொண்டு அங்கே நிற்பதைப் பாம்பும் கண்டு கொண்டது! யானையும், குரங்கும், பாம்பும், பசுவும் ஒன்றையொன்று இப்பொழுது பார்த்துக் கொண்டன.



யானை பெருந் தன்மையுடன், "இந்தச் சமயத்தில்

"இவர்களை அழ வைப்பது அழகல்ல" என்று ஒரு நொடியில் தீர்மானித்து, திடீரென்று அந்த முரடர்கள் முன் பாய்ந்தது. இரண்டு பேரைத் துதிக்கையால் தூக்கி, வளைத்து எங்கேயோ விட்டெறிந்தது! குரங்கு சரேல் என்று ஒரு முரடன் மீது விழுந்து அவன் முகத்தைப் பிய்த்து, பிறாண்டி, கழுத்தை நெரித்து, சித்திரவதை செய்து கொண்டிருந்தது. சீறிக் கொண்டே தன்னுடைய கூரிய கொம்புகளால் ஒரு முட்டித் தள்ளி, வயிற்றைக் கிழித்துத் திருடனை வகையாகக் கவனித்துக் கொண்டது பசு! அதே சமயம், 'புஸ்'ஸென்று சீறிப் பாய்ந்த நாகத்தைக் கண்டு, அஞ்சி நடுங்கிப் போய் அங்கே மிஞ்சிய முரடர்கள் மூலைக்கு ஒருவராய் அலறிப் புடைத்துச் சிட்டாய்ப் பறந்தார்கள்! பிரயாணிகள் ஒருபுறம் நடுங்கிக் கொண்டிருந்தனர். அவர்களுக்கு ஒரு தீங்கும் நேரவில்லை! இப்படியாக நொடிப் பொழுதில், மனித உதவி இல்லாமல், உயிர், பணம், நகைகளெல்லாம் பிழைத்தன!

சர்க்கஸ் முதலாளி சங்கர் இப்பொழுது தான் யானையை நன்கு கவனித்தார்.

"ஆ, இதென்ன! காணாமல் போன நம் கணேசன் போலிருக்கிறதே!" என்று ஓடி வந்து, நன்றிப் பெருக்கோடு அதன் துதிக்கையை அணைத்துக் கொண்டு நின்றார் அவர். குரங்காட்டியோ, தன் குரங்கைக் குழந்தையைக் கட்டிக் கொள்வது போல் கட்டி அணைத்துக் கொண்டும் தலையில் தூக்கி வைத்துக்கொண்டும் கூத்தாடினான்! பசு தன் எஜமானனின் அருகில் போய்க் கழுத்தைத் தாழ்த்திக் காண்பித்துக் கொண்டு நின்றது. அவன் அதை ஆர்வத்துடனும் நன்றியுடனும் தடவிக் கொண்டிருந்தான். நாகத்தின் குட்டியை அடித்துக் கொன்றவன் இன்னும் நடு நடுங்கிக் கொண்டிருந்தான். இந்த அதிசயக் காட்சிகளையெல்லாம், கண்களில் ஆனந்தக் கண்ணீர் வழியக் கவனித்துக் கொண்டிருந்தனர் மற்றப் பிரயாணிகள்!

அப்பொழுது கணேசன் கடைக்கண்ணால் குரங்கைப் பார்க்கவும், அது குடு குடு வென்று, குரங்காட்டியின் பிடியிலிருந்து விலகி, யானையின் முதுகில் ஒரு தாவு, தாவி ஏறிக் கொண்டு நாகத்தைக் குனிந்து பார்த்தது. அவ்வளவுதான், சர்ப்பம் சொல்லி வைத்தாற்போல, சர சர வென்று யானை மீது தாவி ஏறி, குரங்குக்குக் குடை விரித்தாற்போல் படம் விரித்துக் கொண்டு அழகாக நின்று ஆடியது! இந்த அற்புதத்தைக் கண்ட பிரயாணிகள் மயங்கி, மெய் மறந்து நின்றார்கள்!

ஏன், சர்க்கஸ் முதலாளி சங்கர் கூட இந்த அற்புதக் காட்சியைக் கண்டு அப்படியே பிரமித்துப் போய் விட்டார்!



நாணுசாஹேப்

எஸ். கோபாலன்

எனது நண்பரின் பெயர் நாராயணசாமி. நாணு என்று அவரை அழைப்பது வழக்கம். ஒரு நாள் பள்ளிக்கூடத்தில் எங்களுடைய உபாத்தியாயர் நாணுவின் புரட்சிகரமான காரியங்களைக் கண்டு, "நீ என்ன நாணுசாஹேப் என்று நினைத்துக் கொண்டிருக்கிறாயோ!" என்று கோபித்தார். அது முதல் நாணுசாஹேப் என்று அவர் பெயர் வழங்கலாயிற்று.

பாடசாலையை விட்டகன்ற பிறகு பல வருடங்கள் வரையில் நாங்கள் இருவரும் சந்திக்கவே இல்லை. ஆனால் சென்னை சர்வ கலாசாலையில் இந்திய சரித்திர ஆராய்ச்சியில் நாணு பட்டம் பெற்றாரென்றும், அதன் பிறகு நாணு பல தடவைகளில் சர்க்கார் உத்தியோகத்திற்காக விண்ணப்பங்கள் செய்தும் ஒன்றும் பயன்படவில்லை என்றும் எனக்குத் தெரியும். அதுவுமல்லாமல் சென்னை சர்வகலாசாலையில் ஆசிரியர் வேலையை அவருக்குக் கொடுக்கலாமென்று அநேகமாக நிச்சயித்த அதிகாரிகள் கடைசியில் மறுத்து விட்டனரென்றும் கேள்விப்பட்டேன். இதன் காரணம் என்னுடைய நண்பர் விண்ணப்பத்தில் நாணு என்று கையெழுத்திட்டிருந்தார். அவருடைய ஊர் பெயர், ஜாதி முதலிய விவரங்களைக் குறிக்க வேண்டிய இடத்தில் உலகப்ரஜை என்று அழுத்தமாகக் குறித்திருந்தார். அதிகாரிகள் இவன் ஒரு கிறுக்கனோ என்று நினைத்து அவர்கள் செய்த தீர்மானத்தை மாற்றி விட்டனர். நாணுசாஹேப் என்ற பட்டப் பெயருக்காகவும் உலகப்ரஜைத் துவம் பெறுவதற்காகவும் என் நண்பர் செய்த தியாகம் என்றுதான் இதைக் கருத வேண்டும்.

வேலை பெறுவதற்கு அடிக்கடி செய்து வந்த முயற்சிகளில் நாணுவுக்கு ஏற்பட்ட ஏமாற்றத்தைப் பற்றி நான் கேள்விப்பட்ட பொழுது, அவர் மிகவும் வெறுப்புற்றிருப்பார் என்று நினைத்தேன். அவருடைய மனப்பான்மை எனக்கு நன்கு தெரியும். என்னுடைய நண்பனை நான் சரியாகப் புரிந்து கொள்ளவில்லையென்றிருந்தாலொழிய, சமூகத்தின் மீது வஞ்சம் தீர்த்துக் கொள்ள எண்ணுபவர்களில் இவரும் ஒருவர் என்று நான் நினைத்தது தவறல்ல.

பல வருடங்கள் சென்றன. பின்னர் நாணுவை நான் ஒரு நாள் ஒரு விசேஷ சந்தர்ப்பத்தில் சந்தித்தேன். அப்பொழுது நான் சரித்திரப் பிரசித்தி பெற்ற த...எனும் நகரில் டாக்டராக இருந்து வந்தேன். இந்த நகரம் கடைசியாக ஆண்ட மகாராஷ்டிர மன்னர்களின் தலை நகராக விளங்கி வந்தது. இடிந்த அரண்மனைக் கட்டிடங்களும் மாடமாளிகை கூட கோபுரங்களும் விசேஷ நாதக் கட்டு அமைந்த சங்கீத மண்டபங்களும் இவ்வூரின் பண்டைக்காலச் சிறப்பை நன்கு விளக்கின. புதை பொருள் ஆராய்ச்சி இலாகாவுக்கு இந்த நகரம் ஒரு முக்கிய இடமாக ஏற்பட்டது. ஒவ்வொரு நாளும் அநேகர் இந்த நகரத்தைப் பார்க்க வருவதுண்டு. அப்படி வரும் பிரயாணிகளை ஆங்காங்கு அழைத்துச் சென்று சுற்றிக் காட்டிச் சரித்திர ஆதாரம் பெற்றதும் அற்றதுமான பல விஷயங்களைப் பிணைத்துக்கூறி ஊதியம் பெற்று ஜீவனம் செய்யும் பலர் அங்கு விசேஷ சம்பாத்தியம் பெற்று வந்தனர்.

ஒருநாள் மாலையில் மேற்சொன்ன வழிகாட்டிகளில் ஒருவரை அழைத்துக் கொண்டு சிலர் என்னிடம் ஓடிவந்தனர். கீழே விழுந்ததால் அந்த வழிகாட்டியின் கையெலும்பு முறிந்து போயிற்று. நான் அவனுக்குச் சிகிச்சை செய்து கொண்டிருக்கையில் காவற் கூடத்தில் ஒரு பைசாசத்தைக் கண்டு பயந்து உயரத்திலிருந்து கீழே விழுந்து விட்டதாகச் சொல்லப்பட்டது.

"என்னய்யா! மாலை ஐந்து மணிக்கும் பைசாசமா!" என்று நகைத்து, "உலகப் பழக்கத்தில் பைசாசங்கள் நடுநிசிக்குப் பிறகு தான் தோன்றும் என்று நான் நினைத்தேன்" என்றேன். உடனே வழிகாட்டி "ஸார்! இதை விளையாட்டாகக் கருத வேண்டாம். நான் பைசாசத்தைப் பார்த்தது, இப்பொழுது நான் உங்களைப் பார்ப்

பது எவ்வளவு உண்மையோ அவ்வளவு உண்மை. நான் பார்த்தவர் சிப்பாய்க் கலகத்தில் பிரசித்தி பெற்ற நானாசாஹேப் என்று எங்கு வேண்டுமானாலும் சத்தியம் செய்வேன். அவரே என்னிடம் 'நான்தான் சிப்பாய்க் கலகத் தலைவர் நானா சாஹேப்' என்று சொன்னார். நமது தேச சரித்திரத்தை நானும் படித்திருக்கிறேன். சிப்பாய்க் கலகத்தில் தலைவராக இருந்த நானாசாஹேப் அவர்கள் இன்னும் உயிருடன் இருக்கிறார். நமது நகரத்துக்கு விஜயம் செய்திருக்கிறார் என்பதும் திண்ணம்'' என்றான்.

அவனைப் பார்த்துப் பரிகாசமாக ''ஏனப்பா! அப்படி ஒரு பெரியவர் வந்தால், நீ பயந்து கீழே விழுந்து கையை ஒடித்துக் கொள்ளுவானேன்! அவரைக் கைகுலுக்கி உன் வீட்டுக்குத் தேநீர் அருந்தவன்றோ அழைத்து வரவேண்டும்!'' என்றேன் நான்.

''நீங்கள் என்னைப் போல் மராட்டியரல்ல. எதிர்பாராத வகையில் திடீரென்று நானாசாஹேப்



அவர்களைச் சந்திக்க நேரிட்டால் ஒருவனுடைய நிலைமை என்ன ஆகும் என்பதை நீங்கள் அறிய மாட்டீர்கள். மேலும் அவர் சரேலென்று என் கையைப் பிடித்துக் கொண்டு கூறிய சொற்களும் சாதாரணமானவை யல்ல. 'என்னை நம்பு! நான்தான் நானாசாஹேப்! ஆங்கிலேயரிடம் சிக்காது இதுவரையில் ஒளிந்திருந்தேன். இப்பொழுது நீங்கள் உங்கள் சுதந்திரத்தைப் பாராட்டி வருகிறீர்கள். நானில்லாத சுதந்திரத்தால் உங்களுக்கு என்ன பயன்?' என்று கேட்டார்!'' என்று வழிகாட்டி கூறினான்.

சில நாட்களுக்குப் பிறகு அந்த வழிகாட்டி என்னிடம் மீண்டும் வந்து, ''நானாசாஹேப் இப்பொழுது பகிரங்கமாக வெளியில் வந்து விட்டார். இந்நகரத்திலுள்ள நாம் கவனிக்க வேண்டிய விஷயம் இது. அவர் நம் நகரத்தில் தோன்றிப் பெருமைப் படுத்தி யுள்ளார். நீங்கள் அவரை வந்து பார்க்க வேண்டும். ரெவின்யூ இலாகா அதிகாரிகளும் புதை பொருளாராய்ச்சி இலாகா அதிகாரிகளும் இன்று அவரைச் சந்திக்கப் போகிறார்கள்!'' என்று உற்சாகமாகக் கூறினான்.

நானும் அவனுடன் அரண்மனைக்குச் சென்றேன். அங்கு ஒரு பெரிய கூட்டம் கூடி யிருந்தது. எங்கள் ஊர் டிபுடி கலெக்டர் அவர்களும் புதைபொருள் இலாகாவின் அஸிஸ்டெண்டு டைரெக்டர் அவர்களும் ஏதோ யோசனையிலாழ்ந்த வண்ணம் அங்கு நின்று கொண்டிருந்தனர்.

டிபுடி கலெக்டரைப் பார்த்துப் புதைபொருள் இலாகா அதிகாரி பின்வருமாறு மொழிந்தார்: ''அவர் நானாசாஹேப் என்பதில் சிறிதும் ஐயமில்லை. சிப்பாய்க் கலகத்தைப் பற்றி விரிவாகக் கூறும் சரித்திரங்களை யெல்லாம் நான் நன்கு ஆராய்ச்சி செய்துள்ளேன். இங்கு தோன்றி யிருக்கும் ஆசாமி அந்தப் புரட்சிகரமான கட்டத்தில் நடந்தேறிய வைபவங்களைப் பற்றிக் கோவையாகவும் மிகவும் தெளிவாகவும் கூறுகிறார். மேலும் வெள்ளையரை ஒழிக்கத் தன்னுடன் பாடுபட்டவர்களைப் பற்றி உள்ளன்போடு மிகவும் உருக்கமாகப் பேசுகிறார். அவர் பேசுவதைக் கேட்கும்பொழுது நமது சரித்திரப் புத்தகங்களிலிருந்து நேரே இறங்கி வந்தவர்போல் கூறுகின்றார்.''

இதைக்கேட்ட டிபுடி கலெக்டர், ''நீங்கள் சொன்னால் சரி. அதெல்லாம் எனக்கு அதிகமாகத் தெரியாது. அவரை யார் என்று நான் சந்தேகப் படுவதற்கே இடமில்லை. ஏனென்றால் நம்மூர் அரசியல் வாதிகள் எழுதியதைக் கொண்டு சென்னை அரசாங்கத்தார் அவரைப் பழைய நானா சாஹேப் என்று தீர்மானம் செய்திருக்கிறார்கள். அதுபோதும் எனக்கு. அவருக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யும்படியாகவும் மேற்கொண்டு உத்தரவு வரும் வரையில் அவருக்கேற்ற மரியாதைகளுடன் அவரைக் கவனித்துக் கொள்ளும்படியும் உத்தரவிட்டிருக்கிறார்கள்'' என்றார்.

''நானாசாஹேப் சம்பந்தப்பட்ட விஷயங்கள் யாவும் மத்திய அரசாங்கத்தைச் சேர்ந்தவை யென்பதை நீங்கள் உணர வேண்டும், ஸார்! ஏற்கெனவே நான் டில்லியிலுள்ள மேலதிகாரிக்குத் தெரிவித்து அவரிடமிருந்து இந்தத் தந்தியும் வந்திருக்கிறது பாருங்கள்'' என்று புதைபொருள் அதிகாரி அழுத்தமாகக் கூறித் தந்தியை டிபுடி கலெக்டரிடம் கொடுத்தார்.

அந்தத் தந்தியானது: ''த—நகரம்: சிலைமகால்: புதை பொருள் உதவி அதிகாரி.'' என்ற விலாசத்துக்கு அனுப்பப் பட்டிருந்தது. தந்தியின் வாசகம்: ''உங்கள் தந்தி—சிலை—மத்திய பொருட்காட்சிச் சாலைக்கு உடனே கொண்டு வரவும். டைரெக்டர் ஜெனரல்'' என்று இருந்தது.

தந்தியைப் பார்த்து விட்டு டிபுடி கலெக்டர் ''வரவேற்பு தினம் நாளைக்கென்று நிச்சயித்து வேண்டிய ஏற்பாடுகளை யெல்லாம் செய்து விட்டேனே. நானா சாஹேபைப் போன்ற வீரர் ஒருவரைத் தகுந்த மரியாதைகள் செய்யாது அனுப்புவது சரியல்லவே'' என்றார்.

புதை பொருள் அதிகாரி தீர்மானமான குரலில் ''நாளைய தினம் சென்னையிலிருந்து விமானம் கிளம்புகிறது. இன்றைக்கே நான் அவரை அழைத்துக்கொண்டு சென்னைக்குப் புறப்பட வேண்டும். இல்லாவிட்டால் எனக்கு வந்த உத்தரவை மீறியவனாவேன். மத்திய அரசாங்கத்தார் நானா சாஹேபின் அருமை பெருமையை நன்கு உணர்ந்தவர்கள்தான்'' என்றுரைத்தார்.

அன்று மாலையே வரவேற்பை நடத்தி விடலாமே என்று நான் குறுக்கிட்டேன். ஆனால்

டிபுடி கலெக்டர் அதற்குச் சம்மதிக்கவில்லை. விரிவான ஏற்பாடுகள் செய்திருக்கிற படியால் வரவேற்பை முதல் நாள் வைத்துக் கொள்ளுவதோ அல்லது ரத்து செய்வதோ முடியாத காரியம் என்று சொன்னார். அப்படியானால் குறித்த இடத்தில் குறித்த காலத்தில் நானா சாஹேப் இல்லாமலேயே வரவேற்பை நடத்தலாமென்றும், நமது அரசியல்வாதிகள் ஏமாற்றமடைந்த பொதுஜனங்களிடம் பக்குவமாக விஷயங்களை எடுத்துரைக்க வல்லவர்களென்றும் நான் கூறினேன்.

நாங்கள் இவ்வாறு பேசிக்கொண்டிருக்கும் பொழுது உள்ளூர்த் தலைவர்கள் சிலர் நானாசாஹேப் அவர்களை அழைத்துக்கொண்டு வந்தனர். நாங்கள் மரியாதையுடன் நகர்ந்து நின்றோம். உடல் மெலிந்த வயோதிகர் ஒருவர் 'துளர்' வெண்மையான நீண்ட தாடியுடனும், முதுகில் கூனுடனும் கழுத்தில் மலர் மாலைகளுடனும் நின்றார். தலையில் மராத்திய மரபிற்குரிய பகடி எனும் தலைப்பாகையை அணிந்திருந்தார். முதிர்ந்த கிழவராகவும் மரியாதைக் குரியவராகவும் காணப்பட்டார். அவருடைய கூரிய பார்வை நாற்றிசையிலும் பரவியது அவர் என்னை விசேஷ கவனத்துடன் பார்ப்பதாகத் தோன்றியது. என்னைக் கண்டதும் அவர் முகத்தில் ஒரு புன்முறுவல் தோன்றியதாக எனக்குப் பட்டது. இவரைப் போன்ற வேறெவரையாவது எங்கு பார்த்திருக்க முடியும் என்று யோசிக்கலானேன். சரித்திரப் புகழ் பெற்ற நானா சாஹேப் அவர்களிடம் எனக்கு அறிமுகமான யாரோ ஒருவருடைய சாயல் தென்படுவதாக எண்ணி அது யாராக இருக்கக் கூடும் என்று சிந்தித்தேன். அப்பொழுது நானா சாஹேப் அவர்கள் தன்னை அறியா வண்ணம் உதட்டின் மீது ஒரு விரலை வைத்தார். அவருடைய அச்செய்கையால் என்னைப் "பேசாதே" என்று சமிக்ஞை செய்கிறார் என்று எனக்குத் தோன்றியது. நான் ஒன்றும் பேசவில்லை.

* * *

மறு தினமே நானா சாஹேப் அவர்கள் சென்னையிலிருந்து விமானத்தில் டில்லிக்கு அழைத்துச் செல்லப்பட்டார். ஆனால் எங்கள் நகரவாசிகள் வாளா விருக்கவில்லை. அவருக்கென்று ஏற்படுத்திய வரவேற்பை அவரில்லாமலேயே வெற்றிகரமாக நடத்தி விட்டனர்.

எங்கள் ஊர் புதை பொருள் அதிகாரி டில்லியில் இறங்கியவுடன் நானா சாஹேப் அவர்களை அங்குள்ள பொருட் காட்சிச் சாலைக்கு இட்டுச் சென்றார். ஆனால் அந்தப் பொருட் காட்சிச் சாலையின் அதிகாரி எங்கள் புதை பொருள் அதிகாரியைப் போல் பெரிய விஷயங்களில் அவ்வளவு உற்சாகமுடையவராகக் காணப்படவில்லை. நானா சாஹேப் அவர்களை அறிமுகம் செய்து வைத்த பொழுது அவரிடம் குறிப்பிடத் தக்க உணர்ச்சியேதும் தென்படவில்லை. நானா சாஹேப் அவர்களை டில்லி மியூஸியத்தில் விட்டு வைக்கும்படி மேலாவிலிருந்து தமக்கு உத்தரவு வந்திருப்பதாக எங்கள் அதிகாரி தெரிவித்தபொழுது தனக்கு அத்தகைய உத்தரவு ஒன்றும் வரவில்லை என்று அவரிடம் சொன்னார்.

"இந்தத் தந்தியைப் பாருங்கள். எங்கள் இலாகாவிலிருந்து வந்திருக்கும் உத்தரவு உங்கள் ஞாபகத்துக்கு வரக் கூடும்" என்று சொல்லி எங்கள் புதை பொருள் அதிகாரி தந்தியை அவரிடம் கொடுத்தார். அவர் அதைப் படித்துப் பார்த்துத் தலையைச் சிறிது சொறிந்து கொண்டு "ஆம். ஆம். இதைப் போன்ற தந்தி ஒன்று எப்பவோ பார்த்ததாக ஞாபகத்துக்கு வருகிறது. ஆனால் அப்போது அந்தத் தந்தி நானா சாஹேபின் சிலையைப் பற்றிக் கூறுகிறது என்று நினைத்தேன்" என்றார். கடைசியில் மியூஸியம் அதிகாரி, "சரி, அவரை இங்கேயே விட்டுச் செல்லுங்கள்" என்று கூறி விட்டுத் தம் வேலையைப் பார்க்க ஆரம்பித்தார்.

அன்று முதல் நானாசாஹேப் டில்லி மியூஸியத்தில் இருக்கலானார். ஆனால் சிலையைப் பூட்டி வைப்பது போல அவரை ஓரிடத்தில் பூட்டி வைக்க முடியுமா! அல்லது பொருட்காட்சிச் சாலையிலுள்ள பொருள்களின் ஜாபிதாவில் அவரையும் ஒரு பொருளாகக் கருதிச் சேர்க்க முடியுமா! இத்தகைய விசாரங்கள் பொருட்காட்சிச் சாலை அதிகாரிக்கு ஏற்பட்டன. கடைசியில் நானா சாஹேப் அவர்களைப் பொருட்காட்சிச் சாலையின் அலுவ



லாளர்களில் ஒருவராகக் கருதி அவருக்கு உடையும் உணவும் கொடுத்துவரத் துணிந்தார்.

நானா சாஹேப் சும்மா இருக்கவில்லை. விரைவில் பொருட்காட்சிச் சாலையின் நிர்வாகத்தில் ஓர் இன்றியமையாத அங்கமாகி விட்டார். மியூஸியத்தைப் பார்க்க வருவோரிடம் சலியாமல் சிப்பாய் கலகத்தைப் பற்றிய ரஸமான வரலாறுகளைக் கூறி வந்தவர்களைச் சந்தோஷப் படுத்துவதுடன் தாமும் சந்தோஷமாகக் காலங் கழித்து வந்தார். அறிவாளிகள் சந்தேகப்பட்டபடி நானா சாஹேப் அவர்கள் உயிருடனிருக்கிறார், அவர் டில்லி மியூஸியத்தில் காட்சி யளிக்கிறார் என்னும் சமாசாரம் நாடெங்கிலும் விரைவில் பரவியது. முக்கியமாகப் புனாவைச் சேர்ந்த சில முக்கியஸ்தர்களான "மஹா ஷ்டிர சபையின்" அங்கத்தினர்கள் டில்லியில் நானா சாஹேப் அவர்களைக் கண்டு சென்றனர். அவர்கள் பலவிதத்திலும் அவரைப் பரீட்சித்துப் பார்த்து உண்மையிலேயே அவர் நானா சாஹேப் தான் என்று தெரிந்து கொண்டனர். ஆனால் ஒரு

சிறு விஷயம் அவர்களைச் சிறிதளவு தயங்கச் செய்தது. அது யாதெனில் நமது காணு சாஹேப் அவர்களுக்கு மகாராஷ்டிர பாஷை சரியாகத் தெரியவில்லை. "என்ன! காணு சாஹேப் தம்முடைய தாய் பாஷையை மறந்திருக்க முடியுமா" என்று தயங்கினர்கள். ஆனல் அவர்களுடைய சந்தேகத்தை காணு சாஹேப் வெகு எளிதில் போக்கடித்தார். தம்முடைய சிறு பிராயம் முதற்கொண்டே தமக்கு மராத்தி குறைவாகத்தான் தெரியும் என்று யாவரும் அறிந்ததே என்றும் அதற்குக் காரணம் தமக்குச் சிறு வயதிலிருந்து அன்னியர்களுடன் பழக்கம் அதிகமாயிருந்ததாலேயே ஆங்கிலேயரிடமிருந்து தப்புவதற்காகத் தான் ஜப்பான், சைனு முதலிய வெளி நாடுகளுக்குச் சென்ற பொழுது ஆங்காங்கு தாம் பட்ட பாட்டில் கொஞ்சநஞ்சம் தெரிந்திருந்த மராத்தியும் போய் விட்டதென்றும், இப்பொழுதுதான் ஓரளவிற்குச் சில வார்த்தைகளை ஞாபகத்தில் வைத்திருப்பதே உலக விநோதங்களில் ஒன்ருகக் கருதக் கூடியதென்றும் வெகு சாதுரியமாகக் கூறி அவர்களுடைய ஐயத்தைக் களைந்தெறிந்தார். இதைக் கேட்டதும் அங்கிருந்தவர்களின் உள்ளம் உருகி காணு சாஹேப் அவர்களிடம் எல்லோரும் மிக்க பற்றுதல் கொண்டனர்.

டில்லியிலிருந்து எங்கள் ஊர் புதை பொருள் அதிகாரிக்கு மேற்கூறிய தந்தி யனுப்பிய பிறகு டில்லியிலிருக்கும் புதை பொருள் இலாகா டைரக்டர் ஜெனரல் இந்த சமாசாரத்தைப் பற்றி மறந்து விட்டார். எங்கள் ஊர்ப் புதை பொருள் அதிகாரி காணு சாஹேபை அழைத்துக் கொண்டு டில்லிக்குச் சென்றிருந்த பொழுது டைரக்டர் ஜெனரல் வேறு எங்கோ போயிருந்ததால் அவரைச் சந்திக்காமல் வந்து விட்டார். சில மாதங்களுக்குப் பிறகு அவருக்குத் தாம் அனுப்பிய தந்தியைப் பற்றி ஏதோ சிறிது ஞாபகம் வந்தது. தம்முடைய ஆபீஸிலுள்ள காகிதங்களைப் புரட்டிப் பார்த்தார். காணு சாஹேபின் சிலை சம்பந்தமாகத் தாம் ஓர் தந்தி அடித்ததாகக் கண்டார். அவருடைய மேலதிகாரியான கனம் மந்திரி அவர்கள் சரித்திர ஆராய்ச்சியில் விசேஷ ஆர்வமுடையவராதலால் அன்னருக்குத் த— நகரத்தில் கண்டு பிடிக்கப்பட்ட விஷயத்தைப் பற்றித் தெரிவித்தார். ஆனல் அப்படித் தெரிவிக்கும்பொழுது மிகச் சிறிய பிழையொன்று ஏற்பட்டுவிட்டது. காணு சாஹேபின் சிலையொன்று அகப்பட்டு டில்லி மத்திய மியூஸியத்துக்கு வந்திருக்கிறது என்று சொல்லுவதாக எண்ணி நாணு பட்ணுவிஸின் சிலை வந்திருப்பதாகத் தெரிவித்து விட்டார்.

அப்பொழுது பதவியிலிருந்த மந்திரியோ நமது தேச சரித்திரத்தைக் கரைந்துக் குடித்தவர். அவ்வருடத்தில்தான் அவரால் எழுதப்பட்ட 'மகாராஷ்டிரர்களின் சரித்திரம்' எனும் புத்தகம் கலாசாலைகளில் பாட புத்தகமாக வைக்கப் பட்டிருந்தது. ஆங்கிலேயர்கள் காலத்தில் சிறையில் அடைக்கப் பட்டபொழுது வேறு எந்தப் புத்தகத்தையும் பாராமலும் தன்னுடைய சரித்திரக் குறிப்புகளைப் பார்க்க முடியாத நிலைமையிலும் அப் புத்தகத்தை அவர் எழுதி முடித்தார். சிறையினின்றும் விடுபட்டதும் அவர் மந்திரியாக நியமிக்கப்பட்டார். அவருடைய புத்தகம் கலாசாலைகளுக்குத் தேவை என்று தெரிந்தவுடன் அப்புத்தகத்தைப் பிரசுரிக்க "நான், நீ" என்று போட்டியிட்டு அநேக பெரிய பிரசுராலயங்கள் முன் வந்தன. கடைசியில் அப் புத்தகம் வெளிவரும் தறுவாயிலிருந்தபொழுதே மாணவர்களுக்கு அவ் வருடத்தில் பாதிகாலம் முடிந்து விட்டது. ஆனல் புத்தகாசிரியரின் ஜீவிய சரித்திரத்தைப் பற்றிய சில பக்கங்கள் அதில் சேர்க்கப்பட வேண்டியிருந்ததால் தாமதமேற்பட்டு அப்புத்தகம் வெளிவந்தபொழுது அவ் வருடத்தில் கலாசாலைகளின் எஞ்சிய நாட்களும் கழிந்து விட்டன.

இப் புத்தகத்தில் கனம் மந்திரி அவர்கள் சிப்பாய் கலகத்தைப் பற்றித் தாம் புரிந்த ஆராய்ச்சியின் முடிவுகளை எடுத்தெழுதி யிருந்தார். முக்கியமாக காணுசாஹேப் அவர்கள் இன்னும் உயிருடன் இருக்கக் கூடும் என்று சில நிபுணர்களின் அபிப்பிராயங்களை எடுத்து எழுதி யிருந்தார். நானே மாணவனாக இருந்தபொழுது காலஞ்சென்ற பெரியார் வா. வே. சு. அய்யர் அவர்கள் காணு சாஹேப் எங்காவது இன்னும் உயிருடன் இருந்து வரக்கூடும் என்று ஒரு முறை சொன்னதைக் கேட்டிருக்கிறேன். கனம் மந்திரி அவர்களும் ஸ்ரீ வா. வே. சு. அய்யரின் அபிப்பிராயத்தைச் சுட்டிக்காட்டி யிருந்தார். ஆனல் முடிவில் இந்த அபிப்பிராயங்கள் யாவும் சுத்தத் தவறு என்றும் சிப்பாய்க் கலகத்தின் பொழுதே காணுசாஹேப் அவர்கள் இறந்து விட்டதாகவும் எழுதியிருந்தார்.

(அடுத்த இதழில் முடியும்)



இந்தியக் கால்பந்தின் வெற்றி

○

இந்தியா, பர்மா, பாகிஸ்தான், இலங்கை ஆகிய நான்கு தேசங்களின் சதுர்தேசக் கால் பந்தாட்டப் போட்டி இவ்வருடம் ரங்கூன் நகரில் அவுங்ஸான் ஞாபகார்த்த மைதானத்தில் நடைபெற்றது. பாகிஸ்தான், பர்மா, இலங்கை ஆகிய மூன்று தேச கோஷ்டியையும் வென்று வெற்றிக் கொடி நாட்டியது பாரதக் கால்பந்தாட்டக் கோஷ்டி. ரங்கூனுக்கு விஜயம் செய்திருந்த ராஜ்குமாரி அமிர்த கௌரியுடன் இந்தியத் தூதுவர் காரியாலயக் காரியதரிசி ஸ்ரீ கே. எம். கண்ணம்பிள்ளையையும் இந்தியக் கால்பந்தாட்டக் கோஷ்டியினரையும் இந்தப் படத்தில் காணலாம்.

அமிர்த தாரை



எஸ். டி. ஸ்ரீநிவாஸன்

“வாஸந்தி எங்கே, கல்யாணி?” என்று கேட்டுக் கொண்டே மாடியில் இருந்து கீழே இறங்கி வந்தான் ராமமூர்த்தி. கூடத்து ஊஞ்சலில் உட்கார்ந்து கொண்டு பின்னல் வேலைசெய்து கொண்டிருந்த கல்யாணி, ராமமூர்த்தியைக் கண்டதும் எழுந்து நின்றாள். அவனைக் கண்டதுமே அவன் வெளியே எங்கோ புறப்பட்டுக் கொண்டிருக்கிறான் என்பது கல்யாணிக்குப் புரிந்து விட்டது.

“கொஞ்ச நாழிகைக்கு முன்னாடி இங்கே தான் இருந்தாள். எதிர் அகத்துக்கு அல்லது பக்கத்து அகத்துக்குப் போயிருப்பாள்......” என்றாள்.

“பட்டணத்திலேயே இருந்த அவள் நம் பண்ணைகளை யெல்லாம் பார்த்ததே இல்லையாம். நெல் ‘உப்படி’ நடக்கிறது. கன்னமங்கலம் போகிறேன் நான். அவளையும் அழைத்துக் கொண்டு போகலாமே என்று கேட்டேன்!” என்றான் ராமமூர்த்தி.

இதற்குள் வாஸந்தியே வந்து விட்டாள். “என்ன அம்மாஞ்சி! எங்கேயோ பிரயாணம் போல இருக்கு......” கலகலவென்று பேசினாள் அவள்.

“உன்னைத்தான் தேடுகிறேன். சமயத்துக்கு எங்கேயோ போய்விட்டாயே? நான் கன்னமங்கலத்துக்குப் புறப்பட்டுக் கொண்டிருக்கிறேன். நெல் ‘உப்படி’ நடக்கிறது. நீயும் வருகிறாயா? ... நம் பண்ணை, தோட்டம், யந்திரம் எல்லாவற்றையும் காட்டுகிறேன். ‘மெட்ராஸி’லே இதையெல்லாம் நீ எங்கே பார்த்திருக்கப் போகிறாய்! எல்லாவற்றையும் பார்த்து விட்டுச் சாயங்காலம் திரும்பி வந்து விடலாம்...” என்றான்.

“ஓ! குஷியாக வரேன்” என்று குதித்தாள் வாஸந்தி, சிறு பெண் போல.

பார்வதியம்மாள் ஒரு பெரிய பிளாஸ்கில் காப்பியும், ஒரு டிபன் பாத்திரத்தில் பலகாரமும் கொண்டு வந்து வண்டியில் வைத்தாள்.

“அம்மா, நான் வாஸந்தியையும் அழைத்துக் கொண்டு போகிறேன்” என்றான் ராமமூர்த்தி.

“பேஷாகப் போய்விட்டு வாயேன்” என்று உத்தரவு கொடுத்தாள் பார்வதியம்மாள்.

தெருவில் நின்று கொண்டிருந்த அந்தப் புது மோட்டாரில், டிரைவரின் ஆசனத்தில் போய் உட்கார்ந்தான் ராமமூர்த்தி. பக்கத்தில் உட்கார்ந்து கொண்டாள் வாஸந்தி. கார் கிளம்பியது. செம்மண் பிடித்திருந்த அந்தக் கிராம ரஸ்தாவில், புழுதிப் படலத்தை எழுப்பிக் கொண்டு வேகமாகச் சென்றது அந்த அழகிய மோட்டார்.

மின்வெட்டு வேகத்தில் நடந்த இந்தச் சம்பவங்களையும் கவனித்துக் கொண்டே இருந்த கல்யாணியின் கண்களிலிருந்து இரு சொட்டுக் கண்ணீர் கீழே விழுந்தது. கையில் இருந்த வர்ண நூலை நனைத்தது. சட்டென்று அவள் கண்களைத் துடைத்துக் கொண்டாள். தன்னை யாரும் கவனிக்காமல் இருப்பதற்காக மாடிக்குச் சென்றாள். திறந்து கிடந்த ராமமூர்த்தியின் அறையில் நுழைந்து தாழிட்டுக் கொண்டாள்.

மேஜையின் மேல் சென்றது அவளுடைய நாட்டம். நான்கு தினங்களுக்கு முன் அவன் தன் காமிராவால், வாஸந்தியை விதம் விதமாக எடுத்த போட்டோக்கள் மேஜையின் மேல் கிடந்தன. ஒவ்வொன்றாகப் பார்த்தாள் கல்யாணி. அவள் இதயம் சுக்கு நூறாக வெடித்து விடும்போல் இருந்தது.

ராமமூர்த்தி பத்து தினங்களுக்கு முன் எப்படி இருந்தான், இப்பொழுது அடியோடு எப்படி மாறிவிட்டான்? தன்னுடைய ராமமூர்த்தி இப்படி மாறிவிட்டான் என்பதைக் கல்யாணியால் நம்பவே முடியவில்லை. பழைய இன்ப நினைவுகள் அவள் மனத்தில் பளிச்சிட்டெழுந்தன.

அரசலாற்றையடுத்த இடைச்சேரிதான் ராமமூர்த்தியின் பூர்வீகக் கிராமம். ராமமூர்த்தியின் தகப்பனாருக்குப் பத்து வேலி நிலம் இருந்தது. ஒரே மகன். ஹைஸ்கூல் படிப்பு முடிந்ததும் ராமமூர்த்தியைத் திருச்சிராப்பள்ளியில் கல்லூரியில் சேர்த்தார்.

நாராயணய்யருக்கு—ராமமூர்த்தியின் தகப்பனார்—இரண்டு தங்கைகள் இருந்தனர். பெரியவள் சாரதா சென்னையில் வாழ்க்கைப் பட்டிருந்தாள். அவள் கணவன் ஏதோ

ஒரு சாதாரண உத்தியோகத்தில் இருந்தான். சின்னவன் ராஜத்தை ஒரு பெரிய அரசாங்க உத்தியோகஸ்தருக்குக் கொடுத்திருந்தார்கள்.

ராஜத்திற்கு ஒரே பெண்—கல்யாணி. சாரதாவுக்கு நாலைந்து குழந்தைகள். அவர்களில் மூத்தவள் வாசந்தி. நீண்ட நாட்களாகவே அவளுடைய குடும்பத்தாருக்கும் நாராயணய்யரின் குடும்பத்தாருக்கும் போக்குவரத்து கிடையாது.

ராஜத்தின் கணவர் பம்பாய், டெல்லி, கல்கத்தா முதலிய இடங்களுக் கெல்லாம் அடிக்கடி மாறிக் கொண்டே இருப்பார். தமக்கு நீண்ட ஓய்வு கிடைக்கும் காலங்களில் தம் மனைவியுடனும் குழந்தையுடனும் இடைச்சேரிக்கு வருவார்.

சில வருஷங்களுக்கு முன் அரசாங்க அலுவலாக அவர் ஒரு சமயம் சென்னையிலிருந்து கல்கத்தாவுக்கு விமானத்தில் பறந்து செல்லும்போது விமானம் விபத்துக்குள்ளாகி அவர் உயிர் துறந்தார். அவருக்கு ஏராளமான பணம் இருந்தது. ராஜம் தன் குழந்தையுடன் அண்ணன் வீட்டுக்கே வந்து விட்டாள். அப்போதுதான் ராமமூர்த்தி கலாசாலையில் முதல் வருஷம் படித்துக் கொண்டிருந்தான்.

அவளுடைய பணத்தில் ஒரு பகுதியை பாங்கியில் போட்டார் நாராயணய்யர். மற்றொரு பகுதியைக் கொண்டு இடைச் சேரிக்கு நான்கு மைல் தூரத்திலிருந்த கண்ணமங்கலத்தில் பதினைந்து வேலி விலையும் நிலமும் திருச்சியில் ஒரு பெரிய பங்களாவும் விலைக்கு வாங்கத் திட்டமிட்டார். தம் பெண் கல்யாணியை ராமமூர்த்திக்கே கொடுத்து விடுவது என்று ராஜம் ஏற்கெனவே தீர்மானித்திருந்தபடியால் நிலம், வீடு முதலிய சொத்துக்களைத் தன் அண்ணன் பேரிலேயே வாங்கி விடும்படி சொல்லி விட்டாள்.

கல்யாணி நல்ல அடக்கமுள்ள குடும்பப் பாங்கான பெண். ராமமூர்த்தியின் தாய் பார்வதியம்மாளுக்கும் அவளை ரொம்பப் பிடித்திருந்தது. கல்யாணியின் படிப்பு எட்டாவதுடன் நிறுத்தப்பட்டது.

கலாசாலை விடுமுறை நாட்களில், ராமமூர்த்தி, அடிக்கடி ஊருக்கு வரும்போதெல்லாம் கல்யாணியும் அவனும் ரொம்ப அந்நியோன்னியமாய்ப் பழகுவர். குழந்தைப் பருவம் தாண்டிக் குமரிப் பருவம் அடைந்தவுடன் நல்ல பருவ வளர்ச்சியுடன் காணப்பட்டாள் கல்யாணி.

கடந்த ஒரு ஆண்டுக்குள் பல சம்பவங்கள் துரிதமாக நடந்தன. நாராயணய்யர் திடுமென இறந்தார். ராமமூர்த்தி பட்டம் பெற்றதும் தகப்பனாருடைய நிலங்களைப் பார்த்துக் கொள்ள அவன் கிராமத்திற்கே வந்து விட்டான். வந்த சில நாட்களில் ஒரு புது மோட்டாரும் வாங்கினான்.

பல நாட்கள் பிரிந்திருந்த சாரதாவின் குடும்பமும் நாராயணய்யரின் குடும்பமும் ஒன்று சேர்ந்தன. வாஸந்தி இண்டர்மீடியட் வரையில் படித்து முடித்து விட்டுச் சர்க்கார் காரியாலயத்தில் ஒரு வேலையில் அமர்ந்திருந்தாள். அவள் ஒரு மாசம் ரஜா எடுத்துக் கொண்டிருந்தாள். தங்கள் ஊரில் வந்து சில தினங்கள் தங்கும்படி பார்வதியம்மாள் கடிதம் எழுதவே அவள் இடைச்சேரிக்கு வந்தாள்.

அவள் வந்தது முதல் ராமமூர்த்தியிடம் ஒரு மாறுதல் காணப்பட்டது. அவளுடைய கலகலப்பான பேச்சும் சங்கோச மில்லாமல் மனிதரிடம் பழகும் சுபாவமும் ராமமூர்த்தியை அவளிடம் ஆகர்ஷித்தன. பல விதங்களில் கல்யாணியைக் காட்டிலும் அவள் மேல் என்று பட்டது அவனுக்கு. கல்யாணி சுபாவத்திலேயே சற்று சங்கோசி. வயது ஏற ஏற வெட்கத்தினால் ராமமூர்த்தியிடம் அவள் அதிகமாகப் பேசுவது கிடையாது. இப்பொழுது கூண்டிலிருந்து விடுபட்ட பறவை போல் குஷியாகத் திரியும் வாஸந்தியைக் கண்டதும் ராமமூர்த்தியின் மனம் பேதலித்தது.

கல்யாணிக்கு ராமமூர்த்தியின் மனப் போக்கை அறிந்து கொள்ள வெகு நேரம் பிடிக்க வில்லை. தனக்குத்தான் சொந்தம் என்று தான் எண்ணி யிருந்த ராமமூர்த்தி தன்னை உதாசீனம் செய்து விட்டு வாஸந்தியுடன் சுற்றிச் சுற்றி வந்தது கல்யாணியின் இதயத்தை ஈட்டி கொண்டு பிளந்தது.

இரவு எட்டு அடிக்கும்போதுதான் ராமமூர்த்தியும் வாஸந்தியும் திரும்பி வந்தனர். எல்லோரும் சாப்பிட உட்கார்ந்தனர். சாப்பிட்டுக் கொண்டே வாசந்தி கல்யாணியிடம், "கல்யாணி! அம்மாஞ்சி ரொம்பக் குறும்புக்காரர். இன்று சேர்ந்தாற்போல் அவருடன் சில மணி நேரம் இருந்தபோதுதான் அவரை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது......ஒவ்வொரு வார்த்தையும் வேடிக்கைதான். சிரித்துச் சிரித்து எனக்கு வயிறே புண்ணாகி விட்டது. பலே தமாஷ் பேர்வழி......தினம் இங்கேயே இருக்கிறாயே நீ, உன்பாடு ரொம்பக் குஷிதான்......" என்றாள்.

"நீ மாத்திரம் என்னவாம்......நீயும்தான் ரொம்ப வாயாடி......உன்னோடு வாதாடி ஒருத்தராலும் ஜெயிக்க முடியாது..." என்றான் ராமமூர்த்தி சிரித்துக் கொண்டே.

அவர்கள் இருவர் பேச்சும் கல்யாணியின் காதுகளுக்கு நாராசமாக இருந்தது.

சிறிது நேரத்தில் எல்லோரும் சாப்பிட்டெழுந்தனர். கல்யாணியும் வாஸந்தியும் தத்தம் அறைகளுக்குப் படுக்கச் சென்று விட்டனர்.

தன்னுடைய பண்ணைக் காரியங்களைக் கவனிக்கச் சென்றான் ராமமூர்த்தி.

அஷ்டமி சந்திரன் பிரகாசமாகக் காய்ந்து கொண்டிருந்தது. மாடியில் கயிற்றுக் கட்டிலில் உட்கார்ந்திருந்தாள் பார்வதியம்மாள். வீட்டில் எல்லோரும் உறங்கி விட்டனர். ராமமூர்த்தி அம்மாவுக்கு எதிரில்

உட்கார்ந் திருந்தான். பார்வதியம்மாளின் முகத்தில் கவலை தோய்ந்திருந்தது.

"ராமமூர்த்தி, பிடிவாதம் பிடிக்காதே!... அப்பாவினுடைய வாக்கை நிறைவேற்ற வேண்டும் ... எனக்கும் கல்யாணியைத்தான் பிடித்திருக்கிறது..." — பார்வதியின் குரல் கம்பியது.

"அம்மா! இதுவரை சகோதரனும் சகோதரியும் போல் நாங்கள் இருவரும் வளர்ந்து விட்டோம்... நான் அவளுக்கு ஒரு நல்ல வரனைப் பார்த்து..."

"ராமு! இதெல்லாம் நொண்டிச் சாக்கு. அந்தப் பெண் உன்மேல் உயிரையே வைத்திருக்கிறது..."

"அம்மா!..." ராமமூர்த்தியின் குரலில் தீர்மானம் தொனித்தது.

"எனக்குக் கல்யாணியைப் பிடிக்கவில்லை. என் போக்குக்கும் அவள் போக்குக்கும் ஒத்து வராது. எனக்கு வாஸந்தியைத்தான் பிடித்திருக்கிறது. அவள் அப்பாவுக்குக் கடிதம் எழுதி மேற்கொண்டு ஏற்பாடு செய்வதானால் செய்; இல்லாமற் போனால் எனக்குக் கல்யாணமே வேண்டாம்" என்றான் ராமமூர்த்தி. பார்வதியம்மாளின் மூளை கலங்கி விடும் போல் இருந்தது. அவள் இதயத்தின் அடித்தளத்திலிருந்து ஒரு பெரு மூச்சு வந்தது. "உனக்கு அந்தப் பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொடுக்கிறது என்ற ஏற்பாட்டின் பேரிலே தான் உன் அத்தையின் பணத்தைக் கொண்டு வாங்கின சொத்தை யெல்லாம் கூட உன் அப்பா நம் பேரிலே வாங்கினார்"— அவள் முடிக்க வில்லை.

அதற்குள் ராமமூர்த்தி, "நான் என்ன அதையெல்லாம் எடுத்துக் கொண்டு அவளை மோசம் செய்த விடப் பார்க்கிறேனா என்ன? நாளைக்கே அவள் பேருக்கு ரிஜிஸ்தர் செய்து விடுகிறேன்" என்று சொல்லி விட்டுத் தன் அறைக்கு எழுந்து சென்று விட்டான்.

மறு நாள் காலையில் காப்பி, சிற்றுண்டி சாப்பிட்டு விட்டு, அன்று வாஸந்தியை எங்கு அழைத்துச் செல்லலாம் என்று யோசித்துக் கொண்டே, வாஸந்தியின் அறைக்குள் நுழைந்தான். அங்கு வாஸந்தி காணப்படவில்லை. சட்டென்று அங்கே மேஜையின் மேல் கவருக்குள் போடப்படாத ஒரு கடிதமும், விலாசம் எழுதிய ஒரு இரண்டணா தபால் கவரும் காணப் பட்டது. கவரின் மேல் விலாசத்தைப் பார்த்தான். "மிஸ்டர் ராஜ கோபாலன் எம். ஏ." என்று போட்டிருந்தது. கவரின் ஒரு மூலையில் "சொந்த விஷயம்" என்று ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்தது. ராமமூர்த்தி ஒரு கணம் திகைத்தான். கடிதத்தில் என்ன எழுதப்பட்டிருக்கிறது என்பதை அறியும் ஆவல் உந்த, அவன் மெதுவாக அந்தக் கடிதத்தை எடுத்துப் பர பர வென்று படித்தான். கடிதம் ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்தது.

"அன்புள்ள மிஸ்டர் ராஜகோபாலனுக்கு,

தங்கள் வாழ்க்கைத் துணைவியாக வரப் போகும் வாஸந்தி நமஸ்காரம். தங்களைப் பார்க்காமல் இருந்த இந்த ஏழு நாட்களும் ஏழு யுகங்களாகக் கழிந்தன. என் மாமியின் தொந்தரவு தாளாமல் இங்கு வந்தேன். என் அம்மாஞ்சி என்னை எத்தனையோ குஷிப்படுத்தத்தான் பார்க்கிறார். இருந்தாலும் தங்களைப் பிரிந்திருக்கும் ஏக்கத்தை என்னால் மறக்க முடியவில்லை. இன்னும் இரண்டு தினங்களில் நான் அங்கு வந்து விடுகிறேன். நிற்க, நம் திருமணத்துக்குத் தங்கள் பெற்றோர் சம்மதத்தைப் பெற்றிருப்பீர்கள் என்று நினைக்கிறேன். நீண்ட நாள் பொறுத்தாயிற்று. நான் இந்த ஊருக்குப் புறப்பட்டு வருவதற்கு முதல் நாள் பகல் காட்சிக்கு 'உண்மைக் காதலர்கள்' என்ற படத்துக்குப் போய் விட்டு, இரவு பத்து மணிவரையில் கடற்கரை மணற்பரப்பில் உட்கார்ந்து சந்தோஷமாய்க் காலத்தைக் கழித்து விட்டு, ... அடடா! அதை இப்பொழுது நினைத்தாலும் என் உடல் புல்லரிக்கிறது..." கடிதம் இன்னும் எழுதி முடிக்கப்படவில்லை.

வெளியே காலடிச் சத்தம் கேட்கவே ராமமூர்த்தி அந்தக் கடிதத்தை அப்படியே மேஜைமேல் வைத்து விட்டு மௌனமாகத் தன் அறைக்குச் சென்றான்.

நாற்காலியில் போய்த் 'தொப்' பென்று உட்கார்ந்த ராமமூர்த்தியின் தலை கிறு கிறு வென்று சுற்றியது.

'அடடா! எவ்வளவு முட்டாள் தனமான காரியம் செய்ய நினைத்தோம். வாஸந்தி சிரித்துச் சிரித்துப் பேசுவதை நினைத்து அவள் நம்மைக் காதலிப்பதாக அல்லவோ கற்பனை செய்து கொண்டோம் ...... ஹெட்கிளார்க் மேல் காதல் ...... பகல் காட்சி ... கடற்கரையில் உல்லாசம் ... சே! கல்யாணி இப்படியெல்லாம் துணிச்சலாகச் செய்வாளா? ஒரு கண நேரத்தில் ஏமாற இருந்தேன். நல்ல காலம். கடவுள் என் கண்களைத் திறந்து விட்டார்!' சிந்தனை முடிந்து விட்டது. எழுந்து அவன் பரபரவென்று கீழே சென்றான்.

"ராஜம்! அவன் ஒரே பிடிவாதமாக இருக்கிறான். எனக்கு என்ன செய்வதென்றே தோன்றவில்லை..." — விசனத்துடன் சொன்னாள் பார்வதியம்மாள். எதிரே நின்றுகொண்டிருந்த ராஜத்தின் முகத்தில் ஈயாடவில்லை.

"மாமி! நீங்கள் விசனப்பட வேண்டாம். ...வாஸந்தி இங்கு வந்ததிலிருந்தே நான் அவரைக் கவனித்து வந்தேன். அவர் மனப்போக்கு ஒருவாறு எனக்குப் புரிந்துவிட்டது. முதலில் எனக்குச் சற்றுக் கஷ்டமாய் இருந்தது. ஆனால் இப்பொழுது நான் ஒரு முடிவுக்கு வந்து விட்டேன். அவர் சுகம்தான் என் சுகம். அவர் சந்தோஷமாக இருந்தால் அதுவே எனக்குப் போதும். அவர் இஷ்டப்படியே நடக்கட்டும்!" — நிதானமாகச் சொன்னாள் கல்யாணி; அவள் வார்த்தைகள் அவள் மனத்தின் உண்மையான நிலைமையைத்தான் எடுத்துக் காட்டின. ஆயினும் அதில் ஏக்கம் தொனித்தது.

அடுத்த கணம் ராமமூர்த்தி அங்கே வந்தான்.

"அம்மா! அத்தை! தீர யோசிக்காமல் ஏதோ அவசரப்பட்டுக் கொண்டு சில வார்த்தைகளைச் சொல்லி விட்டு, உங்கள் மனத்தைப் புண்படுத்தி விட்டேன். கல்யாணியின் மனத்தையும் கலக்கி விட்டேன். நான் செய்த தவறு எனக்குப் புரிந்து விட்டது. கல்யாணி என்றைக்கும் என் கல்யாணிதான்" என்ற வார்த்தைகள் படபட வென்று அவன் வாயிலிருந்து வெளி வந்தன. அவன் மனம் தெளிவடைந்து விட்டதை அவன் முகம் எடுத்துக் காட்டியது.

அவன் வார்த்தைகள் கல்யாணியின் காதுகளில் அமிர்த தாரையாக விழுந்தன. அவள் முகத்தில் ஒரு வித புத்தொளி சுடர்விட்டது.

* * *

கழுத்தில் புது மஞ்சட் கிழங்குடன்கூடிய சரட்டில் மாங்கல்யம் ஒளிவீச, ராமமூர்த்தியுடன் தன் பெரியம்மா வீட்டுக்கு — சென்னைக்கு — விருந்துண்ண வந்திருந்தாள் கல்யாணி. 'சரக் சரக்' கென்று புதுப் புடவை ஓசையிட மாடியில், வாஸந்தியின் அறைக்கு ஏதோ காரியமாகச் சென்றாள். உள்ளே பேச்சொலி கேட்கவே கதவண்டை தாமதித்தன அவள் கால்கள்.

"வாஸந்தி! நீ ஊருக்குப் போயிருந்த போது எழுதியிருந்தாயே அந்த அம்மாஞ்சி தானே இவர்?" இது வாஸந்தியின் சிநேகிதியின் குரல்.

"ஆமாம், அவரேதான் இவர்!" என்றாள் வாஸந்தி.

"நீ எழுதி இருந்ததைப் பார்த்தால் — நீ அவருடன் பழகின விதத்தையும், அவர் உன்னுடன் பழகின மாதிரியையும், நீ வர்ணித்திருந்ததை வாசித்தபோது நீ மிஸஸ் ராமமூர்த்தியாகி விடுவாய் என்று நினைத்தேன். ஆனால் அவருக்கு இப்போது வேறு இடத்தில் கல்யாணமாகி, இங்கே விருந்து சாப்பிட வந்திருக்காப்போல இருக்கே!"

"நீலா! நான் ஒரு பெரிய பாவகாரியத்தைச் செய்ய இருந்தேன். அவர் இப்போது மணந்திருப்பது என்னுடைய சித்தி பெண் கல்யாணியைத்தான். சில வருஷங்களாக அவர்கள் இருவரும் ஒன்றாகப் பழகினவர். அந்தப் பெண் இவரிடத்தில் உயிரையே வைத்திருக்கிறாள். என் மாமியும், என் சித்தியும் ஏற்கெனவே கல்யாணி இவருக்குத்தான் என்று நிர்மாணித்தனர். இந்த விவரம் ஒன்றும் எனக்கு முதலில் தெரியாது. நான் போனவுடன் அவர் என்னுடன் சகஜமாகப் பழகினார்; நான் என் மனத்தை அவரிடம் பறி கொடுத்தேன். ஆனால் ஒரு நாள் இரவு இருவரும் இவருடைய அம்மாவும் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டேன். முதலில் கல்யாணியை மணக்க இசைந்திருந்த இவர் என்னைக் கண்டதும் என்னை மணக்கத் திட்டம் போட்டதை நான் அறிந்தேன். பேதைப் பெண் கல்யாணியின் வாழ்வைப் பாழ்படுத்தக் கூடாதென்று முடிவு பூண்டேன். உடனே நான் எங்கள் ஆபீஸ் ஹெட்கிளார்க்கைக் காதலிப்பதாக ஒரு பொய்க் கடிதம் தயாரித்து அதை அவர் கண்களில் படும்படி வைத்தேன். என் தந்திரம் பலித்தது...உண்மைக் காதலர் இருவரும் கூடினர். ஒரு பெரிய பாவத்தைச் செய்வதிலிருந்து நான் மீண்டேன்......!" என்றாள் வாஸந்தி. அவள் வார்த்தைகள், ராமமூர்த்தியைத் தான் மணக்கக் கொடுத்து வைக்கவில்லையே என்று அவள் அடைந்த ஏக்கத்தை எடுத்துக் காட்டாமல் போகவில்லை.

சட்டென்று உள்ளே நுழைந்தாள் கல்யாணி. வாஸந்தியின் இரு கரங்களையும் பற்றிக் கொண்டாள்.

"வாஸந்தி! உன் போன்ற ஒருத்தியை..." அதற்குமேல் கல்யாணியின் வாயிலிருந்து வார்த்தைகள் வெளிவர மறுத்தன. உணர்ச்சிப் பெருக்கால் அவள் கண்களின் ஓரங்களில் நீர் விளிம்பு கட்டி நின்றது.

"சீ அசடே!" என்று சொல்லிக் கொண்டே வாசந்தி அவள் கண்களைத் துடைத்தாள்.

23. இதென்ன தர்ம சங்கடம்?

ஜ்வாலாப் பிரஸாத் தேர்ந்த வியாபாரி தான். தொழில் முறையை நன்கு உணர்ந்தவர் தான். வியாபாரத் தோது அவருக்குத் தெரிந்தாற்போலப் பிறருக்குத் தெரிந்திருக்க நியாயம் இல்லைதான். ஆனால் மனைவியிடம் அடிக்கடி இப்படி அலட்சிய மனோபாவம் காட்டிக் கொண்டிருந்தால், இரு உள்ளங்களும் பாதை விட்டுப் பாதை பிரிந்துவிடும், வெவ்வேறு திசையில் ஓடத் தொடங்கிவிடும் என்ற மனத் தத்துவம், தொழில் தத்துவம் தெரிந்த அவருக்குத் தெரிந்திருந்தால்தானே? உடல் ஒரே இடத்தில் இருந்த பொழுதிலும் உள்ளம் ஓரிடத்தில் நிலை நிற்காமல் போய்விடும். அப்படிப் போகும் அதன் போக்கைத் தடுக்க முடியாது. உள்ளம் ஒருமிக்காமல் உடல் மட்டும் ஒருமித்து என்ன பயன்? அலட்சியம் தோய்ந்த ஒவ்வொரு செயலும் மனைவியின் மனத்தை எப்படிப் புண்படுத்தும், எத்தகைய எதிர்ப் பாதையில் இழுத்துச் செல்லும்? இதைப் பற்றி யெல்லாம் யோசிக்க அவருக்குக் கொஞ்சமாவது பொழுது இருந்தால்தானே?

'பணம், பணம்' என்று வெறும் பணத் தாசை பிடித்திருந்தால் இதற்கெல்லாம் எங்கே பொழுது இருக்கும்? 'பணம், பணம்' என்று பணப் பித்துப் பிடித்து அலைபவர்களும் 'வேலை, வேலை' என்று இருபத்து நான்கு மணி நேரமும் வேலையில் மூழ்கிக் கிடப்பவர்களுமான குடும்பஸ்தர்கள் குடும்பத்தில் உள்ள நிலையைப் பற்றிக் கொஞ்சமாவது யோசித்துப் பார்க்க வேண்டும். இரவு பன்னிரண்டு மணிக்குப் பிறகும், அவர்களுடைய மனம் பட்டின் விலை நிலவரம் எப்படி யிருக்கிறது, வெள்ளி தங்கம் ஆகியவற்றின் விலை குறைந்திருக்கிறதா, ஏறியிருக்கிறதா என்பது போன்ற விஷயங்களில் ஈடுபட்டிருந்தால், அப்பொழுது அவர்களுடைய மனைவிமார்களின் உள்ளத்தில் எத்தகைய சிந்தனை இடம் பெற்றிருக்கும் என்பதைச் சிறிதாவது சிந்தித்துப் பார்க்க வேண்டும். அப்பொழுதுதான் குடும்ப வாழ்க்கையில் அலட்சிய மனோபாவம் கொள்வதைக் காட்டிலும் தவறான காரியம் வேறு ஒன்றும் இருக்க முடியாது என்பதை அறிவார்கள். வியாபாரத்தில் கொஞ்சம் அசிரத்தையோ அலட்சியமோ காட்டிவிட்டால், அப்படி யொன்றும் பெரிய பாதகம் ஏற்பட்டு விடாது. ஆனால் குடும்ப வாழ்க்கையில் கொஞ்சம் அசிரத்தையோ அலட்சியமோ காட்டி விட்டால் போதும், பெரிய பெரிய கவலைக்கிடமான காரியங்கள் நிகழ்ந்து விடக்கூடும். அதன் பயன் பயங்கரமானதாகவே இருந்தாலும் சிறிதும் ஆச்சரியப் படுவதற்கில்லை.

அதுவும் ஜ்வாலாப் பிரஸாத் போன்றவர்கள் அலட்சியப் படுத்தினால் ராதா போன்ற பெண்களின் மன நிலை எத்தகையதாக மாறி விடக் கூடும்? ராதாவோ சுகத்திலே வாழ்ந்து சுகத்திலே திளைப்பவள்; படித்தவள், கல்வி கேள்விகளில் சிறந்தவள். உணர்ச்சியும் உற்சாகமும் உள்ளவள். அகந்தை தலைக்கேறிய அழகி. தனக்கும் ஒரு தன்மானம் உண்டு என்று எண்ணும் கும்பலைச் சேர்ந்தவள். அவளுக்கு அந்தரங்கக் காரியதரிசியாக, — இல்லை, இல்லை— உபாத்தியாயராகச் சுதாகரைப் போன்ற வாலிபன் வேறு வந்து சேர்ந்திருந்தான். சுதாகரும் எப்படிப்பட்டவன்? நல்ல ஆண் அழகன், நன்கு படித்தவன், கெட்டிக்காரன், எல்லாவிதத்திலும் தகுதியானவன். எனவே, அவனுடன் இருக்கும் வாய்ப்புப்பெற்ற ராதா மட்டுமரியாதை ஆகியவற்றைத் தாண்ட விரும்பி விட்டால் யாரைக் குறை கூறுவது? ஜ்வாலாப் பிரஸாத் நிலையை உணர்ந்து அதற்கேற்றவாறு நடக்க முயன்றிருக்க வேண்டும்.



ரமண்லால் வஸந்தலால் தேசாய்

மொழிபெயர்ப்பு: ரா. வீ

ஆனால்......

"நான் போய் வரட்டுமா?" என்றார் ஜ்வாலாப் பிரஸாத். அவர் கவலை அவருக்கு.

"சரி!" என்று அதிகம் வளர்த்தாமல் ஒரே வார்த்தையில் பதில் அளித்தாள் ராதா.

ஜ்வாலாப் பிரஸாத் புறப்பட்டார். சுதாகரும் புறப்படத் தயாரானான்.

"இருங்கள். உங்களுடன் நானும் வருகிறேன். உங்களை அப்படியே உங்கள் வீட்டில் கொண்டு போய் விட்டு விட்டு நான் உலாவப் போகிறேன்!" என்ற ராதா இன்னொரு காரை எடுக்குமாறு உத்தர விட்டாள்.

அது வரை சுதாகர் பெண்களுடன் மோட்டாரில் போனதே இல்லை. எனவே, ராதாவுடன்கூட மோட்டாரில் உட்காரும் படியாகி விட்டால் என்ன செய்வது என்று சுதாகர் அச்சமுற்றான். மோட்டாரில் தைரியமாக அப்படி உட்கார்ந்து போவதற்கு மனோ பலம் வேண்டும். உலகத்தை வெகு அலட்சியமாக அகந்தையுடன் பார்க்கக் கூடிய பார்வை வேண்டும். கம்பீரமான அதிகார தோரணை நிறைந்த உடற் கட்டும் உள்ளப் போக்கும் வேண்டும். தான் நினைத்தால் இந்த உலகத்தில் கிடைக்காதது ஒன்றும் இல்லை என்ற முறையில் தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்ளும் திறன் பெற்றிருக்க வேண்டும். குறுகிய மனமும் பருத்த வயிறும் படைத்திருக்க வேண்டும். பக்கத்தில் ஒரு பெண்மணி உட்கார்ந்திருந்தால், தன்னைப் பார்த்துப் பலர் பலவிதமாகப் பேசிக் கொண்டாலும் அந்தப் பேச்சைப் பொருட் படுத்தாமலிருக்கும் மனப் போக்கை உடையவனாக இருக்க வேண்டும் இவ்வளவு முன்னேற்பாடுகளும் இன்றி ஒருவன் மோட்டாரில் உட்கார்ந்து பிரயாணம் செய்வது வீண்; பலனற்றது. அப்படி உட்காரவே நினைத்தாலும் அவனால் முடியாது.

இம்மாதிரி நிலையை உட்காரும் மோட்டார் உண்டு பண்ணுகிறதா, நாம் வாழும் சமூகம் உண்டு பண்ணுகிறதா? இது விவாதத்துக்குரிய விஷயம். ஆனால் மோட்டாரில் உட்காருபவர்களைப் பார்த்துச் சுதாகர் இப்படியெல்லாம்தான் யோசித்து வந்தான்.

ஆயினும் மோட்டாரில் உட்காரத் தன்னால் இயலாது என்று அவனால் மறுதளிக்க இயலவில்லை. மோட்டார் வந்ததும் ராதா வெகு டாம்பீகமாக மோட்டாரில் போய் உட்கார்ந்தாள். எங்கே உட்காருவது, எப்படி உட்காருவது என்று ஒன்றும் புரியாமல் விழித்துக் கொண்டு சஞ்சலப் பட்டுக் கொண்டு தர்ம சங்கடத்தில் உழன்று கொண்டிருந்த சுதாகர் டிரைவரின் அருகில் உட்காருவதற்காக முன் பக்கத்து ஆஸனத்தை நோக்கிச் சென்றான். அவனுடைய அந்த எளிய தன்மையைக் கண்ட ராதாவினால் சிரிக்காமல் இருக்க முடியவில்லை. விவேகமும் சங்கோசமும் உள்ள மனிதன் தனக்கு மிக மிகச் சாதாரணமான இடத்தைத் தேடிக் கொண்டு, நல்ல இடத்தைப் பிறருக்கு ஒழித்துக் கொடுத்து விடுகிறான். அவனுடைய கெட்டிக்காரத் தனமே அதில்தானே அடங்கி யிருக்கிறது?



சங்கோச சுபாவம் படைத்த அறிவாளியான சுதாகர், தான் தப்புவதற்காக அம்மாதிரி வழியைத் தான் தேடினான்.

"அங்கே எங்கே போய் உட்காருகிறீர்கள்? இங்கே வந்து உட்காருங்கள்!" இவ்வாறு கூறிச் சுதாகரை இன்னும் தர்ம சங்கடத்தில் ஆழ்த்திக் கொண்டிருந்தாள் ராதா. மோட்டாரில் உட்காருவதனால் தலை சுற்றுகிறது என்று பாசாங்கு செய்து தப்பித்துக் கொண்டு விடலாம் என்று தோன்றி யிருந்தால், சுதாகர் அப்படியே செய்திருப்பான். ஆனால் அவனால் அம்மாதிரி ஏதும் பாசாங்கு செய்ய முடியவில்லை. எனவே, வேறு வழியின்றி ராதா சொன்னபடி ராதாவுக்குப் பக்கத்திலே போய் உட்கார்ந்தான். வேறு அவன் என்ன செய்வான், பாவம்.

பின் பக்கத்து ஆசனத்தில் ராதாவுக்கு அருகில் உட்கார்ந்த சுதாகர் ஒ

மூலையில் உடலை ஒடுக்கிக் கூனிக் குறுகி உட்கார்ந்தான். மோட்டார் இருவரையும் ஏற்றிக் கொண்டு பறந்தது. காற்றின் வேகத்தில் ராதாவின் புடவைத் தலைப்புப் பறந்து சுதாகரைத் தொட்டுவிடும். அப்பொழுதெல்லாம் அவன் தீயை மிதித்து விட்டவன் போலத் திடுக்குற்றுத் துள்ளிக் குதிப்பான். எஜமானியின் சுதந்திரம், பெண்ணின் பேதைமை, பணம் படைத்தவர்களின் படாடோபம், செருக்கு ஆகியவை புடை சூழ உட்கார்ந்திருந்த ராதாவின் கால்கள் தப்பித் தவறிச் சுதாகரின் கால்களில் பட்டுவிட்டால் பீதியுற்றுப் பின்னும் ஒடுங்குவான். சுதாகரின் சங்கோசத்தையும் வெட்கத்தையும் தர்ம சங்கடத்தையும் ராதா கண்டாள்; கவனித்தாள். நன்றாகப் புரிந்தும் கொண்டாள். புது மாட்டுப் பெண்ணின் அடக்க ஒடுக்கத்தையும் நாணம், அச்சம் ஆகியவற்றையும் கண்டு, தோழிமார்கள் சிரிப்பார்களே, அது போல ராதாவுக்குச் சுதாகரின் செயல்கள் சிரிப்பைத்தான் உண்டு பண்ணின. அவளால் தன் சிரிப்பை அடக்க முடியவில்லை. தன்னையும் மீறிச் சிரிப்பு வரவே, அவள் ‘கல கல’ வென்று சிரித்து விட்டாள். சுதாகர் பிரமித்து சிலைக் குத்திட்டவன் போல் ஆகி விட்டான். ‘ஏதடா, இது! நாம் பெரிய தர்ம சங்கடத்தில் வந்து மாட்டிக் கொண்டு விட்டோமே!’ என்று எண்ணித் திண்டாடினான். ஆனால் ராதா வெகு சௌஜன்யத்துடன் அவனைக் கூப்பிட்டு, மோட்டாரில் எப்படி உட்கார வேண்டும் என்பதைச் சொல்லிக் கொடுத்தாள்.

அவன் சரியாக உட்கார்ந்த பின் இதழ்க் கடையில் சிரிப்புத் தவழ, “நீங்களும் ஒரு மனிதர் மாதிரி! இப்படியா மோட்டாரில் உட்காருவது? உங்களை யாரும் விழுங்கிவிட மாட்டார்கள். ஜம் மென்று உட்காருங்களேன்!” என்று கூறிக் கேலியும் செய்தாள்.

24. பரமானந்தரின் பரிசு!

மனோரமாவுக்கும் மாதவப்பிரஸாதுக்கும் திருமணம் நடந்தேறியது என்று சொன்னாலும் சரி, மாதவப்பிரஸாதுக்கு மனோரமாவை மணம் முடித்து வைக்கப்பட்டது என்று சொன்னாலும் சரி, இரண்டுக்கும் ஒரே பொருள் தான். இருவரும் ஒருவருக்கொருவர் வாழ்க்கைத் துணைவர்கள் ஆகி விட்டார்கள். அந்தக் கல்யாணத்தினால் தாய் தந்தையருக்கு அளவற்ற மகிழ்ச்சி ஏற்பட்டது என்றால் அதில் ஆச்சரியப் படுவதற்கு என்ன இருக்கிறது? பெண்ணுக்குக் கல்யாணம் நடந்தேறியது என்றால் சந்தோஷப் பட வேண்டியவர்கள் தாய் தந்தையர்கள் தானே? அந்த ஊரில் மட்டும் என்ன, அந்தப் பிராந்தியத்திலேயே மிக மிகப் பெரிய பணக்காரக் குடும்பத்தில் அவர்களுடைய பெண் வாழ்க்கைப் பட்டிருந்தாள். புகுந்த இடமும் பெரிது கட்டின புருஷனும் உயர்ந்தவன் என்றால், பெண்ணைப் பெற்றவர்களுக்கு அதைக் காட்டிலும் வேறு என்ன வேண்டும்? ராமலால் சுபத்திரா இருவருடைய வாழ்க்கையிலும் உள்ள ஒரே ஆசை என்ன? பெண் நல்ல இடத்தில் புகுந்து நன்றாக வாழ்க்கை நடத்த வேண்டும் என்பதுதானே? அந்த ஆசை நிறைவேறியதும் தங்கள் சுமை இறங்கியதாகவே எண்ணி அவர்கள் மகிழ்ச்சியுற்றார்கள். அவர்களுடைய அந்த மகிழ்ச்சி இயல்பானதுதானே?

ஊரில் உள்ளவர்களுக்கும் அந்தச் சம்பந்தம் மனத்துக்கு மிகவும் மகிழ்ச்சியை அளித்தது. அந்தப் பக்கத்தில் அந்த விவாகத்தை விரும்பாத ஜனங்களே இல்லை யென்று சொல்லலாம். உற்றார் உறவினர்களும், பந்து மித்திரர்களும் அந்தச் சம்பந்தத்தை வெகுவாகப் புகழ்ந்து பாராட்டினார்கள்.

மாதவப் பிரஸாதுக்கு அழகும் குணமும் பொருந்திய மனோரமா மனைவியாக வாய்த்தாள் என்பதற்காக அவருடைய நண்பர்கள் அவரை வாழ்த்தி, அவருடைய அதிர்ஷ்டத்தைப் புகழ்ந்தார்கள். மனோரமாவுக்கு மாதவப் பிரஸாதைப் போன்ற பெயரும், புகழும் பணமும் படைத்த மணாளன் கிடைத்ததற்காக, மனோரமாவின் தாய் தந்தையரிடம் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்து அவர்களுடைய ஆனந்தத்தைத் தாங்களும் பங்கு போட்டுக் கொண்டார்கள். ஆனால் மனோரமாவுக்கு அவளுடைய கல்யாணத்துக்காக வாழ்த்துக் கூற யாருமே முன் வரவில்லை. அவளுக்கு வாழ்த்துக் கூற வரவேண்டிய தோழிகளுக்கு அப்படி என்ன பஞ்சம் ஏற்பட்டு விட்டதோ, தெரியவில்லை. அவளுடைய முக பாவத்தைக் கண்ட யாருக்குமே அவளுக்கு வாழ்த்துக் கூற வாய் எழவில்லை. அவளிடம் பேச்சுக் கொடுக்கத் துணிவே உண்டாக வில்லை.

மனோரமாவும் தன் திருமணத்தில் மனத்தைச் செலுத்தி மகிழ வில்லை. அப்படி அவள் மகிழவேண்டும் என்பதும் ஒரு அவசியம் இல்லையல்லவா? பெண்கள் தங்களுக்குக் கல்யாணம் என்றால் அதைப் பறைசாற்றிக் கொண்டு மகிழ்வா செய்வார்கள்? நாணிக் கோணிக் கொண்டு நாலு பேருக் கெதிரே வரத் தயங்கத்தானே செய்வார்கள்? பெண்கள் என்றால் அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு ஆகிய பெண்களுக்கு இயல்பான குணங்கள் இருப்பதுதானே இயல்பு? பெண்களுக்குத் தங்கள் இனத்துக்கு இயல்பான அந்தக் குணங்கள் இல்லை யென்றால் அவர்களைப் பெண்கள் என்று சொல்லத்தான் முடியுமா?

சுபத்திராவுக்குத் தனக்கு நடந்த கல்யாணம் நினைவு வந்தது. அந்தப் பழைய நினைவுகளிலே அவளுக்கு இன்பம் துய்த்தது. அவளும்தான் தன் அப்பா—அம்மாவைப் பிரிய நேர்ந்த பொழுது, கண்கள் கலங்க அழுது விட்டாளே! எனவே, அவளுக்கு மனோரமாவின் மனம் சரியில்லாமல் இருந்தது ஒன்றும் விசேஷமாகப் படவில்லை. நான்கு நாட்கள் போனால் எல்லாம் தானாகச் சரியாய்ப்

போய் விடும் என்றே எண்ணினான். அவனுடைய அநுபவம் அவனை அப்படி எண்ணும்படி செய்தது.

பரமானந்தர் கல்யாண தினத்தன்று காலை வந்தார். அன்றைக்கே கல்யாணம் விசாரித்து விட்டுப் புறப்பட்டும் விட்டார். ராமலால் இன்னும் சில தினங்கள் தங்கி விட்டுத்தான் போக வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தார்; வற்புறுத்தினார். ஆனால் அதற்கெல்லாம் பரமானந்தர் மசிய வில்லை. தாம் புறப்பட்டுப் போய்த்தான் ஆகவேண்டும் என்று எதையும் காதில் வாங்கிக் கொள்ளாமல் கிளம்பி விட்டார்.

விடை பெற்றுக் கொள்ளும் பொழுது பரமானந்தர், "என் அப்பா, ராமலால்! கல்யாணத்தை நிச்சயிப்பதற்கு முன்பு என்னை ஒரு தடவை கலந்து ஆலோசித் திருக்கக் கூடாதா?" என்று வெகு சௌஜன்யமாகவே கேட்டார்.

"உன்னைக் கலந்து ஆலோசித்திருக்க வேண்டியவன்தான். ஆனால் நீ இன்று இருந்த இடத்தில்தான் நானே இருப்ப தில்லையே! உன் பிழைப்புத்தான் ஊர் சுற்றிப் பிழைப்பாகி விட்டதே! உன்னைப் போய் எங்கே யென்றுதான் நான் தேடுவது? உன்னைத் தேடி உன் ஆலோசனையைக் கேட்ட பின்தான் கல்யாணம் நடத்துவது என்றால், கல்யாணம் இந்த ஜன்மாவில் நடந்தாற் போலத்தான்!—என், பரமானந்தம்! கிடைத் தற்கரிய இத்தகைய சம்பந்தம் கிட்டும் பொழுது ஒருவரை ஆலோசனை கேட்க வேண்டுமா? மாதவப் பிரஸாதைப் போன்ற வரன் எல்லோருக்கும் எளிதில் கிடைத்து விடுவார்களா? எனவேதான், காற்றுள்ள போதே தூற்றிக் கொள் என்ற கொள்கை யைக் கடைப்பிடித்துக் காரியத்தை முடித்து விட்டேன். மாதவப் பிரஸாதைக் காட்டிலும் நல்ல இடம் நமக்கு வேறு எங்கே கிடைக் கப் போகிறது? அதனால்தான் 'உன்னைக் கேட்க வேண்டியது அநாவசியம். நீ ஒன்றும் மறுக்க மாட்டாய். இந்தச் சம்பந்தத்தில் மகிழ்ச்சிதான் கொள்வாய்' என்று எண்ணி முடித்து விட்டேன்!" என்றார் ராமலால்.

"இதெல்லாம் உன் அபிப்பிராயம். உன் அபிப்பிராயத்தை நான் கேட்க வரவில்லை. 'இந்தச் சம்பந்தத்தில் மனோரமாவுக்குத் திருப்திதானா? இது சம்பந்தமாக அவளைக் கேட்டாயா? அதற்கப்புறம் நான் நிச்சயம் பண்ணினாயா?' என்று கேட்கிறேன்!" என்றார் பரமானந்தர்.

"கேட்காமல் நிச்சயம் பண்ணி விடுவேனா? என்னை அவ்வளவு தெரியாதவன் என்று நீ எண்ணுகிறாயா, என்ன? அவளைக் கேட்டு விட்டுத்தான் நிச்சயம் பண்ணினேன்!" என்றார் ராமலால் பெருமையாக.

ராமலாலின் பதிலைக் கேட்டுப் பரமானந்தர் ஏளனமாகச் சிரித்தார். அவர் சொல்லில் பரமானந்தருக்குச் சிறிதும் நம்பிக்கை உண்டாகவில்லை என்பதை அவர் சிரித்த அந்த ஏளனச் சிரிப்பே நன்றாக எடுத்துக் காட்டியது. அதற்கு மேல் அவர் ராமலாலுடன் பேச்சுக் கொடுக்க விரும்ப வில்லை. 'அவ்வளவுதான் அவன் பாக்கியம்!' என்று எண்ணுபவர்போல் விட்டு விட்டார்.

புறப்படும் பொழுது புடவை யொன்றும் அலங்காரப் பெட்டி யொன்றும் மனோரமா வுக்குத் திருமணப் பரிசாக ராமலாலின் கையில் கொடுத்தார். கொடுக்கும் பொழுது ஒரு விசித்திர நிபந்தனையும் விதித்தார்.

"இந்தப் பெட்டியை நான் போன பிறகு தான் திறந்து பார்க்க வேண்டும். அதற்கு முன் எந்தக் காரணத்தைக் கொண்டும் பார்க்கக் கூடாது!" என்பதுதான் அந்த நிபந்தனை. அதைக் கேட்ட ராமலால் சிரித்தார். பரமானந்தரின் விசித்திரச் சுபாவம் அவருக்குத் தெரிந்ததுதானே?

பரமானந்தர் புறப்பட்டுப் போன பிறகு, அலங்காரப் பெட்டியைத் திறந்து பார்த்தால் அதில் பதினையாயிரம் ரூபாய்க்கு நோட்டுக் களாக வைக்கப் பட்டிருந்தன.

"இந்தப் பரமானந்தம் எத்தனை விசித்திர மான மனுஷ்யன், பார்! நான் பதினாயிரம் ரூபாய் பணத்தை வாங்கிக் கொள்ள மாட் டேன் என்று சொன்னதற்காக இப்படி ஐயாயிரம் சேர்த்துப் பதினையாயிரமாகக் கொடுத்து விட்டுப் போய் விட்டான்! அவனை என்ன செய்தால் தேவலை?" என்று ராமலால் சுபத்திராவிடம் சொல்லிக் கொண் டிருந்தார், மனத்துள் தம் நண்பனின் நல்ல தனத்தை மிகவும் மெச்சியவாறே.

மாதவப் பிரஸாதுக்கு ஏற்பட்ட மகிழ்ச் சிக்கு ஓர் எல்லையில்லை. மனோரமா அவருக்கு மனைவியாக அவருடைய வீட்டுக்கு வந்துவிட்ட படியால் அவருடைய குழந்தைகள் மகிழ்ச்சி யடைவார்கள்; தாயில்லாக் குறையை மறப்பார்கள். குடும்பமும் சீர்படும். லக்ஷ்மி போன்ற பொல்லாத பெண்ணிடமிருந்து அவர் தப்பவும் முடியும்; ஒழுக்கம் தவறாத வராக, நன்னடத்தை உடையவராக அவர் வாழ முடியும். இகலோக வாழ்வில் மனிதன் விரும்பும் இன்ப போகங்களை நெறி தவறாத முறையில் அவர் அநுபவிக்க முடியும். இம்மாதிரி எண்ணங்களில் அவருடைய பொழுது ஆனந்தமாகப் போகலாயிற்று.

இந்த உலகத்தில் நீதி நெறியின் பெயரால் இது போன்ற அநீதி நிறைந்த திருமணங்கள் எத்தனை எத்தனை நடை பெறுகின்றன என்பதைச் சமூக சாஸ்திரம் உணர்ந்த, சட்ட திட்டங்கள் படித்த எந்த வல்லுந ராவது கணக்கிட்டுப் பார்த்திருக்கிறார்களா? நல்லொழுக்கத்துக்கும் திருமணத்துக்கும் என்ன தொடர்பு இருக்கிறது, எத்தகைய தொடர்பு இருக்கிறது, எத்தனை தொடர்பு இருக்கிறது என்பதைப் போன்ற விஷயங் களைக் கல்வி கேள்விகளில் தேர்ந்த எந்த அறிவாளியினாலாவது விளக்கிக் கூற முடி யுமா? திருமணங்களினால் ஒழுக்கம் உயர்

கிறதா, குறைகிறதா? ஆசைகளை அடக்கி ஆள முடியாததனால், இன்ப போகங்களை இஷ்டப்படி அநுபவிக்க வேண்டும் என்ற ஒரே குறிக்கோளுடன் செய்து கொள்ளப்படும் திருமணங்களில் தர்மத்தின் தூய்மை எந்தகைய நிலையை அடைகிறது? —இது போன்ற விஷயங்களை யாராவது எடுத்துக் கூற முடியுமா? தர்ம சாஸ்திரங்கள் திருமணத்தின் தூய்மையைப் பறை சாற்றுகின்றனவே! அந்தத் தூய்மை எத்தனை திருமணங்களில் நேர்மையுடனும் நெறியுடனும் காணக் கிடைக்கின்றன?

சிறிது சிரமத்தைப் பாராட்டாமல் நாம் நம் கண்களைக் கொஞ்சம் திறந்து பார்க்க முற்பட்டால், பெரும்பாலான திரு மணங்களின் உண்மை ஸ்வரூபம் புலனாகும். தர்மத்தின் தூய்மையை ஒருபுறம் மூட்டை கட்டி வைத்து விட்டு உடற் பசியைத் தணித்துக் கொள்ளவென்றே சமூகத்தின் கண்களில் மண்ணைத்தூவிப் பற்பல திருமணங்கள் செய்யப்பட்டிருக்கின்றன, செய்யப் படுகின்றன என்பதை நாம் கண்கூடாக அறிவோம். இன்னும் கொஞ்சம் கூர்ந்து கவனித்தால், பல குழந்தைகள், மருந்துக் கடைகள், சிறைக் கூடங்கள் ஆகியவற்றின் சித்திரங்கள் மங்கலாக நம் கண் முன்னே தோன்றும். 'இந்தக் குழந்தைகளில் எத்தனை தர்ம நியாயமான முறையில் பிறந்தன, எத்தனை அவ்யாபிருத வியாபாரத்தினால் உண்டானவை?' என்பது போன்ற கேள்விகள் இருதயத்தில் இடம் பெறக் கூடும். அது மட்டுமா? நோயும் நொடியும் பிடித்த நோஞ்சல் குழந்தைகளுக்குப் பொறுப்பாளி யார்? இந்த மருந்துக் கடைகள் இப்படி ஈசல் போல் அதிகரித்துக் கொண்டே போவதற்குக் காரணம் என்ன? பிறந்த குழந்தைகளைப் பராமரிக்க முடியாததனால் எப்படியெப்படியெல்லாம் சிறைக் கூடங்கள் எழும்புகின்றன என்பது போன்ற கேள்விகளும் கூடவே எழும். இப்படியே கேள்விகளுக்கு மேல் கேள்விகளாக எழுந்து மூளையைக் கழற்றி எடுத்து விட்டுத் தான் மறுகாரியம் பார்க்கும். எனவே, இம்மாதிரித் திருமணங்கள் எல்லாம் நல்லொழுக்கத்துக்கும் நல்லறத்துக்கும் உள்ள தொடர்பை விளக்கக் கூடியவை தானா என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா?



அம்பி :—தாத்தா, நான் முறுக்கு தின்னப் போகிறேன். இதோ பார்!

தாத்தா :—பேஷ்! சரிதான்.

அம்பி :—தாத்தா, முறுக்கு தின்பதற்கு உன்னுடைய பல்லைக் கொஞ்சம் கழற்றி இரவலாகக் கொடுக்கிறாயா?

இதைப்பற்றியெல்லாம் சிந்தனை செய்து ஒருவர் எதற்காக வீணில் மூளையைப் போட்டுக் குழப்பிக் கொள்ள வேண்டும்? திருமணத்தினால் கிட்டக் கூடிய ஆனந்த போகங்களை அநுபவிப்பதற்கென்றே மாதவப் பிரஸாத் மனோரமாவை மறுமணம் செய்து கொண்டார். எல்லோரையும் போலவே, அவருக்கும் அந்த இன்ப போகங்களை அநுபவிக்க உரிமை இருக்கிறது. ஆனால் அந்த ஆனந்தத்தை அநுபவிக்க அவர் அருகதையற்றவர், உரிமையற்றவர் என்று கூறித் தடுக்க யாருக்குமே உரிமையில்லை; சட்டதிட்டங்களும் அப்படிச் செய்வதற்கு அது நல்ல வேளையோ, கெட்ட வேளையோ, சிறிதும் இடம் கொடுக்கவில்லை.

கல்யாணம் ஆனபின் உலக வழக்கப்படியே மனோரமா புக்ககம் வந்து சேர்ந்தாள். அவள் வாய் திறந்து யாருடனும் அதிகமாகப் பேசுவதில்லை. ஏன்? கொஞ்சங் கூடப் பேச்சே வைத்துக் கொள்ளவில்லை என்று தான் சொல்ல வேண்டும். அவளுடைய கண்களின் கவர்ச்சி கூடக் கொஞ்சம் கொஞ்சமாகக் குறையத் தொடங்கியிருந்தது. முகம் வர வரக் களையிழந்து காணப்படலாயிற்று. வீட்டின் ஒவ்வொரு மூலையும் அவளைக் கடிக்க வருவது போலத் தோன்றியது. ஏதோ யந்திரம் போல அவள் நடமாடி வந்தாளேயொழிய உணர்ச்சி என்பதையே இழந்தவளாகத்தான் காணப் பட்டாள்.

மனோரமாவுடன் நெருங்கிய தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள எண்ணி லக்ஷ்மி என்ன என்னவெல்லாமோ பிரயாசை எடுத்துக் கொண்டாள். இரவு பகல் இருபத்து நான்கு மணி நேரமும் அவளுடன் உட்கார்ந்திருப்பாள். காலா காலத்தில் உணவு உண்ண வேண்டுமென்று வற்புறுத்துவாள். அவள் உடல் நலத்தையே தன் உயிர் நிலையாகக் கொண்டவள் போல் பேசுவாள். வண்டியை எடுத்துக் கொண்டு எங்கேயாவது உலாவப் போய் வருமாறு தூண்டுவாள். வீட்டில் உள்ள நகை நட்டுகளின் முடிவில்லாத ஜாபிதாவை எடுத்துக் கூறி ஏகமாக வர்ணிப்பாள். மாதவப் பிரஸாதின் இயல்புகளையெல்லாம் எடுத்துக் கூறி அவரைப் போன்ற தங்கமான மனிதர் இந்தப் புவியில் கிடைப்பதே அபூர்வம் என்று வாயாரப் புகழ்வாள். அவருடைய அழகையும் அறிவையும் பற்றி அவள் அளக்கத் தொடங்கி விட்டால் கேட்பவர்கள் அப்படியே சொக்கிப் போய் விட வேண்டும். லக்ஷ்மி அவ்வளவு பேச்சுப் பேசியும் கூட அவள் பேச்சில் மயங்கி மனோரமா மகிழ்ந்து விடுவதில்லை. நாளுக்கு நாள் குன்றிக் கொண்டே வரும் அவளுடைய உற்சாகம் நின்று நிலைபெறுவதும் இல்லை; நிறைபெறுவதும் இல்லை. மனோரமாவின் முகக் களையும் மன உற்சாகமும் வர வரக் குறைந்து கொண்டேதான் வந்தன.

ஆயினும் லக்ஷ்மி அவளுடைய மனத்தில் உற்சாகத்தை உண்டு பண்ணவேண்டி எவ்விதமான குறையும் வைப்பதில்லை. ஏதாவது சொல்லி அவளுடைய மனத்தை மகிழ்விக்க முடியுமா என்றேதான் முயன்று வந்தாள்.

"பெரிய பெரிய துரைமார்களும் வெள்ளைக்காரர்களும் எஜமானரைக் கண்டு விட்டால் கையெடுத்துக் கும்பிடுகிறார்களாக்கும்!"

மாதவப் பிரஸாதின் மகத்துவத்தையும் பெருமையையும் மனோரமாவுக்கு விளக்கும் நோக்கத்துடன் ஒரு நாள் சமயம் பார்த்து ஆரம்பித்தாள் லக்ஷ்மி.

"ஒரு தடவை எஜமானர் ரெயிலில் பம்பாய்க்குப் போய்க் கொண்டிருந்தார். அப்பொழுது ஒரு ஸ்டேஷனில் அவர் ஏறியிருந்த பெட்டியில் இரண்டு வெள்ளைச் சிப்பாய்கள் வந்து ஏறிக் கொண்டனர். வெள்ளைக்காரர்கள் கறுப்பர்களைக் கண்டால் இளப்பமாகக் கருதுவார்களாம். தாங்கள் இருக்கும் இடத்தில் இந்தியர்களை உட்காரக் கூட விடமாட்டார்களாம். தாங்கள் ஆட்சி செலுத்துகிறவர்கள், இந்தியர்கள் ஆட்சி செலுத்தப் படுகிறவர்கள் என்ற எண்ணம் அவர்களுக்கு. எனவே, நம் எஜமானரைப் பார்த்து 'இறங்கு!' என்று அதிகாரம் பண்ணினார்களாம். அதற்கு நம் எஜமானரா செவி சாய்ப்பவர்? 'முடியாது!' என்று தெளிவாக மறுத்து விட்டாராம். வெள்ளைக்காரர்கள் அதட்டி உருட்டிப் பயமுறுத்தி அவரை இறக்கி விட வழிபார்த்தனர். அதற்கு அவர் அசைந்து கொடுக்கவில்லை. அவர்கள் பேச்சைப் பொருட்படுத்திப் பதிலும் சொல்லவில்லை. 'கத்தி விட்டுப் போகிறது, கழுதைகள்!' என்று பேசாமல் உட்கார்ந்திருந்து விட்டார். வெள்ளைத் துரைமார்களுக்குக் கனகோபம் வந்து விட்டது. மூட்டையைத் தூக்கி வெளியில் எறிந்து விடுவோம் என்று சொல்லி அவருடைய ஒரு மூட்டையைக் கூட ஒருவன் எடுத்து விட்டானாம். அத்தனை நேரம் பொறுமையாகப் பேசாமல் உட்கார்ந்திருந்த எஜமானருக்கு அடக்க முடியாத ஆத்திரம் வந்து விட்டது. 'என்னை யார் என்று எண்ணினீர்கள்?' என்று கேட்டவண்ணமே கைத்துப்பாக்கியை எடுத்து அவர்களெதிரே நீட்டி விட்டாராம். அப்புறம் என்ன? அலறிப் புடைத்துக் கொண்டு அந்த ஆங்கிலேயச் சிப்பாய்கள் இரண்டு பேரும் ஓடும் வண்டியிலிருந்து குதித்து இறங்கி அடுத்த பெட்டியில் போய் ஏறிக்கொண்டு விட்டார்களாம். அப்பொழுது சாந்தாவின் தாயார் உயிரோடு இருந்தாள்!"

லக்ஷ்மி சொன்ன அந்தக் கதையில் மனோரமாவுக்கு எந்த விதமான சுவாரஸ்யமும் இருப்பதாகத் தோன்றவில்லை. உப்புச் சப்பற்ற அவள் பேச்சை அலட்சியமாகக் கேட்டவாறு தலை குனிந்தபடியே தான் அவள் உட்கார்ந்திருந்தாள். (தொடரும்)

கண் நிறைந்த மலர்

'கல்கி' தீபாவளி மலர் வழக்கம்போல் மணமும் அழகும் நிறைந்து கண் நிறைந்த மலராகத் திகழ்கிறதென்றாலும், சில புது அம்சங்கள் மலருக்குத் தனிச் சிறப்பை அளிப்பது குறிப்பிட வேண்டிய விஷயம். ராஜாஜி அவர்களின் சீதைக் கதையிலிருந்து தொடங்கி, தவுல் கந்தப்பப்பிள்ளை 'கல்கி' ஆசிரியருக்குக் கூறிய சின்ன பாலாமணியின் ருசி மிக்க கதை வரையில் விஷயங்கள் யாவும் விறுவிறுப்பாக அமைந்துள்ளன.

பாரதியாரின் ஞானரதம் யாவருக்கும் தெளிவாக மனதில் பதியும்படி சித்திரமாகத் தீட்டப் பெற்றுள்ளது போற்றத் தக்கது. இரட்டைச் சித்திர மடல், தமயந்தி கதைச் சித்திரம், கனு தேசாயின் 'நிவேதனம்' முதலிய எல்லாப் படங்களிலும் கலை அழகு மிளிர்கிறது. இப்போதெல்லாம் ராமன், சீதை, பார்வதி முதலிய தெய்வங்களின் உருவங்களைக் கூடத் திரைப் படத் தாரகைகள், நாயகிகளைப் போன்ற முகத் தோற்றத்துடனும் நவீன ஆடையாபரணங்களுடனும் தீட்டி விடுகிறார்கள், சில சித்திரிகர்கள்; அதற்கு மாறாக, 'சந்திரா'வின் 'மேகமே! அடக்கமாயிரு!' பாலு ஸகோதரர்களின் 'லட்சுமணன் அன்பு' ஆகிய படங்கள் தெய்வாம்சம் நிறைந்து விளங்குகின்றன.

எழில் மிக்க இம் மலரிலே ஒரே ஒரு குறை என்னவென்றால், இதில் யாதொரு குறையுமில்லையே, கேவலம் ஒரு அச்சுப் பிழைக் கூட கண்ணுக்குத் தென்படவில்லையே என்ற குறைதான்!

நுங்கம்பாக்கம்
9—11—53

ரா. பாலகிருஷ்ணன்



சத்தம் போடாதே! அவன் தூங்குகிறான்!


Alembic

நேற்று இந்த குழந்தைக்கு
கெட்ட இருமல் இருந்தது
கிளைகோடின் டெர்ப் வசாகா
அவனுக்கு பூரண குணம் அளித்த
தால், இன்று அவன் சுக
நித்திரை புரிகிறான்.

கிளைகோடின் டெர்ப் வசாகா

அலெம்பிக் கெமிகல் வொர்க்ஸ் கம்பெனி லிட்., பரோடா 3.

GTV. 53. 3TN



பட்டுப் பூச்சி

கினஷா

அன்று டாக்டர் கமலநாதனின் பெண் கல்யாணியின் கல்யாணம் அதி விமரிசையாக நடந்தேறியது. கல்யாண வைபவங்கள் யாவும் முடிந்தபின் விச்ராந்தியாகத் தனியிடம் வந்த கமலநாதன் நீண்டதோர் பெருமூச்சுடன் சாய் மானத்தில் சாய்ந்தான். "இன்று இவ்வளவு அழகாக மலர்ந்து இன்பத்தைத் தரும் தன் இல் வாழ்க்கை அன்று—அவன் அழகு தனக்குப் புலப் படாத அன்று, எவ்வளவு சாரமற்றதாகத் தோன் றியது!" இவ்வெண்ணம் எழுந்ததும் டாக்டர் கமல நாதன் மனக்கண் முன் சென்று போன சம்ப வங்கள் நாடகக் காட்சி போல் விரிந்து மலர்ந்தன.

* *
*

பிறந்த குழந்தை கமல மலரைப் போல மிக்க அழகாக இருக்கவே, குழந்தையின் பெற்றோர்கள் அக் குழந்தைக்குக் கமலநாதன் என்ற பெயரைச் சூட்டி மகிழ்ந்தனர். குழந்தை கமலநாதன் நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமு மாக வளர்ந்து பெரியவனாய் யௌவனப் பரு வத்தை அடைந்தபோது, அவனது அழகைக் கண்டு அனைவருமே மோகித்துத் திகைத்தனர்.

பெற்றோரைப் பெருமையில் மூழ்கவைத்த கமல நாதன் தன் கல்லூரிப் படிப்பை முடித்துக் கொண்டு, வைத்தியக் கல்லூரிக்குள் நுழைந்த போது, அங்கே அவனையொத்த வயதையுடைய ஆண், பெண் அனைவருமே அழகுத் தேவதை ளாகத் திகழ்ந்தனர். ஆகவே கமலநாதனது உற்சாகம் கரைபுரண்டு பெருகியது.

இவ்விதமான உற்சாகத்திடையே கமலநாத னின் வைத்தியக் கல்லூரி வாழ்க்கை நடந்து கொண்டிருக்கும் போதுதான் அவன் தகப்பனு ரிடமிருந்து அந்தத் 'தந்தி' வந்தது. தந்தியின் வாசகம் சொல்லியது: "உன் கல்யாணத்தை நிச்சயம் செய்து விட்டேன்; ஒருவார லீவில் உடனே வந்து சேர்."

"தந்தி!" என்றவுடன் கமலநாதனைச் சூழ்ந்து கொண்டு விட்ட அவன் நண்பர்கள், தந்தியின் வாசகத்தைப் படித்தவுடன் பலவிதமாக அவனைப் பரிகசிக்கத் தொடங்கி விட்டார்கள்.

"கமல்! நீ பெண்ணைப் பார்க்க வேண்டிய அவசியம் இல்லாமலே கல்யாணம் நிச்சயிக்கப்பட் டிருப்பதைப் பார்த்தால், பெண் ஆளைச் சொக்க வைக்கும் அற்புத அழகியாக இருக்க வேண்டும் என்று தோன்றுகிறது!" என்றான் ரகு.

"அட, போடா, முட்டாள்! ஆளை மூர்ச்சை போட்டு விழச்செய்யும் அவலக்ஷணம் நிறைந்த பெண்ணை நிச்சயிக்கும் போதுதான் பெற்றவர்கள், பையனின் சம்மதத்தைக் கேட்கவேண்டும் என்று நினைப்பதில்லை. கல்யாணத்தன்று பார்த்துத் திடுக் கிட்டுப் பையன் சற்று முரண்டினாலும் பின்னால் சரிப்பட்டு விடுவான் என்ற நம்பிக்கையும் அவர் களுக்கு உண்டு. பெண்ணின் அழகு ஒன்றை மட்டும் பார்த்தால் முடியுமாடா! மற்ற எல்லா அம்சங்களும் பெற்றோர்களுக்கு ஒத்துவர வேண் டாமா!" என்று கேள்விகளைப் போட்ட வண்ணம் கண்ணைச் சிமிட்டினான் ராஜன்.

நண்பர்களின் கேலிச் சொற்களால் கமலநாத னின் உள்ளம் கனத்தது. பெற்றோர்மீது பெரும் ஆத்திரம் கொண்ட அவன் அவசரமாக ஊரை நோக்கிப் புறப்பட்டான்.

இன்றுவரை கமலநாதனுக்கு எது விஷயத் திலும் எவ்வித மனக்குறையும் வைத்தவரல்ல அவன் தந்தை. அப்படிப்பட்ட அருமையான தந்தைமுன் வந்து நின்றபோது மைந்தனின் ஆத் திரமெல்லாம் அடங்கி ஒடுங்கிப் போய் விட்டது.

எனவே, கமலநாதன் போகப் போகப் பார்த்துக் கொள்ளலாம் என்று மனத்தைச் சமாதானம் செய்து கொண்டான். அந்த வீட்டில் அவன் கல்யாண விஷயமாக எல்லா விஷயங்களையும் மிக மிகச் சிலாகித்துப் பேசிக்கொண்டிருந்த பெண்கள் கூடக் கமலநாதனின் உள்ளத்தைக் குடைந்து கொண்டிருந்த அந்தப் 'பெண்' விஷயம் வந்த போது மௌனம் சாதித்து விட்டனர்.

மெல்ல நாட்கள் கடந்தன. கல்யாணத்துக்கு முதல் நாள் இரவு பன்னிரண்டு மணிவரை, நீண்ட

ஜானவாச ஊர்வலத்துக்குப் பிறகு நடந்த நிச்சய தார்த்த சமயம் வரை, கமலநாதன் பெண்ணைப் பார்க்க எவ்வித சந்தர்ப்பமும் ஏற்படுத்திக் கொடுக்கவில்லை. நிச்சயதார்த்த மணையில் உட் கார்ந்தவுடன் படபடக்கும் உள்ளத்துடன் தன் பக்கத்தில் வந்து உட்கார்ந்த பெண்ணைத் திரும் பிப் பார்த்த கமலநாதன் திடுக்கிட்டான். அவன் தலை கிறு கிறுவென்று சுழன்றது. அவன் முன்னுள்ள புதுப் புடவை, வேஷ்டி, பழங்கள், புஷ்பங்கள் நிரம்பியுள்ள தட்டுக்கள் எல்லாம் ஒரேயடியாக ஆகாசத்தில் எழும்பிக் கிறு கிறு வெனச் சுழல்வதுபோல் தோன்றின. அவன் தன் இரு கைகளாலும் தலையைக் கெட்டியாகப் பிடித் துக் கொண்டான்.

நிச்சயதார்த்த மணையை விட்டு எழுந்து வந்த பின் மைந்தன் ஆத்திரத்துடன் அப்பாவுக்கு முன்னால் வந்து நின்றுகொண்டு, "அப்பா! இந்தக் கறுப்புப் பெண் எனக்கு வேண்டாம்" என்றான். அதற்கு மேலும் எவ்வளவோ சொல்ல வேண்டும் என்று அவன் உள்ளம் துடித்தது. தந்தையிட முள்ள பயத்தால் நாக்குப் புரள மறுத்தது.

மைந்தனின் ஆத்திரத்தைக் கண்டு மெல்ல நகைத்த தந்தை மிகவும் நிதானமாக, அதை எதிர் பார்த்த இருந்தவர்போல, "கறுப்பு; சிவப்பு! ரொம்பக் கண்டு விட்டாய்; போடா, போய்ப் படுத்துக்கொள்! காலை ஆறு மணிக்கே முகூர்த் தம். காலைக்கே எழுந்தாகணும். போ, போ!" என்று சொல்லிவிட்டுத் துண்டை உதறியபடி அலட்சியமாக எழுந்தார்.

கமலநாதனின் படபடப்பு எல்லைமீறி விட்டது. அவன் ஒரு சில நிமிஷங்களில் தன் மனத்திலுள்ள எல்லாவற்றையுமே பேசித் தீர்த்து விட்டான். நின்று மிக நிதானமாக எல்லாவற்றையும் கேட் டுக்கொண்ட தந்தை மைந் தனை உற்றுப் பார்த்தபடி மிகக் கண்டிப்பான குரலில் சொன்னார்: "இதோ பார்! கண் முன்னுக்குக் கண்ணுமூச்சி காட்டும் பலவர்ணப் பட்டுப் பூச்சிகளைக் கண்டு மயங்கி ஏமாறும் சிறுபிள்ளை நீ. உனக்கு நன்மை எது தீமை எது என்று இப்போது தெரியாது. இந்தப் பெண் உனக்குக் கிடைக்கக் கூடியவளே அல்ல! என் இஷ்டப்படி நடப்பதானால் நீ இவளைத் தான் மணக்க வேண்டும். இல்லை என்றால் இப் பொழுதே என் முன் நிற்காமல் போய்விடு. அப் புறம் உனக்கும் எனக்கும் ஸ்நானப் பிராப்தி கூடக் கிடையாது. இது தீர்மானம்" என்று சொல்லிப் போய் விட்டார்.



தந்தைக்கும், மைந்தனுக்கும் இடையே நடந்த இந்தக் காரமான சம்பாஷணை மெல்ல மெல்லப் பெண் வீட்டை அடைந்து நின்று நிதானமாகப் பலவித உருவங்களில் உலவிவிட்டு, அங்கிருந்து அப்பாவுக்கும் பெண்ணுக்கும் நடந்த அதிசய மானதொரு சம்பாஷணையையும் அதி விரைவாகத் தூக்கிக் கொண்டு மீண்டும் பிள்ளை வீட்டை யடைந்தது.

"அடியம்மா! அந்தப் பெண்ணுக்குத்தான் என்ன தைரியம்! அப்பா கேட்டதற்கு, 'என் அன்பினால் அவரைக் கவர்ந்துவிடும் சக்தி எனக்கு உண்டு. நீங்கள் கவலையின்றிக் காரியத்தை நடத் துங்கள்' என்று சொன்னாளாமே!" என்று மாளாத வியப்போடு மங்களம் மாமி சொன் னதைக் கேட்டபோது, 'நம் விருப்பம் தெரிந்து ஒருவேளை பெண் வீட்டாரே கலியாணத்தை நிறுத்திவிடலாம்' என்ற கமலநாதனின் எள்ளத் தனை நம்பிக்கையும் முறிந்து போய் அவனுக்குப் பெரும் ஏமாற்றமே மிஞ்சியது. அத்துடன் அந்தப் பெண்ணின் அசட்டுத் துணிவைக் கண்டு அவனுக்கு அளவில்லாத ஆத்திரமும் கோபமும் வந்தன. ஒரு வழியும் புரியாமல் திண்டாடிய அவனுக்கு அப்போது ஒரு வழி பளிச்சென்று புலனாயிற்று. 'தன்னை வெறுக்கும் ஒருவனை மணக்கத் துணிந்துள்ள அந்தப் பெண்ணின் வாழ்வையே பாழ்பண்ணி அவளுக்குப் புத்தி கற்பிப்பது. அதே சமயம் அப்பாவின் விருப்பத் தையும் மீறாத பிள்ளையாகித் தன் தியாக வாழ் வினால் அவர் தம் தவறையும் உணர்ந்து வருந்தும் படி செய்வது' என்று தீர்மானித்தான். அப்புறம் தான் அவனுக்கு நிம்மதியாகத் தூக்கம் வந்தது.

மங்கள வாத்தியங்கள் முழங்க, பெண்கள் மங்கள கீதங்கள் பாட, மங்களகரமான அந்தச் சுபவேளையில் மாங்கல்யத்துடன் பிரகாசித்த அந்த மஞ்சள் கயிற்றை மணப்பெண் மைதிலியின் கழுத்தில் சூட்டி, கமலநாதன், அவளது கரத்தைப் பற்றிக் கரகரவென்று இழுத்துக் கொண்டு வந்து தகப்பனார் பாதங்களில் சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்காரம் செய்து எழுந்தான்.

* * *

கல்லூரிக்குள் நுழைந்தபின் அங்குள்ள உற் சாகமான சூழ்நிலையில் தன் துன்பத்தை மறக்க முயன்றான் கமலநாதன். ஆயினும் அவனது நண்பர்களாகிய ரகுவும், ராஜனும் அந்த வருஷத் துடன் பூர்த்தியாகும் தங்கள் படிப்பையும் முடித்துக் கொண்டு, வைத்தியக் கல்லூரியிலேயே படித்து வந்த அழகிகளான சரளா, கமலாவைத் தங்கள் மனைவிகளாக்கிக் கொள்ளப் பெற்றோர் களின் சம்மதத்தையும் பெற்றுக் கொண்டு உற்சாகமாகக் களிப்பதைக் கண்டபோதுதான் கமலநாதனின் துக்கம் கரையை உடைத்துக் கொண்டு குமுறிக் கொந்தளித்தது.

வைத்தியக் கல்லூரிப் படிப்பை முடித்துக் கொண்டு பட்டத்துடன் பிள்ளை வெளி வருவ

தற்கு முன்பே, அவன் தொழில் வசதிகளுக்கான சகல ஏற்பாடுகளையும் பூர்த்தி செய்து தயாராக வைத்திருந்தார் தந்தை. திருச்சி டவுனில் வாசத்திற்கான அழகான சிறு பங்களாவும், பலவித வசதிகளை முன்னிட்டு டவுனுக்கு வெளியில் இரண்டு மைல் தூரத்திலுள்ள கிராமத்தில், 'டிஸ்பென்ஸரி'க்கான கட்டிடம் ஆகியவைகளையும் அமைத்தார். 'டிஸ்பென்ஸரி' கட்டிடம் கொஞ்சம் பழமையானதாக இருந்தாலும் மற்ற வசதிகள் நிரம்பியதாயிருந்தது.

தந்தையின் தனித்தனியான ஏற்பாடுகளையெல்லாம் கண்டு பூரித்த கமலநாதன், 'அப்பாவுக்குத் தான் என்ன தீர்க்கமான முன் யோசனை! என் தொழிலின் ஆரம்பத்திற்கு அனுசரணையான ஏற்பாடுகளை எல்லாம் எவ்வளவு சிறந்த முறையில் செய்து வைத்திருக்கிறார்! ஆனாலும் என்ன! அவர் என் வாழ்வின் உற்சாகமென்னும் ஒளித் தீபத்தை மட்டும் அடியோடு அணைத்து விட்டாரே!' என்று எண்ணிப் பெருமூச்சு விட்டான். அதே நேரத்தில் அவன் தகப்பனார், "உம்; இந்தப் பிள்ளை விஷயத்தில் என் கடமையைச் செய்து முடித்து அவன் வாழ்க்கையின் ஜீவநாடியான தாம்பத்ய தீபத்தையும் நல்ல முறையில் பொருத்தி வைத்து விட்டேன்; இனி அவன் பாக்கியம்; அவன் அதிர்ஷ்டம்" என்று எண்ணி நிம்மதியாகப் பெருமூச்சு விட்டார்.


தகப்பனாரை வண்டி ஏற்றி அனுப்பி விட்டு, ஆயாசத்துடன் வந்து படுத்த கமலநாதன், கண்களைத் திறக்க மனமின்றியே வெகுநேரம் வரை படுத்திருந்தான். அப்போது, "டிபன் சாப்பிடுகிறீர்களா?" என்று தயங்கியபடி மிகவும் மெதுவாக வந்த மெல்லிய குரலைக் கேட்டு வெறுப்புடன் வெடுக்கென்று எழுந்து உட்கார்ந்து கமலநாதன் ஆத்திரத்துடன், "இதோ பார்! உன் துணிச்சலைக் கண்டு நான் அசந்து விடமாட்டேன். அன்று நான் உன்னை வெறுக்கிறேன் என்று தெரிந்தும் இந்த விவாகத்திலிருந்து விலகிக் கொள்ளும் விவேகமான காரியத்தைச் செய்யாமல், உன் தகப்பனாரிடத்தில், என்னை மணந்து மயக்கி விடுவதாகச் சபதம் வேறு செய்தாயாம். அன்று நீ அப்படிச் சொல்லாமல் விவாகத்தைத் தடுத்திருந்தால் இன்று என் வாழ்வு இவ்வளவு சூன்யமாகி இருக்காது. வீண் வார்த்தைகள் எதற்கு? நீ எவ்வளவுக்கெவ்வளவு என்முன் வராமலும், என்னைத் தொந்தரவு செய்யாமலும் இருக்கிறாயோ, அவ்வளவுக்கவ்வளவு என் மனத்தைச் சாந்தமாக்கிக் கொள்ள முடியும். அத்துடன் உலகத்தின் முன்னால் ஒப்புக்காவது குடித்தனம் நடத்த முடியும். இதை நீ மறந்து என்முன் வந்தாயானால், உன் அசட்டுத் துணிவால் எதையாவது செய்ய முற்பட்டாயானால், என் உள்ளக் குமுறலில் நான் என்ன செய்வேன் என்று எனக்கே தெரியாது" என்றான்.

இதையடுத்து அப் பெண்ணிடமிருந்து பெரும் விம்மலையும், விதவிதமான உணர்ச்சிகளையும் எதிர்பார்த்த கமலநாதனை, முற்றிலும் ஏமாற்றமடைந்து திடுக்கிட்டு நிமிர்ந்து பார்க்கும்படி செய்தது அப்பெண்ணின் அமைதியான பேச்சு: "சகல சௌகரியங்களும், வலிவும் பெற்ற ஆண் பிள்ளையான தங்களாலேயே விவாகத்தைத் தடுத்து நிறுத்த முடியாதபோது, என்னால் மட்டும் அது எப்படி முடியும்? 'பலவிதக் கஷ்டங்களுக்குப் பிறகு குதிர்ந்த இந்த வரனும் தட்டி விடுமோ!' என்று பயந்து பதறிய என் தந்தைக்கு ஆறுதலாக ஏதோ சொன்னேன். அதைச் சிலர் பலவிதமாகத் திரித்துக் கூறினால் அது என் தவறல்ல. கடந்த இரண்டு வருஷங்களில் தங்கள் பராமுகத்தால் எழுந்த ஊராரின் அவச்சொல்லில் அடிபட்டுத் தவித்தவள் நான். இந்த இரண்டு வருஷ அனுபவத்தில் தங்கள் மன வெறுப்பை நன்கு அறிந்து கொண்டுள்ள நான் தங்கள் மனத்தில் இடம் பிடிக்க ஒருபோதும் முயற்சிக்க மாட்டேன். இது நிச்சயம். நான் தங்களிடம் 'வேண்டுவது இதுதான்: உலகத்தின் அவச் சொல்லிலிருந்து' தப்பவாவது தங்கள் வீட்டில் எனக்கும் ஒரு சிறு இடம் ஒதுக்கி வையுங்கள். இனி நான் தவறியும் தங்கள் கண் முன் எதிர்ப்பட மாட்டேன். மறந்தும் தங்கள் வெறுப்பை அதிகப்படுத்த மாட்டேன்" என்று சொல்லி விட்டுக் கண்களின் ஓரத்தில் ததும்பி நின்ற கண்ணீரையும் சுண்டி எறிந்து விட்டு வேகமாக அறையை விட்டுப் போய் விட்டாள்.

டாக்டர் கமலநாதன் அசந்து விட்டான். 'படித்துப் பட்டங்கள் பல பெற்றுள்ள நாம் எவ்வளவு ஆத்திரமாகவும் அசந்தர்ப்பமாகவும் பேசிவிட்டோம்! அந்தப் பெண் எவ்வளவு நிதானமாகவும், அழகாகவும் உள்ள நிலைமையைத் தனக்கு உணர்த்தி விட்டாள்!' இதை நினைந்த போது கமலநாதனின் மனம் வெட்கியது.

நாட்கள் மெல்ல நகர்ந்தன. கமலநாதன் எதிர்பார்த்ததற்கு முற்றிலும் மாறாக அவனது வாழ்க்கை மிக அமைதியாகவே ஓடிக் கொண்டிருந்தது. கமலநாதனிடம் கூறியபடியே மைதிலி மறந்தும் அவன் முன் வந்தவளல்ல. ஆயினும் கமலநாதனுக்குத் தேவையான ஒவ்வொரு விஷயமும் ஊக்கமாகக் கவனிக்கப்பட்டுச் செய்யப்படுவதைக் கண்டு அவன் திகைத்தான். செய்யப்படும் செயல்களின் மூலம்தான் அந்த வீட்டிலும் ஒரு பெண்மணி இருக்கிறாள் என்பதைக் கமலநாதன் உணர முடிந்தது. மற்றப்படி அவளை அவன் பார்த்துப் பல நாட்கள் ஆகிவிட்டன.

அன்று மிக அதிசயமாகத் தன் அறையுள் அம்மெல்லிய காலடியோசை கேட்கவே வியப்புடன் நிமிர்ந்தான் கமலநாதன். மைதிலிதான்



கையில் ஒரு நோட்டுடன் வந்து நின்றாள். அவன் கேட்குமுன் அவளாகவே, "மன்னியுங்கள்; ஒரு முக்கியமான விஷயம். இல்லா விட்டால் இங்கு தங்கள் எதிரில் வந்திருக்க மாட்டேன்..." என்று சொல்லிச் சற்றுத் தயங்கினாள். பிறகு, தலைகுனிந்த வண்ணம், "எனக்குப் பொழுது போவது கஷ்டமாக இருக்கிறது. மேலும் தங்களுக்குப் பாரமாக இப்படியே எத்தனை நாட்கள் இருப்பது! என்னைக் கல்லூரியில் சேர்த்து விட்டால் மெள்ள எல். டி. பாஸ் செய்து உபாத்திமைத் தொழிலை மேற்கொள்வேன். அப்பாவுக்கும் எழுதுகிறேன். அவரால் முழு ஒத்தாசையும் செய்ய முடியாது. தங்களுக்கு ஆக்ஷேபணை யில்லாவிட்டால் — சிரமம் இல்லாவிட்டால் எனக்கு இந்த ஒத்தாசையைச் செய்தால் இதை நான் என் ஆயுள் உள்ள அளவும் மறக்க மாட்டேன். கல்லூரியில் சேருவதற்கு வேண்டிய அளவு மார்க்குகள் எனக்கு இருக்கின்றன" என்றாள். பிறகு தன் கையிலுள்ள எஸ். எஸ். எல். ஸி. சர்டிபிகேட் புஸ்தகத்தை மெல்ல மேஜைமீது வைத்தாள்.

திகைப்படைந்த கமலநாதன் மெல்லத் தன்னைச் சுதாரித்துக் கொண்டு, "ஆகட்டும்; நானே கல்லூரியில் சேர்ப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்கிறேன். இந்தச் சின்ன விஷயத்திற்காக நீ உன் அப்பாவுக்கு எழுத வேண்டிய அவசியமே யில்லை" என்று பதில் அளித்தான்.

தன் அகன்ற பெரிய விழிகளின் மூலம் நன்றியைத் தெரிவித்துக் கொண்ட மைதிலி, அதன் பிறகு அரைக் கணமும் தாமதியாமல் அறையை விட்டு வெளியே வந்து விட்டாள்.

கமலநாதனின் உடல் குப்பென்று வியர்த்தது. 'சே! சே! இவ்வளவு அறிவும், படிப்பும் உள்ள ஒரு பெண்ணிடத்திலா, "என் கண்முன் வராதே!" என்ற மிகக் கடுமையான சொல்லை உபயோகித்தேன்! எவ்வளவு முட்டாள்தனம்! நிறம் கறுப்பு என்பதற்காக அலட்சியப் படுத்துவதா!'

கல்லூரி திறந்தவுடன் முதல் காரியமாகக் கமலநாதன் அவளைக் கல்லூரியில் சேர்த்துவிட்டுச் சகல வசதிகளையும் செய்து கொடுத்தான். தன் காரை அனுப்பி அவளைக் கொண்டு விடவும், அழைத்து வரவும் ஏற்பாடு செய்தான்.

நாட்கள் சென்றன. கமலநாதனின் புகழும், வருமானமும் நாழிகைக்கு நாழிகை ஏறிக் கொண்டே யிருந்தன. ஆயினும் அவன் மனத்தில் மட்டும் எவ்வித உற்சாகமும் ஏறவில்லை. சில சமயங்களில் அதிக அலுப்பும், சலிப்பும்தான் உண்டாயின. அப்பொழுதெல்லாம் அவன் மைதிலியைப் பற்றித்தான் நினைப்பான். மைதிலியை அவன் மனம் இப்போது வெறுக்கவில்லை. ஆயினும் அவன் மனம் அவளை அன்போடு ஏற்கவும் இல்லை. மனம் சலிப்படையாமல் இருக்க, ஒரே வீட்டில் இருக்கும் அவளுடன் உற்சாகமாகப் பல விஷயங்களைப் பற்றிப் பேசி மகிழ அவன் விரும்பினான். அத்துடன் மைதிலியின் அறிவும், அடக்கமும் அவன் மனத்தைக் கவர்ந்தன. அவளைச் சிநேகித உறவில் கொண்டாடப் பெரிதும் அவன் மனம் விழைந்தது. ஆனால் மைதிலி... கல்லூரியில் சேர்ந்த பிறகு அவள் குரலைக் கேட்பதுகூட அபூர்வமாகி விட்டது. அவள் நிமிஷத்திற்கு நிமிஷம் தன்னை மிக எளிமையாக்கிக் கொண்டாள். எளிய ஆடை, எளிய உணவு; அத்துடன் வீட்டு அலுவல்களையும் விடாமல் செய்து வந்த அவள் அலுவல் நேரம் தவிர மற்ற நேரமெல்லாம் தன் அறையுள் மறைந்து புஸ்தகத்துள் மூழ்கி விடுவாள்.

இதனாலெல்லாம் அதிக அலுப்பும், சலிப்பும் அடைந்த கமலநாதன் கொஞ்ச நாளாவது மாறுதலை விரும்பினான். ஆகவே, அவன் தன் பழைய நண்பர்களைக் கண்டு அளவளாவி விட்டுவரப் பெரிதும் ஆவல் கொண்டான். சில தினங்களில் அவன் தன் 'டிஸ்பென்ஸரி'யைக் கவனித்துக் கொள்ளக் கம்பவுண்டர் மூலம் ஏற்பாடு செய்து விட்டுப் புறப்பட்டான்.

கமலநாதனுடைய நண்பர்களான ரகு பூனாவிலும், ராஜன் பம்பாயிலும் வசித்து வந்தார்கள். அவர்கள் தாம்பத்ய வாழ்க்கை ஆரம்பித்த புதிதில் கமலநாதனுக்கு எழுதும் கடிதங்களில் உற்சாகம் எல்லைமீறி ஒலிக்கும். அவர்களது கடிதங்களைப் படிக்கப் படிக்கக் கமலநாதனின் உள்ளம் பொறாமையால் வாடும். அழகு ராணியான சரளாவைக் கைப்பிடித்துள்ள ரகுவின் அதிர்ஷ்டத்தை எண்ணிக் குமுறுவான். நிர்மலாவின் நீலக் கயல் விழிகளின் ஆனந்தத்தைப் பருகியபடி, அவள் அழகிய கரங்களைப் பற்றும் பாக்கியம் பெற்ற ராஜனை எண்ணிக் குமுறுவான். இன்று அவர்கள் ஆனந்த வாழ்க்கையைக் கண்ணாலாவது பார்த்து மகிழ்வோம் என்றுதான் புறப்பட்டான். ஆயினும் அவர்கள் வருந்தி வருந்தி அவனை அழைத்த போதெல்லாம் போகாமல் இப்போது போவது அவன் மனத்திற்கு அவ்வளவு உற்சாகத்தைக் கொடுக்கவில்லை. இருந்தும் அவனது மன ஏக்கத்துக்கு அங்கு ஏதாவது மருந்து கிடைக்காதா! இந்த ஆவலில்தான் புறப்பட்டான்.

ஸ்டேஷனில் நின்று தன்னை வரவேற்ற நண்பன் ராஜனின் உருவத்தைக் கண்ட கமலநாதன் திடுக்கிட்டான். நம்பிக்கையும் உற்சாகமும் கொண்ட ராஜனின் கண்களில் ஏன் இவ்வளவு ஏமாற்றம்! அவனது அழகிய முகத்தில் ஏன் இவ்வளவு கருக்கம்!—இத்தகைய எண்ணங்களால் திகைத்து நின்ற கமலநாதனைக் கண்டு புன்னகை புரிந்த ராஜன், "நண்பா, வீட்டுக்கு வந்து எல்லாவற்றையும் தெரிந்து கொண்டபின் நீ இவ்வளவு திகைப்படைய மாட்டாய்!" என்றான்.

வீட்டு வாயிலுக்கு வந்து இருவரையும் வரவேற்ற ராஜனின் தாயார், மெள்ளத் தட்டுத் தடுமாறிக் கொண்டே உள்ளே சென்று, இருவருக்கும் காப்பி பலகாரம் கொண்டு வந்து கொடுத்தாள். பிறகு ஒரு பாத்திரத்தில் கஞ்சி கொண்டு வந்து ராஜன் முன் வைத்த அந்தத் தள்ளாத கிழவி, "அப்பா, ராஜா, முதலில் மாடிக்குப் போய் குழந்தையைக் கவனி; என்னால் அடிக்கடி ஏற முடியவில்லை. குழந்தைக்கு ஜுரம் இன்னும் இறங்கவில்லை. அதனால் எனக்கு ஒரு வேலையும் ஓடமாட்டேன் என்கிறது. உன் பெண்டாட்டியானால் 'உடனே பத்துப் பேருக்குச் சாப்பாடு தயாராக இருக்கட்டும்' என்று சொல்லியனுப்பியிருக்கிறாள். நான் போய்ச் சமையற்காரனைத் துரிதப் படுத்துகிறேன்" என்று அங்கலாய்த்துக் கொண்டே உள்ளே சென்றாள்.

திகைத்து நின்ற கமலநாதனைக் கூட்டிக் கொண்டு மாடிக்கு வந்த ராஜன், ஜுரவேகத்துடன் கட்டிலில் புரண்டு கொண்டிருந்த குழந்தை முருகனைத் தூக்கி மார்பில் சாய்த்துக் கொண்டு அவனுக்குக் கஞ்சி புகட்டினான்; அதன்பின் அவனை ஆசுவாசப் படுத்திப் படுக்க வைத்தான். பிறகு தான் நண்பர் இருவரும் வெளி வராந்தாவில் வந்து உட்கார்ந்து பேச ஆரம்பித்தார்கள்.

கமலநாதன் மெதுவாகத் தன் நண்பனிடமிருந்து பின்வரும் விஷயங்களைத் தெரிந்து கொண்டான்.



பம்பாய் வாடலா காலனியில் வசிக்கும் மத்திய சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் சங்கத்தின் ஆண்டு விழா சென்ற அக்டோபர் 20ல் நாட்டியம், சங்கீதம், நாடகம் முதலியவைகள் கொண்ட ஒரு கதம்ப நிகழ்ச்சியுடன் இனிது நடந்தது. விழாவுக்கு பம்பாய் முனிசிபல் கமிஷனர் ஸ்ரீ பி. ஆர். நாயக் ஐ. ஸி. எஸ். அவர்கள் ஸ்ரீமதி நாயக்குடன் வந்து தலைமை வகித்து விழாவைச் சிறப்பித்தார்.

நிர்மலாவை மணந்த புதிதில் ராஜன் தனக்கு நிகர் யாருமில்லை என்று எண்ணி மகிழ்ந்தான். அந்த மகிழ்ச்சி ஒரு குழந்தை பிறக்கும் வரை தான் நீடித்தது. நிர்மலா தன் அழகு ஒன்றைத்தான் பிரதானமாகக் கருதினாள். அவள் கவலையெல்லாம் தன் தேகக் கட்டும், அழகும் துளிக்கூடக் குறையாமல் இருக்க வேண்டும் என்பதில் தான் இருந்தது. அதனால் அவள் தான் பெற்ற குழந்தைகளையே பராமுகம் செய்து வெறுத்தாள். சதா காலமும் தன் அழகைப் போற்றுவது ஒன்றுதான் அவள் குறிக்கோள். கணவன், குழந்தைகள், குடும்பம் என்பதையே அவள் முற்றிலும் வெறுத்தாள். இது விஷயமாகத் தம்பதிகளுக்குள் பலமுறை சச்சரவு எழுந்தது. ஆயினும் மானஸ்தனான ராஜன் அதை அதிகம் வளர விட்டால் கோர்ட்டு ஏறும் படியான நிலைமை நேரலாம் என்ற பயத்தால் தன் மனத் துன்பத்தை மனத்திற்குள்ளாகவே சமாதி செய்து கொண்டான்.-இந்தக் கதையைக் கேட்ட போது கமலநாதனின் உள்ளம் கசிந்தது. எவனது வாழ்க்கையில் ஈடு இல்லாத இன்பம் நிலவும் என்று கமலநாதன் இன்றுவரை எண்ணியிருந்தானோ, அவனது வாழ்க்கைத் துன்பத்தைக் கேட்டபோது அதைத் தடைக்கும் வகையறியாது துடித்தான்.

நண்பர் இருவரும் பேசிக் கொண்டிருக்கும் பொழுதே கீழே பெரும் ஆரவாரமும், சிரிப்பும், களிப்பும் எதிரொலித்தன. கமலநாதன் தன் ஆருயிர் நண்பனின் அழகிய மனைவியின் அட்டகாசத்தை அன்று இரவே நேரிலும் கண்டு அனுபவித்தான். ஜுரத்துடன் போராடும் குழந்தையைப் பார்க்கக்கூட அவள் வரவில்லை. இதையெல்லாம் கண்ட கமலநாதன் தன் கண்களையே நம்ப முடியாமல் திகைத்தான். அவன் வைத்தியக் கல்லூரியில் நிர்மலாவைச் சந்தித்த பொழுது அவள் அழகைத் தான் வியந்தான். அவள் குணத்தைப் பற்றி அவன் இன்றுவரை எண்ணிப் பார்த்ததேயில்லை. அது எவ்வளவு மூட்டாள்தனம் என்பதை இன்று தான் நேரில் கண்டான்.

நண்பனின் துன்பத்தைக் கண்டு தவித்த கமலநாதனால் அங்கு அதிகநாள் தங்க முடியவில்லை. எனவே நண்பன் ரகுவைப் பார்க்கப் புறப்பட்டான். புறப்படும்பொழுது வறட்சியாகச் சிரித்த ராஜன், "ரகுவின் வாழ்க்கை மட்டும் என்ன! இதைவிடத் துன்பமானதுதான்" என்றான்.

கமலநாதனை அன்போடு வரவேற்ற ரகு அவனை இறுகத் தழுவிக் கொண்டான். வெறிச்சோடிக் கிடந்த ரகுவின் வீட்டைக் கண்டபோது கமலநாதனுக்கு நெஞ்சை என்னவோ செய்தது. ரகுவின் இரு பெண் குழந்தைகளைத் தவிர வீட்டில் வேறு யாருமேயில்லை. அழகுத் தெய்வமான ரகுவின் மனைவி சரளா எங்கே மறைந்து விட்டாள்! கமலநாதனின் உள்ளத்தில் எழுந்த இக் கேள்வியை அவன் வெளிப்படையாகக் கேட்க எண்ணிய பொழுது ரகு பேச்சையே மாற்றி விட்டான். அதையும் மீறிக் கமலநாதன் கேட்ட பொழுது ரகுவின் கண்களில் நீர் முட்டியது.

கமலநாதனுக்கு ஒரே குழப்பமாகப் போய் விட்டது. அவன் தன் நண்பனின் உள்ளத்தைப் புண்படுத்தவும் விரும்பவில்லை. ஆனால் அதே சமயம் அவன் தன் உள்ளத்தில் சரளாவைப் பற்றி எழும் கேள்விகளுக்கு விடை காண முடியாத துன்பத்தைத் தாளவும் முடியாதவனாய்த் தவித்தான். இந்தத் தொல்லையால் அவன் அதிக நாள் அங்குத் தங்க முடியாமல் கிளம்பி விட்டான்.

புனா ஸ்டேஷனை அடைந்த கமலநாதன் வண்டி கிளம்ப நேரம் இருந்ததால் மெல்ல யோசித்த வண்ணம் பிளாட்பாரத்தில் உலாவத் தொடங்கினான். நண்பன் ரகுவின் வாழ்க்கையில் புதைந்துள்ள மர்மத்தைப் பற்றிய எண்ணமே அப்பொழுதும் அவனுள் ஓடிக் கொண்டிருந்தது.

"சரளாவும் அவ்வளவு கொடியவளாயிருப்பாளா!" என்று எண்ணும்போது அவளது அழகு அவனுக்கு விஷமாகப் பட்டது. எந்த இரு பெண்களின் அழகைப் போற்றிப் போற்றி இன்றுவரை இன்பம் கண்டானோ, அந்த இரு பெண்களின் அழகை நினைக்கவே இன்று அவனுக்கு வேம்பாகக் கசந்தது. எந்த இரு பெண் அழகிகளில் ஒருத்தியை அடைய முடியாததால் தன் வாழ்வு சூன்யமாகி விட்டது என்று இதுவரை எண்ணி எண்ணி ஏங்கினானோ, அதே இரு பெண்களிடமிருந்து தப்பிப் பிழைத்த தன் வாழ்வை எண்ணி இன்று பெருமூச்சு விட்டான். இவ் வெண்ணங்களால் அலைப்புண்ட கமலநாதனுக்குத் தன் வாழ்க்கையில் ஏதோ ஒரு இன்பம் மறைந்து கிடப்பதாகத் தோன்றியது. அதுவும் தனது அறிவீனத்தினால்

அவ்விம்பம் மறைந்து கிடக்கிறது என்பதை நினைத்தபொழுது அவன் மனக்கண் முன்னால் மைதிலியின் அடக்கமான, தூய்மையான உருவம் ஓடி வந்து நின்றது.

“பேப்பர்! பேப்பர்!” என்ற பையனின் குரல் கேட்டுச் சிந்தனை கலைந்து திரும்பிய கமலாநாதன், தினசரிப் பேப்பரை வாங்கிப் புரட்டினான். புரட்டியவன், “திருச்சி, தஞ்சை முதலிய ஜில்லாக்களில் பெரும் புயல், மழை!” என்ற தலைப்பைக் கண்டு திடுக்கிட்டான். மேலும் படித்து அந்த ஜில்லாக்களில் சேர்ந்துள்ள பெரும் சேதத்தை அறிந்த போது அவனுக்குத் தனது சப்த நாடியும் ஒடுங்கி நின்று விட்டது போல் இருந்தது.

மிகவும் பழமையாக இருந்த அவனது ‘டிஸ்பென்ஸரி’ கட்டிடத்தைப் புதுப்பிக்க வேண்டும் என்றுதான் இருந்தான். அதற்கு வேண்டிய அவகாசம் அவனுக்குக் கிடைக்கவில்லை. இந்தப் புயல், மழையில் நிச்சயமாக அக்கட்டிடம் தரைமட்டமாகி யிருக்கும். அக்கட்டிடத்துள் அவன் தருவித்து வைத்திருந்த பணம் பெற்ற ஏராளமான மருந்துகளின் கதி! கமலாநாதனின் உள்ளம் நடுங்கியது. அவனது ஆஸ்தி முழுவதுமே அந்த மருந்துச் சாலைக்குள்தான் அடங்கியிருந்தது. அதன் கதி என்னவாயிற்றோ! புயலில் கட்டிடம் இடிந்து விழுந்திருப்பது நிச்சயம். ஒரு வேளை அவன் அங்கிருந்திருந்தால் ஏதாவது செய்து பெரும் நஷ்டத்தைத் தடுத்திருக்கலாம். சென்று போனதை நினைப்பதில் என்ன லாபம்! இவ்வெண்ணங்களையெல்லாம் எண்ணிப் பார்த்த கமலாநாதன் உள்ளம் ஓய்ந்து, உடல் சோர்ந்து அப்படியே உட்கார்ந்து விட்டான்.

சென்னையை அடைந்ததும் தான் வருவதாகத் தந்தி கொடுத்து விட்டு மறு ரயிலிலேயே திருச்சிக்குப் புறப்பட்டான்.

ஸ்டேஷனில் நின்று தன்னை வரவேற்ற கம்பவுண்டரின் முகமலர்ச்சியைக் கண்டு வியப்படைந்த கமலாநாதன், டிஸ்பென்ஸரியின் நிலையைப் பற்றிய கேள்வியைத்தான் முதலில் கேட்டான்.

“எஜமானியம்மாளின் புத்தி சாதுர்யத்தினால் டிஸ்பென்ஸரி மருந்துகள் யாவும் காப்பாற்றப்பட்டு விட்டன!” என்ற கம்பவுண்டரின் பதில் கமலாநாதனின் வியப்பைப் பன்மடங்காக்கியது.

இருவரும் காரில் வந்து உட்கார்ந்த பின் கம்பவுண்டர் விஷயத்தை விவரமாகச் சொன்னான்:

“காலை ரேடியோச் செய்தியில் புயல், மழை பற்றிய விவரம் அறிந்தவுடனேயே எஜமானியம்மாள் பரபரப்படைந்தார்கள். அவர்கள் கவலை யெல்லாம், ‘டிஸ்பென்ஸரி’ கட்டிடம் பழமையானதாயிற்றே என்பதில்தான். ஒரு நொடியில் யோசித்து முடிவுக்கு வந்ததும் பரபரப்புடன் இரண்டு லாரிகளைப் பேசி வரச் செய்து, தானே முன்னின்று மருந்துகளையெல்லாம் அலுங்காமல் குலுங்காமல் ஏற்றிப் பங்களாவுக்குக் கொண்டு வந்து விட்டார்கள்.”

இதைக் கேட்டு ஆச்சர்யத்தால் ‘ஆ’ வென்று வாயைத் திறந்த கமலாநாதன் சிறிது நேரம்வரை கண்ணிமைக்கக்கூட மறந்து உட்கார்ந்து விட்டான். அவனது உள்ளத்தில் பொங்கிய ஆனந்தத்துக்கிடையே ஒரு சிறு எண்ணமும் எழுந்தது. ‘அவன் போகும் போது வீட்டுச் செலவுக்கு வேண்டிய பணம் மட்டுமே சமையற்காரரிடம் கொடுத்துச் சென்றிருந்தான். அப்படியிருக்க இந்த ஏற்பாடுகளுக்கெல்லாம் அவள் பணத்துக்கு என்ன செய்தாள்?” இது விஷயம் பற்றிக் கம்பவுண்டரிடம் கேட்டபோது அவன் தயங்கினான். “எஜமானியம்மாள் இது பற்றித் தங்களிடம் பிரஸ்தாபிக்க வேண்டாம் என்று சொன்னார்கள்” என்று இழுத்தான்.

கமலாநாதனின் உள்ளத்தில் ஒரு சிறு முள் குத்தியது போன்ற வேதனையும், கோபமும் எழுந்தன. எஜமானரின் கோபத்தைக் கண்டு பயந்து விட்ட கம்பவுண்டர், “அம்மாள் அவர்களுடைய கழுத்துச் செயினைப் பாங்கியில் வைத்துப் பணம் வாங்கி வரச் சொன்னார்கள்” என்றான்.

க்ஷண நேரத்தில் விபரீதமாக எண்ணி வெகுண்ட கமலாநாதனுக்கு அவன் சற்றும் எதிர்பாராத அந்தப் பதிலைக் கேட்டவுடன் கண்களில் கண்ணீர் பொங்கி வந்து விட்டது.

காரை விட்டு இறங்கிப் பங்களாவுக்குள் நுழைந்தான் கமலாநாதன். அவன் கண்கள் ஆவலுடன் மைதிலியைத் தேடின. அவள்தான் அவன் முன் வருவதில்லையே! இதை எண்ணிப் பெருமூச்சு விட்ட கமலாநாதன், தன் அறையுள் சென்று பிரயாண உடையைக் களைந்தான். அப்போது அதிசயத்திலும் அதிசயமாக அம்மெல்லிய காலடி யோசை கேட்டது. உள்ளே வந்த மைதிலி தன் கையிலுள்ள காப்பி, டிபனை மேஜைமேல் வைத்தபடி “சமையல்காரருக்கு உடம்பு சுகமில்லை. அதனால்......” என்று முடிக்காமலே வேகமாக வெளியே போய் விட்டாள்.

“...அதனால்தான் தங்கள் முன் வர நேர்ந்தது” என்று அவள் சொல்லாமல் விட்ட வார்த்தைகள் கமலாநாதன் உள்ளத்தில் எதிரொலித்தன. அவனுக்கு அப்படியே கதறியழ வேண்டும் போல் தோன்றியது. ஊமை கண்ட கனவுபோல், தனது உள்ளத்தில் பொங்கும் நன்றியை ஒரு சிறிதுங்கூட நிற்காமல் செல்லும் அவளிடம் எப்படிச் சொல்லுவான்! அவன் உள்ளத்தில் என்ன அலைகள் எழுந்து குமுறின: “அவள் மாசுமறுவற்ற பசும்பொன். உள்ளத்தில் ஒருவனுக்கே இடமளித்தவள். நானோ, கனவிலும் நினைக்க அருகதையற்ற இரு பாப ஜன்மாக்களை இதுவரை உள்ளத்தில் வைத்துப் பூஜித்தவன். அன்று அவள் எனக்கு ஏற்றவள் அல்ல என்று வெறுத்துத் துன்புறுத்தினேன். இன்றோ அடக்கமும், நேர்மையும் கொண்ட அவளுக்கு நான் ஏற்றவனே அல்ல என்று ஆகிவிட்டது. அன்று அப்பா சொன்னதின் உண்மையை இன்றுதான் உணர்கிறேன்: ‘கண் முன்னால் கண்ணாமூச்சி காட்டும் பல வர்ணப் பட்டுப் பூச்சிகளைக் கண்டு மயங்கி ஏமாறும் சிறு பிள்ளை நீ; உனக்கு நன்மை எது, தீமை எது என்று இப்பொழுது தெரியாது; இந்தப் பெண் உனக்குக் கிடைக்கக் கூடியவளேயல்ல...’ அவர் சொன்னது எவ்வளவு உண்மை! மைதிலி எனக்குக் கிடைக்கக் கூடிய பெண் அல்லதான். கிடைத்தற்கரிய பொக்கிஷமான அவளை மகிழ்வித்து, மன்னிப்பைப் பெறும் மார்க்கத்தைத்தான் இனித் தேட வேண்டும்...” இவ்விதம் பலபல எண்ணிக் குமுறிய கமலாநாதன், கடைசியாகத் தன்னுள் ஒருவித முடிவுக்கு வந்தவனாய் எழுந்து சில்லிட்டிருந்த காப்பியை எடுத்துப் பருகினான்.

★

‘நீ ஒ நாம ரூபமுலகு...’ என்று மங்களம் பாடிய நாதஸ்வர கானம் சிந்தனை உலகில் மயங்கிக் கிடந்த டாக்டர் கமலாநாதனுக்கு உணர்வைக் கொடுத்ததுடன் உற்சாகத்தையும் கொடுத்தது.



"குப்பனையா போலீசார் கைது செய்திருக்கிறார்கள்? ஆச்சரியமாக இருக்கிறதே! தப்புத் தண்டா ஒன்றும் அவன் செய்ய மாட்டானே?" என்று சந்தேகத்தோடு கேட்டார் கிராம மணியக்காரர்.

"முதல்லே நானும் நம்பவில்லை. நேரிலே போய்ப் பார்த்த பிறகுதான் எனக்குச் சந்தேகம் நீங்கிச்சு" என்றான் வேலைக்காரன்.

"ஆமாம், அவன் என்ன பண்ணினானாம்?"

"அதுதான் தெரியவில்லை. போலீஸ்காரரோடு கோட்டை மாரியம்மன் திருவிழாவிலே தாறுமாறாக நடந்து கொண்டானாம்."

"இருக்கவே இருக்காது. அவனாவது தாறுமாறாக நடக்கிறதாவது?"

"எல்லோரும் அப்படித்தான் பேசிக் கொள்கிறார்கள். ஒருத்தர்கூட அவன் ரகளை பண்ணுவான்னு சொல்லக் காணோம்."

"கோட்டை மாரியம்மனுக்கு வருசா வருசம் திருவிழா நடக்குது. குப்பனும் தவறாமல் போகிறான். அவன் வித்தியாசமா நடந்ததே இல்லை. இதில் ஏதோ சூதிருக்கிறது. நான் போய்ப் பார்க்கிறேன்" என்று மணியக்காரர் எழுந்தார்.

"ஆமாம், நீங்கள் போய் அவனை விடுதலை பண்ணிக் கூட்டி வரவேணும்னு ஊரிலே எல்லோரும் சொல்லுகிறார்கள்" என்று வேலைக்காரன் கூறினான்.

மணியக்காரர் உடனே புறப்பட்டார்.

* * *

குப்பன் ஒரு குஷிப் பேர்வழி. எப்பொழுது பார்த்தாலும் ஆட்டமும் கேலியும் பாட்டுமாக இருப்பான். நாளைக்குச் சோற்றுக்கு இல்லையே என்ற கவலை அவனைத் தாக்கவே தாக்காது. இன்றைக்கு வயிறு நிறையச் சோறு கிடைத்ததை நினைத்தே அவன் மகிழ்ச்சி யடைவான்.

"நாளைக்கு உயிரோடு இருக்கிறது என்ன நிச்சயம்; அப்படி யிருக்க அதற்காக ஏன் கவலைப்பட வேணும்?" என்பது அவனுடைய சித்தாந்தம்.

மனைவி மக்கள் எல்லாம் இருக்கிறார்களே அவர்கள் நாளைக்குச் சோற்றுக்கு எங்கே போவார்கள் என்று நினைத்தாவது அவன் கவலைப்பட வேண்டுமே, அதுகூடக் கிடையாது. "என் பெண்டாட்டியைப் பற்றி எனக்கு விசனமே இல்லை; அவள் நாலு வீடுவாசல் பெருக்கியாவது பிழைச்சுக்குவாள். அந்தப் பையனையும் காப்பாற்றி ஆளாக்கி விடுவாள்" என்று சொல்வான் குப்பன்.

"ஏண்டா! அந்தப் பையன் பெரியவனாகிற போது அவன் பிழைக்கிறதுக்குக் கொஞ்சம் சொத்துச் சேர்த்து வைக்க வேண்டாமா?" என்று யாராவது கேட்பார்கள்.

"சாமி, புத்தியுள்ள பிள்ளையா யிருந்தால் எப்படியும் வயிறு வளர்த்துக்கும். என்னைப் போல புத்திக் கெட்டுப் போனா எத்தனை சொத்திருந்தாலும் என்னத்துக்கு ஆகும்? நாலு நாளையிலே எல்லாத்தையும் தீர்த்து விட்டுக் கஞ்சிக்கு லாட்டரியடிக்க வேண்டியதுதான்—புத்தியில்லாம என்ன இருந்து என்ன லாபம்?" என்று அழகாக அந்தக் கேள்விக்கு விடையளிப்பான்.

"நீ சொல்வது சரி. ஆனால் உன் புத்தி கெட்ட புத்தியின்னு சொன்னியே, அப்போ உன் புத்தி கெட்டா கிடக்குது?" என்று மேலும் கேட்பார்கள்.

"என் புத்தி காய் புத்தி சாமி. கொஞ்ச நேரம் ரொம்ப நல்லா இருக்கும். ஆனால் அடுத்த நிமிஷத்திலே ஓடிப் போய் என்னத்திலே வேண்டுமானாலும் வாயை வைக்கும்" என்று கூடார்த்தமாகப் பேசுவான்.

அவனோடு வார்த்தையாடிக் கொண்டிருப்பதே கிராம மக்களுக்கு இன்பகரமான ஒரு பொழுது போக்கு. பேச்சுக்கு ஆள் கிடைக்க வில்லையே என்று யாரும் கவலைப் பட வேண்டியதே யில்லை. குப்பன் எப்பொழுதும் தயாராக இருப்பான்.

* * *

கொங்கு நாட்டிலே ஒவ்வொரு ஊரிலும் மக்கள் ஓய்வு நேரத்திலே கூடியிருப்பதற்கு ஊருக்குப் பொதுவான ஒரு இடம் இருக்கும். வேப்ப மரம்; அரச மரத்தைச் சுற்றிச் சதுரமாக மேடை போட்டிருக்கும். 'கல்லுக் கட்டு' என்று அதற்குப் பெயர்.

வேலையில்லாத சமயங்களில் ஆடவர்கள் அங்கு கூடுவார்கள். சிலர் புலிக் கட்டம் ஆடுவார்கள். சிலர் அரட்டை யடிப்பார்கள். கயிறு திரித்தல், கன்றுக் குட்டிக்கு வாய்க்

கடை பின்னுதல் என்று இப்படிப்பட்ட சில்லறை வேலைகளைச் செய்து கொண்டே சிலர் வார்த்தையாடிக் கொண்டிருப்பார்கள்.

காட்டுப் புத்தூரிலும் அப்படி ஒரு கல்லுக் கட்டு உண்டு. யாரில்லாவிட்டாலும் குப்பனை அங்கே காணலாம். புலிக் கட்டம் ஆடுவதற்கா, அரட்டை யடிப்பதற்கா, கயிறு திரிப்பதற்கா, எதற்கும் சளைக்க மாட்டான்.

எல்லோரிடத்திலும் நயமாகவும் பணிவாகவும் நடந்து கொள்ளும் தன்மையும் அவனுக்குண்டு. மேலும் யார் என்ன வேலை சொன்னாலும் அட்டியில்லாமல் செய்வான்.

“ஏண்டா, இப்படி நாய் போலச் சும்மா தண்டத்திற்கு உழைக்கிறாயே, கூலி வேலை செய்து ரெண்டு காசு சம்பாதித்துப் பெண்டாட்டிக்குக் கொடுத்தால் என்ன? அவளே சம்பாதிக்க உனக்கு எத்தனை நாளைக்குப் போடுவாள்?” என்று சிலர் கேட்பார்கள்.

“சாமி, நாய்க்குத் தனக்கு என்று வேலை செய்யத் தெரியாது; மற்றவர்களுக்குத்தான் அது குலைக்கும்” என்று பதில் சொல்லுவான்.

ஆனால் இப்படிப் பிறருக்காக வேலை செய்வதில் அவனுக்கு ஒன்றுமே கிடைக்காமல் போகாது. வேலை செய்ததற்காக ஏதாவது இனாம் கிடைக்கும். கையில் பணம் கிடைத்து விட்டால் அவனை ஒன்றிரண்டு நாட்களுக்கு ஊரிலே காண முடியாது. எங்கேயோ போய்ச் சுற்றி விட்டு வருவான். எங்கே போகிறான், என்ன செய்கிறானென்று ஊரிலுள்ள யாருக்குமே தெரியாது. அதைப் பற்றிக் கேட்டாலும், “சாமி, இந்த நாய் அப்படியே வேட்டை மேலே போய் வந்தது—சும்மா இந்த ஊர்க் கிணத்துத் தண்ணியைக் குடிச்சு சலித்துப் போய்விட்டது” என்று பட்டும் படாமல் பதில் சொல்லித் தப்பித்துக் கொள்வான்.

அவன் எங்கே போகிறான் என்கிற விஷயம் அவன் மனைவிக்கு மட்டும் தெரியும். ஆனால் அவள் அதைப் பற்றி யாரிடமும் பேச மாட்டாள். கணவனென்றால் அவளுக்கு உயிர். அவன் சம்பாதித்துப் போடவில்லையே யென்று அவள் கவலைப் படுவதுமில்லை; அதற்காக வருந்துவதுமில்லை.

“உனக்கு இப்படிப் பட்ட புருசன் கிடைச்சானே—தண்டச் சோத்துப் புருசன். அவன் ஊருக்குத்தான் உழைப்பான்—உனக்கு உழைச்சுப் போடமாட்டான்” என்று சில கிழவிகள் சாடையாகக் கூறுவார்கள்.

“எனக்கு உழைக்கா விட்டால் போகுது—நாலு பேருக்கு நல்லவர் என்றிருந்தால் அதுவே போதும்” என்று அவள் மறுபடியும் யாரும் தன் புருஷன் பேச்செடுக்காதபடி பதில் சொல்லி விடுவாள்.

குப்பனுக்கும் அவன் மனைவி யிடத்திலே கரைகடந்த அன்புண்டு. குழந்தையின் மேல் இன்னும் அன்பு அதிகம். இந்த விஷயம் பொதுவாகவே காட்டுப் புத்தூரில் உள்ள எல்லோருக்குமே தெரியும்.

சாதாரணமாக மனைவி யென்றால் அவளை அடிக்கலாம் என்பது அந்த ஊராருடைய கொள்கை. ‘அடியாத பிள்ளை படியாது’ என்று ஒரு பழமொழி உண்டல்லவா? அதை மாற்றி அந்த ஊரார் ‘அடியாத மாடு படியாது’ என்று சொல்லுவார்கள். அடித்தால்தான் மாடு வேலை செய்து பழகுமாம். அது போலப் பெண்களையும் அடித்துப் படிய வைக்க வேண்டும் என்பார்கள்.

ஆனால் மனைவியை அடிக்கிறவனைக் கண்டால் குப்பனுக்குப் பொறுக்காது. “சரியான ஆண் பிள்ளையாக இருப்பவன் பெண்டாட்டியைக் கை தொட்டு அடிக்கலாமா?” என்று கண்டிப்பான்.

“அன்னமிட்டுக் காப்பாத்துகிற தேவியை அடிக்கிறதாவது?” என்று அவன் ஆத்திரத்தோடு சொல்வதுண்டு.

“ஆமாம், உனக்குத்தான் உன்னுடைய பெண்டாட்டி சோறு போடுகிறாள். நீ அவளைத் தெய்வமாகக் கும்பிட வேணும். என் வீட்டிலே என் பெண்டாட்டிக்கு நான் தானே சம்பாதித்துப் போடுகிறேன்?” என்று ஒரு சமயம் ஒருத்தன் குப்பனிடம் கேட்டு விட்டான்.

“நீ போடுகிற சோத்துக்காக நாய்கூட உன்னிடம் அந்த அடி வாங்கிக் கொண்டு இருக்காது; வேறு எஜமானைத் தேடிக் கொண்டு போய் விடும். அவளாக இருக்கக் கண்டு பொறுமையோடு இருக்கிறாள்” என்று காரமாகக் குப்பன் கூறினான்.

அது முதல் குப்பனிடத்தில் பெண்களைப் பற்றிப் பேசுகிறவர்கள் எச்சரிக்கையாகவே இருப்பார்கள். அவனுக்குப் பெண்டாட்டியின் மேலிருக்கிற அன்புக்கு அவனுடைய மகன்





“பயிற்றிப் பல கல்வி தந்து இந்தப் பாரை உயர்த்திட வேண்டும்” என்று பாடினார் மகாகவி பாரதியார். அதைக் காரியத்தில் நடத்திக் காட்டினார், சிவமே பூஷணமாகக் கொண்ட மகாபுருஷர் காலஞ்சென்ற ஸ்ரீ பி. எஸ். சிவசாமி ஐயர் அவர்கள். திருக்காட்டுப் பள்ளியில் உள்ள மாணவர் ஹைஸ்கூலும், சென்னை மயிலாப்பூரில் உள்ள லேடி சிவசாமி ஐயர் பெண்கள் பள்ளிக்கூடமும் அவருடைய புகழ் பாடிக் கொண்டு நிற்கின்றன. லேடி சிவசாமி ஐயர் பெண்கள் ஹைஸ்கூலில் அதன் ஸ்தாபகர் தின விழா நவம்பர் 5-ல் வெகு சிறப்பாக ராஜாஜி அவர்கள் தலைமையில் நடந்தது. பள்ளிக்கூடத்தின் புதிய கட்டிடத்தையும், ராஜாஜி அவர்கள் திறந்து வைத்த சிவசாமி ஐயர் சிலையையும், பள்ளிக்கூடக் காரியதரிசி ஸ்ரீ கே. ரங்கசாமி ஐயங்காரையும், தலைமை ஆசிரியை ஸ்ரீமதி செல்லம் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

மேலுள்ள அன்பும் ஒரு முக்கிய காரணமாகும். அவன்தானே அந்த அருமைச் செல்வத்தைப் பெற்று அவனுக்குக் கொடுத்தவன்?

* * *

கோட்டை மாரியம்மன் திருவிழா வந்து விட்டால் குப்பனுக்கு ஒரே உற்சாகம். ஊரிலுள்ள பெரிய குடித்தனக்காரர் ஒருவர் பாக்கியில்லாமல் அவனுக்குத் திருவிழா இனாம் கொடுப்பார்கள். அவனுடைய உற்சாகத்துக்கு வேறென்ன வேண்டும்?

கோட்டை மாரியம்மன் கோவில் காவிரியாற்றின் கரையிலே கோயமுத்தூர் ஜில்லாவில் இருக்கிறது. காட்டுப்புத்தூர் காவிரியின் மறு கரையிலே சேலம் ஜில்லாவில் இருக்கிறது. பரிசலிலே ஏறி ஆற்றைக் கடந்து குப்பன் அடிக்கடி வருவதுண்டு. கையில் காசு கிடைத்தால் அவன் மாயமாக மறைந்து விடுவான் என்று சொன்னேன் அல்லவா? அப்பொழுதெல்லாம் அவன் இப்படித்தான் வருவான்.

இந்த வருஷம் கோட்டை மாரியம்மன் திருவிழாவுக்கு வந்தபோதுதான் அவன் போலீசாரிடம் அகப்பட்டுக் கொண்டான். இனாம் காசுகளையெல்லாம் எடுத்துக் கொண்டு அவன் திருவிழாவுக்குப் புறப்பட்டான். தனது ரகசியமான ஆசையைப் பூர்த்தி செய்து கொள்ளுவதிலே வழக்கம் போல் முனைந்தான். ஆனால் அவனுடைய அதிர்ஷ்டம் இந்த முறை வேறு விதமாக இருந்து விட்டது.

தேர் திருவிழா என்றால் திருட்டுச் சாராயம் ஏராளமாக வருவது இப்பொழுதெல்லாம் சர்வ சாதாரணமாகிவிட்டது. அதை அடக்குவதற்காகப் போலீஸ் ஏற்பாடுகளும் பெரியதோர் அளவில் உண்டு. ஆனால் போலீசையும் ஏமாற்றுவதில் அந்தத் திருட்டுச் சாராயத்துக்கு வல்லமையுண்டு.

குப்பன் பகலெல்லாம் திருவிழா வேடிக்கைகளைப் பார்த்துக் கொண்டு சுற்றினான். அங்கே கண்ணில் பட்ட பண்ணைக்காரர்களிடமும் வேண்டிய அளவு இனாம் வாங்கித் தன்னுடைய பையை நிரப்பிக் கொண்டான்.

இரவு வந்ததும் அவன் உள்ளத்திலே களிப்புப் பொங்கியது. நல்ல முழு நிலாவெளிச்சம் எங்கும் பரவி அவன் உள்ளத்திலே பொங்கிய களிப்பை இன்னும் அதிகப்படுத்தியது. குப்பன் திருட்டுச்சாராயத்தில்

நல்ல சரக்காகப் பார்த்து இரண்டு புட்டிகள் வாங்கிக் கொண்டு ஆற்றோரத்துக்கு நடந்தான். நாணல் புதர்களுக்கு மத்தியிலே அவனுக்கு ஒரு நல்ல மறைவிடம் உண்டு. அங்கு தான் அவனுடைய மதுத் தாகமெல்லாம் ரகசியமாகத் தீரும். தான் குடிப்பது யாருக்கும் தெரியக் கூடாது என்பது அவன் ஆசை.

ஆனால் இந்த முறை அவன் ரகசியம் வெளியாகி விட்டது. புட்டிகளோடு அவன் புதருக்குள் போவதை ஒரு போலீஸ்காரன் பார்த்து விட்டான். அவன் எப்படியோ அந்தப் புதர்களுக்குள்ளே வந்திருக்கிறான். திருட்டுச் சாராயம் கண்டு பிடிக்க வரும் போலீஸ்காரர்கள் யாரும் சாதாரணமாக அந்த இடத்துக்கு வரமாட்டார்கள். அத்தனை சிரமப்பட்டுப் புதருக்குள்ளே யார் வருவார்கள்? பாம்பும் தேளும் அங்கே உலாவும். இவன் எப்படியோ வந்து விட்டான்.

"டேய். திருட்டுப் பயலே—நில் அங்கேயே — பக்கத்திலே என்னடா வைத்திருக்கிறாய்?" என்று போலீஸ்காரன் உருமினான்.

குப்பன் அவனுடைய மிரட்டலுக்குப் பயப்பட வில்லை. பயந்தால் காரியம் கெட்டுப் போகும் என்று அவனுக்குத் தெரியும்.

"அண்ணே சும்மாவா — உனக்கும் சேர்த்துத்தான் கொண்டு வந்திருக்கிறேன்" என்று அவன் பதில் சொன்னான்.

போலீஸ்காரன் அருகிலே வந்தான். "ஏண்டா, திருட்டுச் சாராயம் குடிக்கிறது மில்லாமல் இதுவேறே திமிரா உனக்கு?" என்று மறுபடியும் அவன் அதட்டினான்.

"போலீஸ் அண்ணே, இந்த நிலா வெளிச்சத்திலே குஷியாக இருக்கிறதை விட்டு விட்டு எதுக்கு மிரட்டறே? இங்கே ஒரு பிராணி நம்மைப் பார்க்கப் போறதில்லை. இன்னைக்கு நம்ம ஆசையைத் தீர்த்துக்குவோம். நானேயிருந்து நீ உன் 'டூட்டி'யைச் சரியாகப் பண்ணிக்கோ" என்று குப்பன் அவனுக்கு ஆசை காட்டினான்.

தன் விருப்பத்துக்கு அந்தப் போலீஸ்காரன் கட்டுப்பட்டுப் போவான் என்று குப்பனுக்கு எப்படியோ தெரிந்திருந்தது. இரண்டு பேருமாகத் தாக சாந்தியில் ஈடுபட்டார்கள். குப்பனுடைய பேச்சுச் சாதுர்யமும் மதுவின் மயக்கமும் சேர்ந்து மற்றவனை ஒரே இன்ப சாகரத்தில் மூழ்கடித்தன.

"குப்பண்ணே, எனக்கும் இந்தப் பழக்கம் உண்டென்னு நீ எப்படிக் கண்டாய்?" என்று போலீஸ்காரன் குழறிக் குழறிக் கேட்டான்.

"அண்ணே. இது தெரியாதா? சும்மா திருட்டுக் கண்டு பிடிக்க வருகிறவன் இங்கே தைரியமா வருவானா? குடிக்கிற சுகம் தெரிஞ்சவங்களுக்குத் தான் இந்தத் தைரியம் வரும். எந்த இடமானாலும் அவங்களுக்கு லட்சியமில்லை. நாய் மாதிரி தேடியலைவார்கள்" என்றான் குப்பன்.

"நல்லா சொன்னே அண்ணே. உன் வாய்க்குச் சர்க்கரை போடணும். எங்கே அந்தப் புட்டியை இப்படித் தள்ளு. மதுவிலக்கு வந்ததிலிருந்து இப்படி ஆசைதீர ஒரு நாள் கூட நான் குடிச்சதே இல்லை."

நேரமாக ஆக இருவருக்கும் போதை மீறி விட்டது. அப்படியே ஒருவர் மீது ஒருவர் சாய்ந்தார்கள். குப்பனை அவனுடைய விருந்தாளி கட்டியணைத்து "அண்ணே நீ சுகமா இருக்கணும்" என்று ஆசிர்வாதம் செய்தான்.


"இந்தா, இன்னும் கொஞ்சம் போடு— நாளைக்குக் கிடைக்கவா போகுது?"


விருந்தாளிக்குத் தலைநிமிர முடியவில்லை. அவன் தொப்பி மண்ணிலே விழுந்து புரண்டது. குப்பன் அதை எடுத்துத் தன் தலையிலே வைத்துக் கொண்டான். இருவரும் அப்படியே நாணற் புதரிடையே சாய்ந்தார்கள். எல்லாவற்றையும் மறந்த ஒரு கனி மயக்கத்திலே அவர்கள் இருவரும் மூழ்கினார்கள்.

இந்த நிலையில் தான் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் இருவர்களையும் மறு காட்சியிலே

பிரபல திருமணம்

சென்னை மாஜி மேயர் ஸ்ரீ எஸ். ராமசாமி நாயுடு அவர்களின் குமாரர் திரு ஆர். சுந்தரராஜுலுக்கும் ஸ்ரீ எம். வெங்கட்ராம நாயுடு அவர்களின் புதல்வி செல்வி சாரதா தேவிக்கும் தியாகராய நகர் பக்தி விலாஸில் சென்ற அக்டோபர் மாதம் 26ந் தேதி யன்று வெகு சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது. திருமணத்துக்கு முதன் மந்திரி ராஜாஜி அவர்கள் விஜயம் செய்து தம்பதிகளை ஆசிர்வதித்தார். சென்னை நகரப் பிரமுகர்களும், மந்திரிகளும், ஏராளமான நண்பர்களும், உறவினர்களும் வந்திருந்து திருமணத்தைச் சிறப்பித்தனர். மணமக்களுக்கு ஏராளமான வாழ்த்துச் செய்திகளும், பரிசுகளும் வந்து குவிந்தன. வாழ்க, மணமக்கள்!





மாயவரம் சுதேசிக் கைத்தொழில் கண் காட்சி நவம்பர் 1ல் முதல் சிறப்பாக நடை பெற்று வருகிறது.

(1) திறப்பு விழாவின்போது கூடி யிருந்த சபையின் ஒரு தோற்றம்.

(2) கண் காட்சிக்கு அலங்கரித்துள்ள அழகிய முகப்பின் தோற்றம்.

(3) கண் காட்சியை யொட்டி நகரப் பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள ஸ்டால்கள். ★★★

போட்டோ: என். ராமகிருஷ்ணன்

அங்கே கண்டார். அவர் ரொம்பவும் கெடுபிடியான ஆசாமி. கள்ளச் சாராயத்தை அடியோடு ஒழித்துவிட வேண்டுமென்ற ஆர்வமுடையவர். அதனால் அவர் இரவு முழுதும் நாலு போலீஸ்காரர்களைக் கூட்டிக் கொண்டு காவிரியாற்றின் கரையோரமெல்லாம் சுற்றினார். எதிர்பார்த்தபடி அன்று நல்ல வேட்டை கிடைத்தது அவருக்கு.

குப்பனும் அவனுடைய புதிய தோழனும் உருண்டு கிடக்கும் இடத்துக்கு வருவதற்குள் பொழுது விடிந்து விட்டது. அப்பொழுது கூட அவர்களுடைய மயக்கம் தீரவில்லை. இருவரையும் கைதுசெய்து சப்இன்ஸ்பெக்டர் தமது ஜாகைக்குக் கொண்டு போனார்.

குப்பன் கைதியானதின் காரணத்தை அறிந்தபோது மணியக்காரருக்கு ஒரே ஆச்சரியமாக இருந்தது. குப்பன் குடிப்பான் என்று அவர் நம்பவேயில்லை.

"ஏண்டா குப்பா, உனக்குமா இந்தப் பயித்தியம்?" என்று கேட்டார் மணியக்காரர்.

"சாமி என்ன பண்ணட்டும். எப்படியோ சிறு வயசிலே ஏமாந்து குடிக்கப் பழகி விட்டேன். அது என்னைப் பேய் மாதிரி பிடிச்சுக் கொண்டது" என்று அழுத குரலில் குப்பன் சொன்னான். அவனிடம் வழக்கமாகக் காணப்படும் உற்சாகம் இப்பொழுது சிறிது கூட இல்லை. அவன் கண்களில் என்றுமில்லாதபடி கண்ணீர் துளித்தது.

"உன்னைக் குடிகாரன் என்று சொன்னால் ஊரிலே யாருமே நம்ப மாட்டார்கள்."


"ஆமாம் சாமி, வெளியில் தெரியாமெ இருக்க வேணும்னு நான் ரொம்ப முயற்சி பண்ணி வந்தேன். நான் குடிகாரன் என்கிற விசயம் என் மகனுக்குத் தெரியவே படாது" என்று அவன் விம்மிக்கொண்டே கூறினான்.

"போன தேர்தலிலே காங்கிரசுக்கு ஓட்டுச் சம்பாதிக்க வீடு வீடாய்ப் போயலைஞ்சயே — காங்கிரசுக்காரர் ஆண்டால்தான் குடி யொழியும் என்று எல்லோரிடமும் சொன்னாயே?"

"ஆமாம், நான்தான் கெட்டுப் போனேன். என் மகனாவது நல்லவனாப் பிழைக்க வேண்டாமா சாமி? இந்த நாய் எப்படியோ சாகட்டும். என் மகன் குடிப் பழக்கமில்லாமல் சுகமா வாழவேணும் — அதுக்குக் காந்தி சாமியின் காங்கிரசு வாழ வேணும் — குடி ஒழிய வேணும்" என்றான்.

"குடிக்கிறது கெட்டது என்று உனக்குத் தான் நல்லாத் தெரிகிறதே — அதை விட்டுத் தொலைக்கிறதுதானே?"

"அது முடியாது சாமி — அந்தப் பேய் பிடிச்சா அவ்வளவுதான், விடவே விடாது. மதுவிலக்குச் சட்டம் ரொம்ப நாளைக்கு அப்படியே இருந்தா நம்ம பிள்ளை குட்டிகளுக்கு நல்லது. என்னைப்போல ஆளுக ளெல்லாம் போனதுக் கப்புறம் திருட்டுச் சாராயமும் நின்னு போகும்" என்று எதிர்காலத்தில் நம்பிக்கையோடு குப்பன் பதிலுரைத்தான்.



உங்கள் குழந்தைகள் எளிதில் சோர்வடைகின்றனரா?

சாதாரண ஆரோக்கியமான குழந்தைகள் ஓடி ஆட விரும்பும்! இதனால் அவர்களின் சக்தி துரிதமாக செலவடைகிறது. அன்றாடம் செலவாகும் சக்தியை ஈடு செய்து வளர்ச்சி தர சாதாரண உணவு போதுமானதல்ல. குழந்தைகள் சுறுசுறுப்பின்றி வாட்டமுற்றிருந்தால் அவர்களின் போஷணைக் குறைவை நிவர்த்திக்க, அவர்களுக்கு புஷ்டியான, ஜீரணமாகக்கூடிய அதிகப்படியான போஷணை தேவை.. ருசி மிகுந்த ஓவல்டின் சுறுசுறுப்பையும் வலிமையையும் அளிக்கும். பழுத்த பார்லிமால்ட், ஆடை நிரம்பிய சுத்தமான பசும்பால், சிறந்த கொக்கோ, இயற்கையான பாஸ்பேட்டுகள், பி & டி விடமின்கள் சேர்ந்து. அது உன்னத குடும்ப உணவு பானமாக விளங்குகிறது. போலிகளைத்தள்ளி விடுங்கள்.



விநியோகஸ்தர்கள் :

கிரஹாம்ஸ் டிரேடிங் கோ. (இந்தியா) லிட்.


ஓவல்டின்

உறுதியான வலிமையான வளர்ச்சிக்கு!

OV.593

பழிக்குப் பழி

இராஜதுரை



இன்றைக்கு ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னால் ஓர் முக்கிய நாள்.

ஈழத்தின் புனித நகரான அழகுமிக்க அநுராதபுரியின் வானுயர் மாட மாளிகைகளும் டகோப்பாக்களும் இரத்த வெள்ளத்தில் மூழ்கி எழுந்தவை போல் காட்சி யளித்தன. இரத்தச் சிவப்பேறிக் கிடந்த அந்தி வானத்தில் இருளின் மெல்லிய கீற்றுக்கள் விழுந்து கொண்டிருந்தன. மிகவும் ரகசியமாக ஒருவரோடொருவர் ஏதேதோ பேசிக் கொண்டு வேகமாக நடந்து கொண்டிருந்தார்கள். எங்கும் ஓரே பயங்கர அமைதி நிலவியது. இரவு நடுநிசிவரை பாட்டும் கூத்துமாக ஒரே அமர்க்களப்படும் அநுராதபுரம் அன்று வெறிச்சோடிக் கிடந்தது.

அரச வீடுதிகளில் ஆண்களுக்கு உரிய அறையொன்றில் கைகளைப் பின்புறமாகக் கட்டிய வண்ணம் ஓர் உருவம் உலாவிக் கொண்டிருந்தது. மதியம் கழிந்து, மாலை புகுந்து, இருள் வந்ததுகூட அதற்குத் தெரியவில்லை. சிதைந்து சுக்குநூறாகி விட்ட அதன் உள்ளத்தின் பிரதிபலிப்பு கன்னத்திலே கோடிட்டு ஓடிக் கொண்டிருக்கும் கண்ணீர் ஆறுகளில் காணக்கூடியதாக யிருந்தது. ஆயிரம் தடவையாக அந்த ஒன்பது அடிச்சுவர்களுக்கிடையில் குறுக்கும் நெடுக்குமாக அவ்வுருவம் நடந்து கொண்டிருந்தது. அது வேறு யாருமல்ல. ஈழத்தில் வாள் வலிக்கும் தோள் வலிக்கும் பேர் போன தளபதி வசபனேதான்.

கொழுந்து விட்டெரியும் தீ நாக்குகளில் சிக்கித் தன்னைப் பெற்றெடுத்த தாய் என்னெனயாக உருகி ஓடிய கோரக் காட்சி அவன் கண்களிலிருந்து மறையவேயில்லை.

"ஆ!......ஐயோ!......அம்மா!" என்று அவன் தாய் நெருப்பின் தாக்குதல் சகிக்க முடியாது வாய் விட்டுக் கத்திய பரிதாபக் குரல் இன்னும் அவனுடைய காதுகளிலே ஒலித்துக் கொண்டிருந்தது. விம்மிப் புடைத்த அவனுடைய மார்பகம் ஒரு கணம் உயர்ந்து தாழ்ந்தது. தன் இரு கைகளாலும் முகத்தைப் பொத்திக் கொண்டு சிறு குழந்தையைப்போல் வசபன் விம்மி விம்மி அழுதான். தாயின் வேதனைக் குரலில் வெந்து புண்ணாகி விட்ட அவன் நெஞ்சில் நெருப்புக் கொள்ளியைச் செருகியதுபோல இரு பரிகாசக் குரல்கள் வந்து விழுந்தன. வாளின் பிடியிலே கையை வைத்துக் கொண்டு குரல்கள் வந்த திசையைத் திரும்பிப் பார்த்தான். அங்கு தன் மாமனும் அநுராதபுர மன்னனுமான தாதுசேனனும், அவன் மனைவி கருணாவதியும் நின்று கொண்டிருந்தார்கள். அவன் கண்களிலே நெருப்புப் பொறி பறந்தது. அவன் உள்ளம் ஓய்வுகாணாத கடலாகக் குமுறியது.

"அம்மா பட்டப் பகலிலே உன்னை நெருப்பில் போசுக்கிய கல் நெஞ்சர்களைத் துடி துடிக்கக் கொல்லா விட்டால் நான் உன் மகன் இல்லை, அம்மா. சரித்திரம் எது சொன்ன போதிலும் நான் இப் பழியை இரத்தத்தாலே போக்குவேன் இது சத்தியம்" என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டான் வசபன்.

நீண்டநேரமாக அவ்வறையில் நிலவிக் கொண்டிருந்த அமைதியைக் கருணாவதியின் சிரிப்பொலி கலைத்தது. அவள் வந்ததைக் கூடக் கவனிக்காமல் கன்னங் கரேலென்று இருள் மூடிக்கிடந்த அநுராதபுர நகரை ஜன்னல்வழியாகப் பார்த்துக் கொண்டு நின்றான் வசபன். ஒரு காலத்தில் தேன் கரும்பாய், தித்திக்கும் கற்கண்டாய், அழகின் அவதாரமாய் விளங்கிய அவனுடைய மனைவி கருணாவதி இன்று பேயின் உருவமாகக் காட்சி யளித்தாள். வசபனுடைய அலட்சியம் எல்லை மீறிய ஆத்திரத்தை அவளுக்கு ஊட்டியது. அவள் ஆவேசத்தோடு பேசினாள். அவ் வார்த்தைகள் ஒவ்வொன்றும் அவனைக் குத்திக் குடைந்தன.

"உம் அன்னை தன் காலடியில் என்னைக் கிடத்த எண்ணினாள். நான் மன்னன் மகள். என் சுட்டு விரல் அசைத்தால் இந்த நாடே அசையும். அதை அவள் ...... அனுபவித்து விட்டாளே! பத்து மாதம் சுமந்து பெற்றுப் பாலூட்டிச் சீராட்டி வளர்த்த தாய் நெருப்பின் தீக் காயங்களுக்கு இரையாகி விட்டாளே. அந்த ஏக்கத்தால்...... தவிக்கும் தளபதி வசபருக்கு ஆறுதல் சொல்ல வில்லையே யாரும் என்று என்மீது ஆத்திரமா! இந்த நாட்டு மன்னன் மகளை உமது தாய் உதாசீனம் செய்தாளே அது உமக்கு அவமானமாக இருக்கவில்லை. வேண்டாம் உமது அன்பு. மனைவி அலட்சியம் செய்யப்பட்டு அவமானப் படுத்தப் பட்டாள். அப்போது உம் தாய்க்குப் புத்தி சொல்லி இருந்தால் அவளுக்கு இந்தக் கதி ஏற்பட்டிருக்குமா! என்ன பைத்தியக்காரத்தனம்!"

வசபனுடைய பொறுமை எல்லை மீறியது. அந்த வார்த்தைகள் ஒரு ஆண்மகனுடைய வாயிலிருந்து வெளி வந்திருந்தால் அவனை உயிரோடு விட்டிருக்க மாட்டான். "தாதுசேனன் மன்னன் மகளாய் நீ யிருந்தாலும் இன்று நீ என் மனைவி. கணவனின் சுக துன்பங்களில் ஒன்றாகப் பங்கெடுக்க வேண்டியவள். ஒரு சாதாரணப் பெண்ணுக்கு இருக்கும் இதய உணர்ச்சி கூட மன்னன் மகளாகிய உனக்கு இல்லை."

வசபனுடைய வார்த்தைகளை இடைமறித்து அவள் பேசிக்கொண்டே போனாள். மன்னன் மகள் என்ற மமதை அவளுடைய வார்த்தைகள் ஒவ்வொன்றிலும் அப்பட்டமாகத் தெரிந்தன. "மரகதக்கல்லை வைக்க வேண்டிய இடத்தில்

மன்னுங்கட்டியை வைத்தாள்" என்று சொல்லிய படி அவன் அறையைவிட்டு வெளியே போனான்.

"மண்ணாங்கட்டியை மரகதக் கல்லென்று மயங்கியவன் நான்தான், நீ அல்ல" என்று அவன் கூறிய கடைசி வார்த்தைகள் அவள் காதுகளில் இலேசாகவே விழுந்தன. அணிகள் கலகலக்க அவன் வேகமாக நடந்தான். அவனுடைய கோபத்தின் வேகம் எதிரே வந்த வேலைக்காரியின் கன்னத்தைச் சிவக்கச் செய்தும் பூச்சட்டிகளை நொறுக்கித் தள்ளியும் அடங்கவில்லை.

பால் நிலவில் அனுராதபுரி தேஜோமயமாக ஜொலித்தது. வெள்ளித் தகடுகளை உருக்கி வார்த்ததுபோல் வானுயர்ந்த கட்டடங்கள் காட்சியளித்தன. அழகிய சித்திர வேலைப்பாடுகளோடு கூடிய கட்டடங்களின் மீது படிந்து சென்று கொண்டிருந்த மேகக் கூட்டங்கள் ஏதோ பரம இரகசியங்களைச் சொல்வனபோல் தோன்றின. நகரின் ஒதுக்குப்புறமாயுள்ள உல்லாச விடுதிகளில் ஒன்றில் யாழின் மெல்லிய ஒலி எழுந்து கொண்டிருந்தது. அந்த வீட்டின் சொந்தக்காரி அனுராதபுரத்தின் அழகின் சன்னிதானம். விழியாலே மொழி பேசும் அந்தச் சித்திரப் பாவையின் சிங்காரச் சிரிப்புக்கு ஏங்கிக் கிடந்தோர் பலர். காதுவரை நீண்டிருந்த கயல் கண்களும் யானைத் தந்தத்தால் கடைந்தெடுத்தது போன்ற வாளிப்பான உருவமும், சிறுத்த இடையும், பின்னல் சடையும் கொண்டு விளங்கிய அந்த அழகின் தெய்வத்தை அடைய ஆசைக் கனவு கண்டோர் அனுராதபுரியில் ஆயிரக்கணக்கானோர். ஆனால் அவளை அடையும் அதிர்ஷ்டம் கிடைத்த பாக்கியசாலி காசியப்பன் ஒருவனே. தாதுசேன மகாராசனின் மகன் தளபதி வசபனின் அருமை மைத்துனன்.

மலர்கள் சொரியும் பூங்காவில் பட்டு மெத்தையில் பன்னீர் வாடையில் இப்படிக் கனவு உலகிலே அவன் மிதந்து கொண்டிருந்தான். நித்திரைக்கும் விழிப்புக்கும் இடையிலுள்ள ஒருவித மோன கோலத்தில் அவன் இன்பக் காதல் அரசியின் எழில் சூழும் இணையு மற்றதாக அவனுக்குத் தெரிந்தது.

உருண்டு திரண்டிருந்த மார்பகத்தை மறைத்துக் கட்டிய கச்சையின் மேல் கிடந்த மெல்லிய மஸ்லின் பட்டுத்துண்டு மீதே சரிய பழ ரசத்தை ஏந்திய கிண்ணத்துடன் அவன் அருகில் நெருங்கினாள் அவள். அவன் இந்த உலகத்தையே மறந்து நின்று கொண்டிருந்தான்.

உதய சூரியனின் வரவைக் காலைச் சேவல் கூவிக் காட்டியது. "அன்பே! நம் இன்ப வாழ்வின் எதிரி வருகிறான். இருள் கவிந்ததும் உன் காலடிக்கே ஓடி வந்து விடுகிறேன். எங்கே எனக்கு..." தழுதழுத்த குரலில் காசியப்பன் விடை கேட்டான்.

தன் உடம்பை ஒய்யாரமாக வளைத்தவண்ணம் "இன்னும் எத்தனை காலைக்கு இந்த ஏழையின் இருப்பிடத்தை நாடி வருவீர்கள். அனுராதபுரியின் மணிமகுடம் தங்கள் தலைமீது அமர்த்தப்பட்டதும் என் நினைவு உங்களுக்கு எப்படி வரும்!" என்று குழைவோடு அவள் கூறினாள்.

அவன் அவளை எட்டிப் பிடித்தான். அவள் துவண்டு அவன் கைகளிலே துவண்டு கொண்டிருந்தாள். கலைந்து கிடந்த அவள் கூந்தலை வருடிக் கொண்டே "உன்னை மறப்பதா! அது என் வாழ்க்கையில் ஒரு தடவைதான் சம்பவிக்க முடியும்"

"எப்போதென்று நான் அறியலாமா!" என்று மெல்லிய தன் கரங்களால் அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டு கேட்டாள்.

அவளுடைய கன்னத்தை லேசாகத் தட்டியபடி "அது என் மரணத்தின் போது தான் கண்ணே" என்று களிப்போடு சொன்னான் காசியப்பன்.

"மிகவும் களைப்பாயிருக்கிறீர்கள். இதோ உணவு கொண்டு வருகிறேன்" என்றவண்ணம் எழுந்து உள்ளறைக்குள் ஓடினாள். அவளுடைய பின்னழகைப் பார்த்துச் சொக்கிப் போன காசியப்பன் நீண்டதோர் பெருமூச்சு விட்டான்.

'அனுராதபுர மணி மகுடம் எனக்கெங்கே கிடைக்கப் போகிறது! பட்டத்து ராணியின் மகன் மூகலானன் இருக்கிறான். நான் ஆசை நாயகிக்குப் பிறந்தவன். மூத்தவனாக இருந்தால்...... சே, சே, நடக்க முடியாத பேராசை. என்றோ ஒரு நாள் விளையாட்டாகச் சொன்னதை இவள் நினைக்கிறாள்...' இப்படியெல்லாம் காசியப்பன் எண்ணினான். அந்த நேரத்தில் "காசியப்பா, தைரியத்தை இழக்காதே. அனுராதபுரத்துச் செங்கோலுக்கு அதிபன் நீயே தான். என்னை நம்பு" என்ற வசபனின் அழுத்தமான வார்த்தைகள் அவன் எண்ணத்தில் மின்னல் போல் பளிச்சிட்டன.

* * *

"வசபா! என் மனத்தில் ஆசைக் கனவுகளை எழுப்பாதே. பட்டத்து ராணியின் மகன் இருக்க நான் மன்னனாவது எப்படி? எல்லாம் பகல் கனவு!" காசியப்பனுடைய உதட்டில் இருந்து இவ் வார்த்தைகள் வெளி வந்தனவே தவிர உள்ளத்தின் அடித்தளத்தில் மன்னனாக 'வேண்டுமென்னுமாசை வளர்ந்துகொண்டிருந்தது. இதை வசபன் நன்றாகத் தெரிந்து கொண்டான். இலேசாகச் சிரித்துக்கொண்டு, "காசியப்பா, அனு



ராதபுர மணிமுடி உனக்கே உரியதென்று முதலில் முடிவு செய்துகொள். வாழ்க்கை பஞ்சு மெத்தையிலே ஒரு கணம் துயில்வதல்ல. நமது வாழ்நாள் பூராவும் குறையாத இன்பத்தை அனுபவிக்கும் பாதையை நாம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். உன் வாழ்க்கையின் இலட்சியமாக அனுராதபுர மணிமுடியை வைத்துக் கொள். அதைப் பெற்றுத் தரும் பொறுப்பு என்னைச் சார்ந்தது" என்றான் வசபன்.

"காசியப்பனின் நடைபெறாத திட்டங்களில் இதுவும் ஒன்று!" என்று சோர்ந்த வண்ணம் காசியப்பன் கேட்டான்.

"திட்டம் தயாரிப்பதுதான் சிரமம். அதைச் சாதிப்பது அவ்வளவு சிரமமானது அல்ல." வசபனுடைய பேச்சில் வரவர உறுதி வலுப்பெற்றுக் கொண்டே போனது.

அரசிருக்கையின் மகத்துவத்தை அள்ளிக் கொட்டிக் காசியப்பனை அபிஷேகம்செய்துகொண்டிருந்தான் வசபன். காசியப்பன் கண்ணுக்கு முன் ஒரு கற்பனை உலகம் மலர்ந்தது. அற்புத யாழின் நரம்புகளிலிருந்து சுநாதமான இசை ஒலி எழுந்து அவனைக் குண்டுக்கட்டாகத்தூக்கி எங்கோ இன்ப உலகுக்குக் கொண்டு சென்றது. சித்திர வேலைப்பாடு அமைந்த சிங்கார மண்டபத்திலே செங்கோலும் கையுமாகக் காசியப்பன் வீற்றிருக்கிறான். ஆயிரக்கணக்கான வாலைக் குமரிகள் அவன் முன்னிலையில் தாளத்துக்கு ஏற்றபடி ஆடிக் கொண்டிருக்கிறார்கள். கவிவாணர்கள் அவனைத் துதி பாடிக்கொண்டு இருக்கிறார்கள்.

அதிலே பாய்ந்து நனைந்துப் போயிருந்த காசியப்பனை "உன் முடிவு என்ன! இத்தனை போக போக்கியங்களையும் இழக்கப் போகிறாயோ!" என்று கேட்ட வசபனின் உறுதியான குரல் மீண்டும் மண்ணுலகுக்குக் கொண்டு வந்தது.

தொடர்ந்து வசபன் பேசிக் கொண்டே போனான். "காசியப்பா, உலக சரித்திர ஏடுகள் தரும் செய்திகள் உனக்குத் தெரியாது. மண்டலாதிபதிகள் வீற்றிருந்த சிம்மாசனங்களில் மண்ணை உழும் உழவன் ஏறியிருக்கிறான். வாள் முனைக்கு அஞ்சாத மாபெரும் வீரர்களை ஓர் மலர்ச் சிரிப்பால் மடக்கித் தன் காலடியில் கிடத்தி அரசிருக்கை ஏறிய பெண்களை உனக்குத் தெரியாது. ஆட்சியை அபகரிக்க, அதன் பலாபலன்களை அனுபவிக்கத் தகப்பனை மகன் கொன்றிருக்கிறான். மகனுக்குத் தாய் நஞ்சூட்டியிருக்கிறாள். அரசியல் பாஷையிலே இவற்றுக்குப் பெயர் ராஜதந்திரம். சரித்திர ஏடுகள் அத்தகைய செயல்கள் புரிந்தவர்களை வீரர்கள், தியாகிகள் சரித்திரத்தை மாற்றியமைத்த தீரர்கள், இவை எல்லாவற்றுக்கும் மேலாக இராஜ தந்திரிகள் என்று வானளாவப் புகழ்கின்றன."

"என்றாலும்......" காசியப்பன் தடுமாறினான்.

அவனுடைய பலவீனத்தை கண்டு அறிந்து கொண்ட வசபன் "தந்தை என்று தயங்குகிறாயா! தந்தை மேல் உனக்கு இருக்கும் பாசம் ஏன் உன் மீது தந்தைக்கு இருக்க முடியாது. மூத்தமகன் நீ. முடி உனக்கே உரியது சட்டப்படி. ஆனால் அங்கே சதி. சதியைச் சதியாலே சாகடிப்போம்" என்று கூறிக் கைகளைக் காசியப்பன் முன் நீட்டினான் தளபதி வசபன்.

"ஆம் வசபா......நான் தயார்" என்ற வண்ணம் வசபனின் கைமேல் கைவைத்து உறுதி] அளித்தான் காசியப்பன்.

வசபனின் அகமும், முகமும் மலர்ந்தன. 'தாதுசேனா! உன் அந்திமச் சடங்கின் ஆரம்ப விழாத் தொடங்கி விட்டது. என் கையில் காசியப்பன். உனக்கெதிராக உன் மகனையே நிறுத்துகிறேன்' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான்.

* * *

அன்று விசாக தினம். அனுராதபுரம் ஆனந்த வெள்ளத்தில் மிதந்து கொண்டிருந்தது. மலர்களின் நறுமண வாடை, ஊதுவத்திகளின் சுகந்த மணம் ஆலய மணிகளின் ஓசை, ஆட்டக்காரர்களின் சதங்கை ஒலி, மத்தளங்கள் மேளங்கள் ஆகியவற்றின் பேரொலி இவைகள் யெல்லாவற்றையும் கடந்து, ஒரு படி மிஞ்சி,

புத்தம் சரணங்கச்சாமி
தம்மன் சரணங்கச்சாமி
சங்கம் சரணங்கச்சாமி

என்ற மந்திர ஒலி எழுந்து கொண்டிருந்தது. அருளும் அன்பும் தவழும் முகத்தோடு கூடிய மஞ்சள் உடை தரித்த புத்த பிக்குகள் மந்திரங்களைச் செபித்துக் கொண்டு வந்தனர். பிரம்மாண்டமான அந்த ஊர்வலம் இராசவீதியிலே வந்து கொண்டிருந்தது. நூற்றுக் கணக்கான யானைகளும், ஆயிரக்கணக்கான வெள்ளைக் குதிரைகளும், லட்சக்கணக்கான வீரர்களும், திரண்டு வந்த ஊர்வலத்தின் மத்தியில் மத்தகஜம் ஒன்றின்மீது தாதுசேன மகாராசன் கம்பீரமாக அமர்ந்திருந்தான். முதுமைக் கோடிட்ட அவனுடைய முகத்தில் வயோதிகம் அங்கும் இங்கும் தெரியக்கூடியதாக இருந்தாலும் அவன் உட்கார்ந்திருந்த கம்பீரத்தில் இருபது வயது மதிக்கக் கூடிய இளைஞனைத் தோற்றமளித்தான். ஊர்வலம் வசந்த மண்டபத்தை அடைந்தது. வழக்கமாக நடைபெறும் ஆடல்கள் பாடல்கள் அனைத்தும் முடிவடைந்து அவர் அவர் தங்கள், தங்கள் விடுதிகளுக்குச் சென்று விட்டார்கள். மேல்மாடி



யில் நின்றபடி அநுராதபுர நகரின் அழகை அள்ளிப்பருகிக்கொண்டு இருந்தான் தாதுசேனன்.

அந்தச் சமயத்தில் சிரித்து மகிழ்ந்தபடி காசியப்பனும் வசபனும் அங்கு வந்தார்கள். சில நிமிஷ நேரம் அன்று நடைபெற்ற விசாக பண்டிகையைப் பற்றி மூவரும் பேசினார்கள். தாதுசேனன் தன்னைக் கவனியாத சமயத்தைப் பார்த்து வசபன் கண்களால் காசியப்பனுக்கு வந்த காரியத்தை நினைவூட்டினான்.

"இங்கு இரகசிய சுரங்க வழியொன்று இருக்கிறதாமே அதைப் பார்க்கவேண்டுமே அப்பா..." என்று காசியப்பன் கொஞ்சலாகக் கேட்டான். தனக்கெதிராக நடைபெறும் சதியைத் தெரிந்து கொள்ளச் சக்தியற்ற தாதுசேனன் தன் மைந்தனுடைய தோளின்மீது கையைப் போட்டபடி சுரங்க வழியைக் காண்பிக்க அழைத்துப்போனான். சுரங்க வழியின் கதவைத் திறந்து இரண்டு படிகள் இறங்கியபோது தான் தாதுசேனன் சதியில் தான் சிக்கிக் கொண்டதை அறிந்தான்.

கண்வெட்டி மூடும் நேரத்துக்கு இடையில் சுரங்க வழியின் பாரமான கதவுகள் படார் என்று சாத்தப்பட்டன. வெளியில் காசியப்பனும் வசபனும் 'ஹஹ்ஹா!' என்று உரத்துச் சிரித்தார்கள். தாதுசேனன் தனது பலவீனமான கைகளால் கதவைத் தட்டித் தட்டி அலுத்துச் சுரங்கப்படிகளில் தடாரென்று விழுந்து உருண்டான்.

* * *

அரச கருமங்களுக்கு இப்போது காசியப்பனே தலைமை வகித்தான். தன் சதியைப் பொதுமக்கள் அறியாதிருக்க ஈழம் பூராவும் தாதுசேனனைக் கண்டுபிடிக்க இரகசியப்படை வீரர்களை அனுப்பினான். அவனை வசபன் நன்றாக ஆட்டிவைத்தான். அவன் இட்டதே சட்டம். அவனுக்கு வேண்டியவர்களுக்கு அமைச்சிலே இடம். வேண்டாதவர்களுக்குத் தூக்கு மேடையிலே வரவேற்பு. தன்னுடைய கொலைக் காண்டத்தை மறைக்க அரசமாளிகையை ஈழத்தின் அழகு சுந்தரிகளால் அலங்கரித்து வைத்திருந்தான் வசபன்.

இப்போது தாதுசேன மன்னனுடைய நாமமே அநுராதபுரத்தில் மறைந்து கொண்டு வந்தது. வசபன் இந்தச் சமயத்தில் தாதுசேனனைத் தொலைத்துவிட முடிவு செய்து கொண்டு விளம்பினான். சுரங்கவழியின் கதவைத் திறந்து கொண்டு காசியப்பனும் வசபனும் தாதுசேனனை நோக்கிச் சென்றார்கள். வயோதிகத்தால் தளர்ந்துபோன தாதுசேனன் வேதனையில் அடியோடு குன்றிப் போனான். பகலும் இரவுமாக இருள் கவிழ்ந்து கிடந்த அந்த அறையைப் பார்த்துப் பார்த்து அவனுடைய கண்கள் ஒளியை இழந்து விட்டன. கூட்டில் அடைக்கப்பட்ட கிழச் சிங்கத்தைப்போல் அவன் சுருண்டு கிடந்தான். அவன் கிடந்த நிலையைக் கண்டதும் காசியப்பனுடைய மனத்தில் இரக்கம் சுரந்தது. அதை வளரவிடாமல் தடுத்து முற்றுப் புள்ளி வைத்தான் வசபன்.

"மைந்தா! இது உனக்கு மகிழ்ச்சியளிக்கின்றதா?" தாதுசேனன் நாத் தழுதழுக்கக் காசியப்பனை நோக்கிக் கேட்டான். அந்த வார்த்தைகள் காசியப்பனை ஒரு உலுக்கு உலுக்கின. அவன் தலை தானாகவே பூமியை நோக்கிக் கவிழ்ந்தது.

வசபன் உரத்துச் சிரித்தான். "காசியப்பா, ஏன் யோசிக்கிறாய்! கோழைகள் உலகில் வாழ முடியாது. இத்தனை காலமும் நாம் நடத்திய இரகசிய வேலைகள் இந்த நாட்டின் மணிமுடியை உனது தலையிலே அணிவிக்க. தடுமாற்றம் தந்திரிகளினுடையது. வந்த காரியத்தை நினைத்துக் கொள்."

காசியப்பன் தன்னை மறந்து கத்தினான். "இது தான் எனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. இப்போதாவது சொல்லுங்கள், அநுராதபுரத்தின் மணிமகுடம் யாருக்குரியது!"

"நான் சொல்லாமலே அது உனக்குத் தெரிந்திருக்க வேண்டுமே......"

"உங்கள் முடிவான தீர்மானம் அதுதானா!"

"அது என் தீர்மானமல்ல. நாட்டு மக்களின் முடிவு. சந்ததி சந்ததியாக நிலவி வந்த சட்டம்."

"சட்டம்...'ஹஹ்ஹா!'" வசபன் உரத்துச் சிரித்தான். "தாங்கள் வாழ, தங்கள் சந்ததியார் தலைமுறை தலைமுறையாகச் சுகம் அனுபவிக்கச் சில சண்டாளர்கள் ஏற்படுத்திக் கொண்ட சதி.

"துரோகிகளும் சோம்பேறிகளும் உண்டாக்கிய துரோகத்தின் சின்னம். இதை வைத்துக்கொண்டு மனித உள்ளத்தையே கொலை செய்வதா! உமது உதிரத்திலே ஜெனித்த மகன் இதோ நிற்கிறான். இந்நாட்டு மக்களின் பெருமதிப்புக்குப் பெரிதும் பாத்திரமானவன். அவனுக்கு முடியை மறிப்பதில் உமது சட்டம் குறுக்கே நிற்கிறது. அந்தச் சட்டத்தைச் சிதைத்து விட்டுச் செயலாற்றுவது தான் மனித உள்ளம் படைத்தவர்களின் கடமை."

தாதுசேனன் அலட்சியமாகச் சிரித்தான். அச்சிரிப்பு வசபனையும் கொடிய மிருகங்களைவிடக் கேவல நிலைக்குக் கொண்டு வந்தது.

"வேண்டாம், அரசுரிமையை நீ மூகலானுக்கே கொடுத்து விடு. அதே சமயத்தில் நீர் தேடி வைத்துள்ள திரவியக் குவியல்களையாவது காசியப்பனுக்குக் கொடுத்து விடு!" என்றான்.

"வசபா! காசியப்பனை நன்றாக வசப்படுத்தி விட்டாய். அவனைப் பெட்டிப் பாம்பைப்போல் உன் சொல்லுக்கு ஆடும்படி பழக்கி விட்டாய்" என்றான். வார்த்தைகள் முடியும் முன்பே பலம் வாய்ந்த வசபனுடைய வலது கை தாதுசேனன் கன்னத்தில் பளீர் என்று விழுந்தது.

அதைக் காசியப்பன் பார்க்கச் சகிக்காதவனாய் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டான். எலும்புகள் விளம்பிய முகத்தைத் தடவிக் கொண்டே "என்னை அழைத்துப் போங்கள். என் திரவியக் குவியலை உங்களுக்குக் காட்டுகிறேன்" என்றான் அரசன் தாதுசேனன்.

நடக்கவும் சக்தியற்று இருந்த மன்னன் தாதுசேனன் மெள்ள மெள்ள அடியெடுத்துச் சுரங்க அறையை விட்டு வெளியே வந்தான். தாதுசேனன் பல்லக்கில் ஏற்றப்பட்டான். இரு மருங்கிலும் குதிரை மீது வசபனும் காசியப்பனும் போய்க் கொண்டிருந்தார்கள். ஆகாயத்தில் பால் நிலவு பொழிந்து கொண்டிருந்தது. நகர் பூராவும் அமைதி நிலவியது. தூரத்திலே ஊளையிடும் இரண்டொரு நரிகளின் சத்தம் இலேசாகக் காதுகளிலே விழுந்தன. அந்த அகால வேளையில் தன் கரையருகில் வந்து நின்ற மனித உருவங்களைப் பார்த்துக் காலவிபாவின் மெல்லிய அலைகள் கரையோடு ஏதோ இரகசியம் பேசின. குதிரைமீதிருந்து கீழே குதித்துப் பல்லக்கின் கதவை வசபன் திறந்து விட்டான். சுருங்கிப்போன கண்ணிமைகளை அகல விரித்துக் காலவிபாவைப் பார்த்தபடி தாதுசேனன் நின்றான். அவனுடைய கண்களிலே ஆனந்தம் பொங்கி வழிந்தது. "பாருங்கள், என் செல்வக் குவியலை. அள்ள அள்ளக் குறையாத அரும் நிதியைப் பாருங்கள். ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் லட்சோப லட்சம் மக்கள் வேண்டியளவு அள்ளிக் கொண்டு போனாலும் குறையாத திரவியத்தைப் பாருங்கள், பாருங்கள்!" என்று தாதுசேனன் உணர்ச்சியினால் உந்தப்பட்டுக் கூறினான். அமைதி

அவள் சந்தோஷ
மும் அழகும்
தேக புஷ்டியும்
பெற்று விளங்குவதற்கு
காரணம் அவள்
சாப்பிடும்



பைல் பீன்ஸ்

உயர் குணமுள்ள
பேதி மாத்திரை.

உண்மையான பைல் பீன்ஸ் மாத்திரைகள் டாக்டர்களால் அங்கீகரிக்கப்பட்டவை; உலக பிரசித்தி பெற்றவை. உங்கள் அசதிக்கும் மந்தத்திற்கும் காரணமான மலச்சிக்கலை அவை போக்கடிக்கின்றன. உங்கள் ரத்த ஓட்டத்தை சுத்தப்படுத்தி, குடலுக்கு வலுவளித்து, தேகத்திற்கு புத்துயிரூட்டி, சருமத்தையும் சுத்தப்படுத்துகிறது. பைல் பீன்ஸை தொடர்ந்து உபயோகித்தால், இளமையும் சுறுசுறுப்பும், சிறந்த ஆரோக்கியமும், கவர்ச்சியும் பொருந்தியவராக ஆகலாம். இப்பொழுதே ஆரம்பித்து பைல் பீன்ஸ் தொடர்ந்து சாப்பிடுங்கள்—வாழ்க்கையை பூரணமாக அனுபவிக்கலாம்.

FBT-11-TAM



உண்மையான

பைல் பீன்ஸ்

பார்த்து வாங்குங்கள்

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

மதராஸிற்கு சோல் ஏஜண்டுகள்: நாதா & கோ., பார்க் டவுன்.

குழந்தைகளின் வாரப் பத்திரிகை

அணில்

ஆசிரியர்: அணில்அண்ணன்

சின்னச் சின்னக் கதைகள், திடுக்கிடும் சம்பவங்கள் நிறைந்த தொடர்கதை, பெரியோர் வரலாறு, வேடிக்கை, விளையாட்டு, இவைகளுடன் திரும்பவும் டிசம்பர் மாதம் வெளிவருகிறது

இரண்டு கலரில்

விலை 1 அணா

வருட சந்தா ரூபாய் 3/-

எங்கும்

ஏஜெண்டுகள் தேவை

சக்தி காரியாலயம்

த.பெ.நெ. ௬௬௦, சென்னை-14



ரம்மியமான
நறுமணமுள்ளது
சிறியோருக்கும்
முதியோருக்கும்
ஒருங்கே ஒப்பற்றது

'ZEPHROL'

TRADE MARK BRAND

COUGH SYRUP

சக்தி, விரைவாக வேலை செய்யும் திறன், சாப்பிடுவதற்கு ருசி ஆகிய எல்லாம் சேர்ந்து "ஜெப்ராலு"க்கு நாடு முழுவதிலும் நல்ல பிரசித்தியை அளிக்கிறது.

M&B

manufactured by

MAY & BAKER LTD

distributed by: MAY & BAKER (INDIA) LTD
BOMBAY-CALCUTTA-MADRAS
NEW DELHI-GAUHATI

இன்னும் முகமூடிதான்!



பாகிஸ்தான் அரசியல் திட்டம் பல வருஷங்களுக்குப் பின்னர் ஒருவாறு உருவாகியிருக்கிறது. ஆனால் இன்னமும் பல அம்சங்கள் தெளிவாகாமலே இருக்கின்றன.

யான அந்த வேளையிலே எழுந்த அவனுடைய உணர்ச்சிகரமான குரல் வானோங்கிய மரங்களிலே மோதி அந்தக் காடு முழுவதும் எதிரொலித்தது!

தாதுசேனனுடைய வார்த்தைகள் காசியப்பனைத் தாக்கிச் சித்திரவதை செய்தன. "தந்தையே! இதுதான் நான் உங்களை அழைக்கும் கடைசிக் குரலாக இருக்கப் போகிறது. வீணான பழியை மௌரிய வம்சத்துக்கு ஏற்படுத்த வேண்டாம். கடைசியாகக் கேட்கிறேன். உம்முடைய ஆயுள் பூராவும் திரட்டிய செல்வங்கள் எங்கே சொல்லும்." காசியப்பனுடைய வார்த்தைகள் ஒவ்வொன்றும் சுளீர் சுளீர் என்று தாதுசேனனைத் தாக்கியது. அவன் தன்னை மறந்து காலவீபாவைக் கண் கொட்டாது பார்த்துக் கொண்டு நின்றான். அவனுடைய மௌனம் காசியப்பனுடைய மனத்தில் மின்னிக் கொண்டிருந்த கடைசிப் பாசத்தையும் அடித்து விரட்டியது.

"வசபா! என்னால் இங்கு நிற்க முடியவில்லை. அநுராதபுரத்தின் அரசன் நான். இதோ உன் முன்னிற்கும் குற்றவாளி ஒரு நாட்டின் மன்னனையே அவமதித்திருக்கிறான். உனக்கு இஷ்டமான தண்டனையைக் கொடு. இந்நாட்டின் உண்மை ராஜ விசுவாசிகளின் இடத்தில் உமக்குரிய பங்கைப் பெற்றுக் கொள்" என்று கூறியபடி குதிரைமீது தாவிக் காற்றாய்ப் பறந்தான் காசியப்பன்.

வசபன் படமெடுத்தாடும் கொடிய விஷப் பாம்பைப்போல் நின்று கொண்டிருந்தான். அவனைப் பார்க்கவே சக்தியற்றுப்போன தாதுசேனன் நிலத்தை நோக்கித் தலை கவிழ்ந்தான்.

"வசபா! எங்கோ மூலையில் கிடந்த உன்னை முன்னணிக்குக் கொண்டு வந்தேன். போரிலே நீ காட்டிய சாகசத்தினால் மயங்கி இந் நாட்டின் தளபதியாக உன்னை நியமித்தது மல்லாமல் என் மகளையே உனக்குத் திருமணம் செய்து வைத்தேன். அதற்குத் தகுந்த தண்டனையா, இது!"

"இல்லை; அதற்கில்லை. என்னைப் பெற்று வளர்த்த தாயை நெருப்பில் இட்டுக் கொன்றாயே, அதற்குரிய தண்டனை. ஆம்; பழிக்குப் பழி! கொதிக்கும் எரிமலையான என் உள்ளம் உம் கொலையினாலேயே குளிர் தென்றலாக மாறும்.

"சட்டத்தைக் கையிலே வைத்துக்கொண்டு என் தாயைப் பதைபதைக்கக் கொன்றாய். இன்று அதே சட்டத்தை வைத்து உன்னைக் கொலை செய்யப் போகிறேன்."

வசபனுடைய கண்கள் பசி வெறித்த வேங்கையின் விழிகளைப்போல் சுழன்றன. தாதுசேனன் தன் தவறை அப்போதுதான் எண்ணி வருத்தப் பட்டான். அவனுடைய விழிகள் கண்ணீர் உகுத்தன. அவை வசபனுடைய பார்வையினால் ஓர் நொடிக்குள் தீந்து போயின.

காலவீபாவின் கரைக் கவரிலே தாதுசேனனைக் கிடத்திக் கல்லும் சாந்தும் பூசிச் சுவர் எழுப்பினான் வசபன். தன் வாழ்நாள் பூராவும் சேகரித்த திரவியத்தைக் கொண்டு அவன் எழுப்பிய காலவீபாக் குளத்தின் கட்டுகளுக்கே அணையாகிற்று, அவனுடைய உடல். தாதுசேனனுடைய வாழ்க்கைக் கனவு வெற்றி பெற்றது, வசபனின் இந்தச் செய்கையால். அதே நேரத்தில் வசபனுடைய குறிக்கோளும் வெற்றி பெற்றது. ஆயிரத்து நூறு ஆண்டுகள் கழித்தும் தாதுசேனன் கட்டி யெழுப்பிய காலவீபா இன்னும் ஈழத்து மக்களுக்கு நீரளித்து நெற்களஞ்சியங்கள் உருவாக்கிக் கொடுத்துக் கொண்டிருக்கிறது.

யோகாசன சிகிச்சை

வி. என். குமாரசாமி

9. உணவின் உண்மை

உணவு என்றால் என்ன ! சாப்பிடக்கூடியதெல்லாம் உணவு ஆகுமா ! வாய்க்கு ருசித்ததெல்லாம் உணவாகுமா ! கவர்ச்சிகரமாய் இனிப்புடன் கூடியதெல்லாம் உணவாகுமா !

மோட்டார்கார் இருக்கிறது. அதை ஓட்டப் பெட்ரோல் ஊற்றுகின்றோம். ரயில் ஓட நிலக்கரி வேண்டும். அரிக்கேன் விளக்கிற்கு மண்ணெண்ணெய் தேவை. குத்து விளக்கிற்கு விளக்கெண்ணெய் வேண்டும். பெட்ரோலும் நிலக்கரியும் எரியும் பொருள்தானே என்று காருக்கு நிலக்கரி போடலாமா ! ரயிலுக்குப் பெட்ரோல் ஊற்றி ஓட்ட முடியுமா ! இரண்டின் அமைப்பும் வேறு. அதைப்போலத் தேவையும் வேறு. சரி. அரிக்கேன் விளக்கை எடுத்துக் கொள்ளுவோம். மண்ணெண்ணெயிலிருந்து சுத்தப்படுத்தினது தானே பெட்ரோல் என்று பெட்ரோலை அரிக்கன் விளக்கிற்குப் போட முடியுமா ! குத்து விளக்கிற்கு விளக்கெண்ணெய்க்குப் பதில் தேங்கா எண்ணெய், நல்லெண்ணெய் போன்ற சாதாரண எண்ணெய்களைப் போடலாமே தவிர, பெட்ரோலையோ, மண்ணெண்ணெயையோ போடுவார்களா ! ஒரேயடியாக எரிந்து புகைத்து தீர்ந்து விடுமல்லவா !

எனவே அதற்குத் தகுந்த அமைப்பிற்குத் தக்கபடி எது உபயோகிக்க வேண்டும், எது கூடாது என்று இருக்கின்றது. அப்படியில்லாமல் ஒன்றை மாற்றி ஒன்றை உபயோகித்தால் ஒன்று பொருள் நஷ்டமாகும். அல்லது யந்திரமே நஷ்டமாகும். வேலை நடவாது.

அதைப் போலத்தான் உடலும். உடலும் ஒரு யந்திரப் பொறியே. மகா அற்புதமான யந்திரம். அதை இயக்குவதற்கு நீண்டகாலம் பழுதேற்படாமல் உழைப்பதற்கு, எந்தப் பொருள், எந்த அளவில் தேவை யென்பதெல்லாம் முதலில் தெரிய வேண்டும். தவிர, யந்திரம் பழுதானால் பழுதான உறுப்புகளுக்கு மாற்று செய்து போட்டு விடலாம். அல்லது புதிய யந்திரத்தையே சிருஷ்டித்து விடலாம். மனிதனை சிருஷ்டிக்க முடியுமா !

விஞ்ஞானத்தில் புதிதாய்க் கண்டு பிடிப்பு என்பது இடையாது. இயற்கை சிலது நமது கண்ணுக்குத் தெரியும் வண்ணம் செயல் புரிகின்றது. சில நமது கண்ணுக்கும் தெரியாத அணுக்களாய் இருந்து செயல் புரிகின்றது. அப்படியிருக்கும் நுண் அணுக்களின் சக்தியைத் திரட்டி விஞ்ஞானம் வெளிக் கொணருகின்றதே அல்லாமல் இல்லாததைப் புதிதாய் ஒன்றையும் செய்துவிட முடியாது. அணுக்களின் சேர்க்கையினால் விளையும் விநோதங்கள் விசித்திரக் கதைகளாகும்.

உடலும் பல உயிரணுக்களால் ஆனது. பலவித ரசாயனப் பொருள்களின் சேர்க்கையே உடல். இவ்வுடலில் ஒவ்வொரு விநாடியும் உயிரணுக்கள் குறைந்து கொண்டும், தேய்ந்து கொண்டும் இருக்கின்றன. இக்குறைவை, தேய்வை நிரப்பத்தான் நாம் உணவு உட்கொள்ளுகிறோம். உணவின் மூலம் நமக்கு வேண்டிய சக்தியையும் அடைகிறோம்.

நாம் உட்கொள்ளும் உணவை ஏழு வகையாகப் பிரிக்கலாம். 1. புரதம். 2. கொழுப்பு. 3. கரிநீரகை. 4. கனியங்கள். 5. ஜீவசத்துக்கள். 6. நீர் 7. நார் சத்து.

புரதப் பொருளானது தசைகளை வளர்க்கவும், தேய்ந்த பாகங்களைப் பழுது பார்க்கவும் உதவுகின்றது. கொழுப்பு குளிர் முதலியவைகளிலிருந்து உடலின் உஷ்ணத்தைக் காப்பாற்றுகின்றது. கரிநீரகை ஆகிய சர்க்கரைச் சத்து உடலுக்குச் சக்தியைக் கொடுத்து உழைக்கச் செய்கின்றது. கனியங்கள் பற்கள் எலும்புகள் உறுதியாய் வளரவும் இருதயம் பலமாக்கவும், சிக்கலான ரசாயன மாறுதல்களையும் செய்கின்றது. வைடமின்கள் சில உறுப்புகளின் செயல்களை நிர்ணயிப்பதுடன் ரசாயன மாறுதல்களை உடல் தொழிலுக்குத் தக்கபடி குறைக்கவும் கூட்டவும் செய்கின்றது. நீர் இந்தச் சத்துக்களின் வேலைகளைச் சுலபமாக்குகின்றது. நார்ச் சத்து மலம் போன்ற கழிவுகளை அப்புறப்படுத்த உதவுகிறது.

இவைகளில் மற்றெல்லா வற்றையும் விடப் புரதப் பொருள்தான் மிக முக்கியமான பங்கு வகிக்கின்றது. ஆனால் இதனுடன் மற்ற எல்லா வகைச் சத்துக்களும் ஓரளவு சரியாகச் சேர்ந்த உணவுத் திட்டத்தை நாம் அமைத்துக் கொள்ள வேண்டும். அவைகளை எப்படிக் கண்டறிவது ! ஒவ்வொன்றிலும் என்னென்ன சத்து எவ்வளவு இருக்கிறது! எவ்வளவு தேவை, வேளா வேளைக்குக் கழித்துக் கூட்டிக் கணக்குப் பார்த்து உண்ண முடியுமா ! இது ஒரு பெரிய பிரச்னைதான். அவ்வளவு கணக்காய்ப் பார்த்து முடியாததுதான். ஆனாலும் ஓரளவு கூடுமானவரை அனுசரிக்கலாமல்லவா !

உணவுத் திட்டத்தில் இரண்டு வகைப்படும். மாமிசம் கலந்த உணவு ; காய்கறி உணவு. இதில் மாமிசம் சாப்பிடுகிறவர்களுக்குப் புரதப் பொருள் வெகு சுலபமாய்க் கிடைத்து விடுகிறது. ஆனால் காய்கறி சாப்பிடுகிறவர்களுக்கு அக் குறைவைப் பூர்த்தி செய்ய என்ன செய்ய முடியும் ! அதற்குத்

● ● ● ● ● ● ● ● ● ● ●

சேலம் தேசபக்தர் பிரிவு

சங்கீத வித்வான் சேலம் ஸ்ரீ தேசிகன் அவர்களின் தந்தையும் தீவிர காங்கிரஸ் பக்தரான சேலம் வக்கீல் டி. எஸ். கோபாலாச்சாரியார் அவர்கள் 4–11–53 புதன் கிழமை இரவு இறைவனடி சேர்ந்தார். 1920-21–ம் வருடத்திய ஒத்துழையாமைப் போராட்டத்தின்போது நல்ல வருவாயுள்ள தனது வக்கீல் தொழிலைத் தியாகம் செய்து சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் மற்றும் பல வக்கீல்களுடன் தாமும் ஒருவராக, அவ் வேள்வித் தீயில் குதித்தார். பிறகு 'தமிழ் நாடு'' என்னும் தேசிய பத்திரிகையின் ஆசிரியராகச் சிறிது காலம் தொண்டு புரிந்தார். பிறகு உடல் நலம் குன்றியதின் காரணமாக மேலும் தேசத் தொண்டு புரிய முடியாமல் போயிற்று. சிறந்த காந்தி பக்தரான அவர், அம் மஹாத்மாவின் உபதேசங்கள் யாவற்றையும் தன் வாழ்நாளில் கடைப் பிடித்தொழுகி வந்தார். நல்ல சங்கீத ரஸிகரான அவர் சங்கீத போஷகராகவும் இருந்து வந்தார். கடந்த சில வருடங்களாக நோய்வாய்ப்பட்டு இருந்து தமது 65 வது வயதில், தம் மனைவியையும், இரு பெண்கள், இரு புத்திரர்களையும் சோகத்தில் ஆழ்த்தி விட்டு, மீளாத் துயிலில் ஆழ்ந்தார். சாந்தி ! சாந்தி !

● ● ● ● ● ● ● ● ● ● ●

மதிப்பு உயர்ந்தது!

நானும் என் கணவரும் "எத்தியோப்பியா கல்வி இலாகா"வால் அழைக்கப்பட்டு ஆடிஸ் அபேபாவில் ஐந்தாறு வருடங்களாகப் பள்ளிக்கூடங்களில் உழைத்து வருகிறோம். நான் ஒரு பெண்கள் பள்ளியில் வேலை பார்க்கிறேன்.

சர்வதேச மன்ற விழாவின்போது எங்கள் பள்ளியில் விழாவை இனிதாகக் கொண்டாடினோம். எங்கள் தலைமை உபாத்யாயினி ஒரு அமெரிக்கப் பெண். என்னோடு உழைக்கும் நாலைந்து வெள்ளைக்கார உபாத்யாயினிகளும் அன்று விழாவுக்கு வந்திருந்தனர். தலைமை வகித்த அமெரிக்கப் பெண் பேசுகையில், "சர்வதேச மன்றத்தின் பிரஸிடெண்ட் ஒரு இந்தியப் பெண். இதுவே முதன் முறையாக ஒரு பெண் அந்தப் பதவி வகிக்கின்றாள். அவள் பெயர் விஜய லட்சுமி பண்டிட்" என்று பாராட்டுகையில் அத்தனை மாணவிகளும் உபாத்யாயினிகளும் என்னை நோக்கினர். அங்கு இந்தியப் பெண்ணாக நான் ஒருத்தியே இருந்தமையால் அவர்கள் என்னை அவ்விதம் நோக்கினர். அப்பொழுது நானடைந்த பூரிப்பும் கர்வமும் இம்மட்டல்ல! இந்தியாவின் உயர்வை மற்ற நாட்டார் உணர்ந்து விட்டனர் என்ற உண்மை எனக்கு அன்று தெரிந்தது.

அதன் பிறகு நான் ஒரு சிறு சொற்பொழிவாற்றினேன். இந்தியப் பாட லொன்று நான் பாட வேண்டுமென்று வற்புறுத்தப் பட்டதின் பேரில் ஒரு பாட்டும் பாடினேன். நான் ஒரு 'பாடகி' அல்ல எனினும் என் பாட்டைக் கேட்டு வெள்ளைக்காரர் உட்பட அனைவரும் வியப்படைந்தனர். இந்தியப் பாடலுக்கு இனிமையும் உணர்ச்சியுமுண்டு என்பதை அன்று அவர்கள் அறிந்தனர்! அன்று பல தேசப்பாடல்களிருந்த போதிலும் இந்தியப் பாடலே சகலவற்றையும் வென்று விட்டதென்பதை மகிழ்வுடன் அறிவிக்கிறேன்.

இன்னொன்று இந்தியப் பெண்களின் புடவையின் சிறப்பும் வாழ்க்கையின் சிறப்பும் இத் தேச மக்கள் மனத்தைக் கவர்ந்து விட்டன.

ஆடிஸ் அபேபா
30—10—53

கமலோசனு ஜஸ்டின்

தான் காமதேனுவாகிய பால் இருக்கிறது. பால் ஒரு சிறந்த பூரண உணவு. மாமிசம் உண்ணாதவர்கள், பாலையும், பாலைச் சேர்ந்த பண்டங்களையும் தாராளமாய்ச் சேர்ப்பார்களானால் அவர்களை விட மிகச் சிறந்த புரதத்தை அடைவார்கள்.

இப் புரதப் பொருள் மாமிசம் பாலில் மட்டும் இருப்பதாக நினைக்க வேண்டாம். இவைகளில் விசேஷமாக இருக்கிறது. மற்றும் பருப்புகள், தானியங்கள், கொட்டைகள். கோதுமை, அரிசி, முட்டை, எண்ணெய்ப் பண்டங்கள் இவைகள் அத்தனையிலும் இருக்கிறது. ஆனால் இவைகளை உபயோகிக்கும் விதத்தில்தான் நாம் அப்பொருளின் பயனை முற்றிலும் அடைவதும் அடையாமல் கஷ்டமாவதும் இருக்கிறது.

பால் ஒரு சிறந்த ஆகாரம் என்று சொன்னேன். இதற்கு உதாரணமாகக் கூனூர் ஆராய்ச்சி நிலையத்தார்களே வெளியிட்டிருக்கிறார்கள். இதற்கு அந்த வெள்ளை எலிகளைக் கொண்டே ஆராய்ந்திருக்கிறார்கள். மூன்று கூட்ட எலிகள். முதல் கூட்டத்துக்கு வெறும் காய்கறிகள் மட்டும் போடப் பட்டன. இரண்டாவது கூட்டத்துக்குப் பாலும் மாவசத்தும் போடப்பட்டன. மூன்றாவது கூட்டத்துக்குப் பாலும் காய்கறிகளும் போடப் பட்டன. முதல் கூட்டம் அவ்வளவு நன்றாக வளரவில்லை. தலைமுறைக்குத் தலைமுறை வளர்ச்சி குறைந்தன. சக்தியில்லாமல் பெயரளவுக்கு வாழ்ந்தன. இரண்டாவது கூட்டம் நல்ல வளர்ச்சி அடைந்தன. அதன் குட்டிகளும் நன்கு வளர்ந்தன. மூன்றாவது கூட்டம் இரண்டாவது கூட்டத்தை விடச் சிறப்பாய் வளர்ந்தன. மாமிசம் சாப்பிட்ட எலிகளை விட வளர்ச்சியிலும், பலத்திலும் குறைந்திருக்கவில்லை. இதைவிட அத்தாட்சி வேறு என்ன வேண்டும்!

முட்டையை மரக்கறியோடு சேர்ப்பதா! மாமிசத்தோடு சேர்ப்பதா என்ற பெரிய பிரச்னையுள்ளது. தற்காலத்தில் மரக்கறிகளோடு முட்டையைச் சேர்த்திருந்தாலும். யோக சாஸ்திரத்தில் முட்டையை விலக்கித்தான் இருக்கிறது. முட்டையை இஷ்டமானால், சேர்த்துக் கொள்ளலாம். கட்டாயமில்லை. இந்தக் காலத்தில் அசல் மரக்கறி உணவையே சாப்பிடுகிறவர்களுக்கு ஏதாவது நோய் வந்தால் மருந்தைச் சாப்பிடத்தான் செய்வார்கள். டானிக்குகளை உபயோகிக்கத்தான் செய்வார்கள். அவைகளில் மாட்டின் கல்லீரல் சத்து, கரு மீனின் கல்லீரல் சத்து, காட் மீனின் கல்லீரல் சத்து முதலியன இருந்தால் சாப்பிடத்தானே செய்கிறார்கள்! தைராய்ட் குறைவுள்ளவர்களுக்கு ஆட்டின் தைராய்ட் மாட்டின் தைராய்ட், குரங்கின் தைராய்ட் முதலிய கோளங்களிலிருந்து எடுத்துத்தானே கொடுக்கிறார்கள்! சாப்பிடுகிறவர்களுக்கு இதெல்லாம் தெரியாது. ஓவல் டின்னில் வாத்து முட்டை சேர்ந்திருக்கிறது என்பதைப் பலர் அறியார்கள். மற்றும் பிஸ்கட்டுகள், சாக்லெட்டுகள், கிரீம்கள் இவைகளில் முட்டை கலந்திருக்கின்றது என்பது தெரியுமா! எப்படியோ அறியாமல் எந்த விதத்திலோ சாப்பிட்டு விடுகிறோம்.

எனவே மாமிசம் சாப்பிடலாம் என்று சொல்ல வரவில்லை. இவைகளிலெல்லாம் கூட இருப்பதை அறியாமல் சாப்பிட்டு விடுகிறோம். எனவே ஜாக்கிரதையாய் இவைகளை விலக்கியிருக்க வேண்டுமானால் பால் நிறையக் கூடுமானவரை அவரவர்களின் சக்திக்கு ஒப்ப நிறையச் சேர்க்க வேண்டுமென்பதைத் தான் சொல்ல வந்தேன்.

பூர்ண ஆரோக்கியமாய் வாழ்வதற்கும் வெறும் உயிரைச் சுமந்து வாழ்வதற்கும் வித்தியாசம் உண்டல்லவா! பால் நிறையச் சேர்த்தால், அதனுடன் யோகாசனங்களையும் செய்தால் பூர்ண ஆரோக்கியமாய் இருக்கலாம். பால் இல்லாமல் வெறும் ஆசனங்களால் மட்டும் பூர்ண ஆரோக்கியம் அடைய முடியாது.

பாலுக்கு அடுத்தபடியாக நமக்கு முக்கியமானது அரிசி, கோதுமை தானியங்கள் முதலியன. இவைகளைத் தவிட்டை நீக்காமல் அப்படியே உபயோகிக்க வேண்டும். கனியிலும் அதன் சத்தாகிய உயிராகிய தவிட்டை நீக்க நினைக்கக் கூடாது. அப்படியே நீக்கினால் புரதப் பொருள் நீங்கினதாகும். வெறும் மாவு சக்கைதான் நிற்கும். அதை உண்பதால் வியாதிகள் வருமே தவிர ஆரோக்கியம் உண்டாகாது. அரிசியின் தவிட்டை நீக்காமல் ஒரு தடவை மட்டும் லேசாய்க் கழுவி, கஞ்சி வடிக்காமல் ஆவியில் வேக வைக்க வேண்டும். கோதுமையின் மாவைச் சலித்துத் தவிட்டை எடுத்து விடக் கூடாது. கோதுமையைக் குத்தித் தவிட்டை நீக்கக் கூடாது. மற்ற தானியங்களையும் கூடுமானவரையில் முழுசாய் அவ்வப்போது உபயோகிக்க வேண்டும். (தொடரும்)

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
No 20, Dr. Guruswamy Mudaliar Road, Kilpauk, Madras-10


நாளுக்கு நாள்
அதிக தெளிவான
எழிலோங்கும் சருமம்
ரெக்ஸோனுவிலுள்ள கேடில் இந்த அற்புத
வேலையைச் செய்யட்டும்
ரெக்ஸோனுவின் கேடில் கலந்த நுரையை உங்கள் சருமத்தில் மெதுவாகத்தேய்த்து, பிறகு கழுவுங்கள். உங்கள் சருமம் நாளுக்கு நாள் அதிக மழமழப்பும் தெளிவும் பெறுவதைக் காண்பீர்கள்.
Rexona
ரெக்ஸோனு
கேடில்* கலந்த சோப் இது ஒன்றே
* சருமத்திற்கு நாட்டமளித்து மிருதுவாக்கும் எண்ணெய்களின் பிரத்தியேகக் கலவையின் ரெஜிஸ்டர் செய்யப்பட்ட பெயர்.
RP 107-50 TM
ரெக்ஸோனு ப்ரொப்ரைட்டரி லிமிடெடுக்காக இந்தியாவில் தயாரித்தது.

REGD. No. M 4392

Registered as a newspapers in Ceylon